सत्यमेव जयते
RAJ NIVAS
PUDUCHERRY

75 Azadi Ka Amrit Mahotsav



சித்தர்கள் 75

டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன்
தெலங்கானா ஆளுநர் & புதுச்சேரி துணைநிலை ஆளுநர்





சித்தர்கள் 75

டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன்

தெலங்கானா ஆளுநர் & புதுச்சேரி துணைநிலை ஆளுநர்



முன்னுரை

உலகில் மனிதகுலம் ஆரோக்கியமாக வாழ்வதற்காக தங்களையே அர்ப்பணித்தவர்கள் சித்தர்கள். ஒவ்வொரு சித்தரும் பலகலைகளில் நிபுணத்துவம் பெற்று மக்கள் நலமுடன் வாழ அருள் புரிந்திருக்கிறார்கள்.

சித்த மருத்துவம், தவ வலிமை, யோகா போன்ற ஒழுக்கம் நிறைந்த கலைகளில் நிபுணத்துவம் பெற்றவர்கள் சித்தர்கள்.

புதுச்சேரி புண்ணியம் செய்த பூமி. இங்கு அகத்தியர் வேதபாடசாலை அமைத்து மக்கள் அமைதியோடும் ஆனந்தத்தோடும் வாழ வேத ஒலியைப் பரப்பினார்.

புதுச்சேரியில் 50-க்கும் மேற்பட்ட ஆத்மஞானிகள் உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் இங்கு வந்து கடும் தவம் மேற்கொண்டு, இறை தரிசனம் பெற்று இறைவனோடு ஐக்கியமாகி விட்டார்கள்.

சித்தர்கள் ஜீவசமாதி அடைந்த இடத்தில் பெரும்பாலும் கோயில்கள் அமைந்துள்ளன. அவை இன்றளவும் புகழ்பெற்று விளங்குகின்றன. அங்கு சென்று வழிபட்டால் நமது துன்பங்களுக்கு நல்ல நிவாரணம் கிட்டும் என்பது ஐதீகம்.

நமது பாரத தேசம் சுதந்திரம் அடைந்த 75வது ஆண்டு விழாவினை கொண்டாடும் இந்த வேளையில் புதுச்சேரி மற்றும் அதை சுற்றியுள்ள இடங்களில் ஜீவசமாதி அமைந்துள்ள 75 சித்தர்கள், மகான்களின் வாழ்க்கை வரலாறு அற்புதங்களை விவரிக்கும் ஆன்மீக நூல் வெளியிடப்படுகிறது. சித்தர் பெருமக்கள் சித்தியடைந்த திருத்தலங்களுக்குச் சென்று வழிபட்டு நலமுடன் வாழ்வோம். என்றும் நம் வாழ்வில் வளங்கள் நல்கும் சித்தர்களை தாழ்பணிந்து சிறப்புக்கள் பல அடைவோம். தகவல் கொடுத்து உதவிய சுவாமி ஓங்காரனந்தா, குடந்தை எழுத்தாளர் சரவணன் ஆகியோருக்கு நன்றி.

–டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன்

பொருளடக்கம்

			பக்கம்
1.	கழுவெளி சித்தர்	...	01
2.	ஞானகுரு குள்ளச் சுவாமிகள்	...	07
3.	சித்தானந்த சுவாமிகள்	...	11
4.	ராம் பரதேசி சுவாமிகள்	...	16
5.	தொள்ளைக்காது சுவாமிகள்	...	21
6.	மாதாஜி சித்தர்	...	25
7.	கதிர்வேல் சுவாமிகள்	...	31
8.	தயானந்த சுவாமிகள்	...	33
9.	கோவிந்த சுவாமிகள்	...	36
10.	மண்ணுருட்டி சுவாமிகள்	...	38
11.	சட்டி சுவாமிகள்	...	41
12.	லட்சுமண சுவாமிகள்	...	43
13.	வேதாநந்தா சுவாமிகள்	...	46
14.	பெரியவர்களுக்கு பெரியவர்	...	48
15.	சிவஞான பாலசித்தர்	...	49

பக்கம்

16. சிவஞான பாலைய சுவாமிகள் ... 51
17. சிவப்பிரகாச சுவாமிகள் ... 54
18. கம்பளி ஞான தேசிக சுவாமிகள் ... 58
19. பகவந்த் சுவாமிகள் ... 62
20. சாந்தாநந்த சுவாமிகள் ... 64
21. நாகலிங்க சுவாமிகள் ... 66
22. அழகர் சித்தர் சுவாமிகள் ... 68
23. சக்திவேல் பரமானந்த குரு ... 71
24. மௌலா சாஹிப் மெய்ஞானி ... 73
25. அக்கா சுவாமிகள் ... 76
26. மகான் படேசாயபு ... 79
27. அரவிந்தர் ... 82
28. அன்னை ... 86
29. ஆட்கொண்டார் சாமி ... 90
30. பாலயோகி ராமதாஸ் சுவாமிகள் ... 92
31. சுடுகாட்டுச் சாமி ... 93
32. 63 சித்தர்கள் ஜீவசமாதி ... 95
33. பானிப்பட் சுவாமிகள் ... 99
34. மவுன குரு சுவாமிகள் ... 103
35. நாராயணசாமி சித்தர் ... 108
36. ஹரித்துவாரமங்களத்து சித்தர்கள் ... 112
37. அழுகுணிச் சித்தர் ... 116
38. மலைப் பெருமாள் சுவாமிகள் ... 120
39. உரிகட்டி சுவாமிகள் ... 124
40. திருக்களர் ஆண்டவர் ... 128

பக்கம்

65.	பால் சுவாமிகள்	...	207
66.	சுடுகாட்டுச் சுவாமிகள்	...	209
67.	ரோட்டு சுவாமிகள்	...	211
68.	யோக அபிராமி அம்மையார்	...	213
69.	சங்கரானந்த சுவாமிகள்	...	215
70.	இராமானந்த சுவாமிகள்	...	217
71.	மகா சித்தர்	...	219
72.	பாப்பையா சுவாமிகள்	...	223
73.	ஆலங்குடி சுவாமிகள்	...	225
74.	திருமாளிகைத்தேவர்	...	227
75.	திருமூலர்	...	228



1. கழுவெளி சித்தர்

எல்லோரும் அமரநிலை எய்தும் உன்னத நிலையை இந்தியா உலகிற்களிக்கும் என்று பாடினான் பாரதி.

உலகிற்கே ஞான குருவாக விளங்குவது பாரதமே! அதில் ஞான பூமியாக திகழ்வது புதுச்சேரி

எத்தலம் சென்றிட்டாலும் எத்தீர்த்தம் ஆடிட்டாலும் இந்த சித்தர் வாழ் புதுவைபோல் சிறந்தது ஒன்றுமில்லை கண்டீர்

முத்தியும் உதவும் ஞானம்
முப்பொருள் தன்னையும் ஈந்து
சித்தனே வந்து இங்கு
சிவகதி அடைந்தார் அன்றோ!

-தனிப்பாடல்

இது மண்ணன்று. ஞானமண். இந்த மண் சாரத்தில் தோன்றுவதெல்லாம் ஞான விருட்சம்.

இத்தனை சிறப்பு வாய்ந்த புதுவையிலும் அதனைச் சுற்றிலும் நூற்றுக்கும் மேற்பட்ட ஆத்ம ஞானிகள்

தன்னுடைய பேரொளியால் முழுமையான ஆத்மஞானம் பெற்று சமாதி நிலையில் அனைத்து மக்களுக்கும் அருளாசி வழங்கி கொண்டு இருக்கிறார்கள். அவர்களில் மகத்துவமிக்க மகாசித்தர் ஸ்ரீ கழுவெளி சித்தர். இரும்பை மாகாளம் என்ற சிற்றூர் புதுவைக்கு மேற்கே 10 கி.மீ. தொலைவில் உள்ளது. இங்குள்ள மாகாளீசுவரர் ஆலயம் மிகவும் உன்னத நிலையில் கலைநுணுக்கத்துடனும், ஆகம விதிகள் முறைப்படியும் கட்டப்பட்டுள்ளது. கோயிலில் குடி கொண்டிருக்கும் இறைவனின் பெயர் ஸ்ரீ மாகாளீசுவரர் தேவியின் திருநாமம் ஸ்ரீ குயில்மொழி அம்மாள் திருஞான சம்பந்தர் மாகாளீசுவரர் பேரில் பதிகங்கள் பாடியுள்ளார்.

தல வரலாறு :

இரும்பை மாகாளத்தை ஒரு சிற்றரசன் கி.பி. 1207ல் அதன் அருகே உள்ள கோட்டக்கரையிலிருந்து ஆட்சி செய்து வந்தான். அப்போது, இரும்பையும், அதைச் சுற்றியுள்ள பல நூற்றுக்கணக்கான கிராமங்களிலும் கடும் வறட்சி நிலவியது. பலகாலம் மழையின்றி மக்கள் எல்லாம் இன்னலுற்றனர். மக்கள் மன்னனிடம் தினமும் முறையிடும் வண்ணமாகவேயிருந்தனர். ஒருநாள் அரசன் அவையைக் கூட்டினான். அமைச்சர்கள், ஜோதிடர்கள், சான்றோர்கள், புலவர்கள் அவையில் இருந்தனர். மன்னன் நாட்டின் நிலையை எடுத்துக்கூறி அவற்றிற்குப் பரிகாரம் காணச் சபையினருடன் ஆலோசித்தான். நீண்ட நேர விவாதத்திற்குப் பிறகு சபை ஒரு முடிவிற்கு வந்தது. அதாவது இரும்பை

கழுவெளி சித்தர்



மாகாளீசுவரர் ஆலயத்திற்கு அருகே உள்ள ஆலமரத்தடியில் சித்தர் ஒருவர் பன்னெடுங்காலமாகத் தவத்தில் ஆழ்ந்திருக்கின்றார். அவரின் கடுமையான தவக்கனல்தான் இத்தகைய கொடிய வெப்பத்திற்குக் காரணம் என்று முடிவு கட்டினார்கள். ஆகவே, அமைச்சர்கள், அரண்மனை தேவதாசி வள்ளி என்பவளை அழைத்து சித்தரின் உள்ளாழ்ந்த தவத்தைக் கலைக்க வேண்டுமென்று கட்டளையிட்டனர்.

வள்ளி தினந்தோறும் ஆலமரத்தின் பழுப்புகளைப் பொறுக்கி அதில் உப்பு, காரம் இவைகளைச் சேர்த்த காலையிலும், மாலையிலும் சித்தரின் அருகே சென்று காற்றில் அவைகளைத் தூவி வந்தாள். இப்படி பல நாட்கள் செய்தாள், வள்ளி தூவிய இலைகள் சித்தரின் உதட்டிலும், வாயிலும் பட்டுக்கொண்டிருந்தன. அதன் கார சாரம் வாயினுள் கலந்து ரத்தத்தினுள் கலந்து இறை குணமான நிர்க்குணத்திலிருந்து சித்தர் சத்துவ குணத்திற்கு வந்தார். உலகியல் விழிப்பு நிலைக்கு வந்தார் மாகாளீசுவரர் ஆலயத்தைப் பார்த்தார். இறைவனை வணங்கினார். வள்ளி புலன்கள் ஒடுங்கத் தரையில் விழுந்து சித்தரை வணங்கினாள். பின் எழுந்து நாட்டின் நிலையை முறையாக விளக்கினாள். கேட்டுக்கொண்டிருந்த முனிவர் மீண்டும் நிஷ்டையில் ஆழ்ந்தார். அன்றிலிருந்து தினமும் சித்தரை சுற்றி வணங்குவதை வள்ளி வழக்கப்படுத்திக்கொண்டார். அன்றிலிருந்து தெய்வகுணம் நிரம்பிய தெய்வப் பெண்ணாக மாறினாள்.

ஒருநாள் மாகாளீசுவரர் ஆலயத்திற்கு அரசனும், அமைச்சர்களும் வந்தனர் அன்று சிவனுக்குச் சிறப்பு பூஜை நடைபெறும் திருநாள். அவையில் வள்ளி நடமாடும் முறை. முன்னரே வள்ளி சித்தரை அணுகிக் கோவிலுக்கு வந்து தன் நடனத்தைக் காண வேண்டுமென்று மண்டியிட்டு வேண்டினாள். சித்தரும் வந்தார். வள்ளி நடனமாட ஆரம்பித்தாள். கடவுள் வணக்கம், குரு வணக்கங்களை முடித்து, ஈஸ்வரனின் ஆனந்த தாண்டவம் ஆட ஆரம்பித்தாள். வள்ளி தான் பெண் என்பதை மறந்து, தன்னை இறைவனாகப் பாவித்து ஆடுகிறாள். கால்களும், கைகளும் மின்னல் வேகத்தில் செயல்பட்டன. ஆனந்தத் தாண்டவத்தின் இறுதி அங்க அசைவாக பாதங்களை உயரத் தூக்கித் தூக்கி ஆடினாள். அப்போது இடது காலைத் தூக்கும்போது வள்ளியின் கால் சலங்கை டக்கென்று அறுந்து கீழே விழுந்துவிட்டது. வள்ளிக்கு சிக்கலான சம்பவம் ஏற்பட்டதைக் கண்ட சித்தர் உடனே எழுந்து அறுந்து கிடந்த சலங்கையை எடுத்து வள்ளியின் காலில் கட்டினார். சித்தரின் இச்செயலைக் கண்ட சபையோர்கள் நகைத்தனர். கைதட்டி ஏளனம் செய்தனர். எள்ளி நகையாடினர். சித்தர் பெருமானுக்கு சினம் வந்தது. அவர் மனதை வென்றவர். ஆகவே, கோபம் மனத்திலிலுருந்து வரவில்லை. கோபம் வந்தவுடன் மகரிஷி மன்னனைப் பார்க்கவில்லை. மகேஸ்வரனைப் பார்த்தார். நீ இருந்துமா இந்நிலை என்றார். கல்லும் பிளந்து கழுவெளியாகக் கடவது என்று சிவலிங்கத்தைப் பார்த்து சாபமிட்டார். உடனே

மாகாளீசுவரலிங்கம் மூன்று துண்டுகளாக வெடித்து தொலைதூரத்தில் போய்விழுந்தனர்.

அரசன், அவையோர் அலறினார்கள், நடுங்கினார்கள். கண்ணீர் விட்டனர். ஆத்ம ஞானியின் காலடியில் அரசன் முதல் ஆண்டி வரை அனைவரும் வீழ்ந்து கிடந்தனர். துறவிக்கு வேந்தனும் துரும்புத்தானே மீண்டும் சித்தர் இறைவனை நோக்கிபாட மூன்று துண்டுகளாகப் பிளவுப்பட்டு விழுந்து பாணத்தின் துண்டுகள் மீண்டும் வந்து கூடின. சிவலிங்கத்தின் பாணம் உடைந்து கூடியிருப்பதை இன்றும் எல்லோரும் பார்க்கலாம். அன்றிலிருந்து இரும்பையைச் சுற்றியுள்ள ஐந்தாறு மைல்கள் விளைச்சலுக்குத் தகுதியற்ற நிலமாக மாறிவிட்டது.

பக்கத்திலுள்ள வெளிக்கு கழுவெளி என்று பெயர். ஆகவே, இவருக்கு கழுவெளி சித்தர் என்று பெயர் வந்தது. மாமுனியின் சாபம் மாமுடிதரித்த மன்னனையும் மண்ணில் வீழ்த்தும் ஆற்றல் படைத்தது என்பதை உணர்த்தவே மாகாளீசுவரர் இந்நிகழ்வை ஏற்படுத்தினார் போலும். சித்தர் மறைந்தார். வள்ளி மூன்றாம் நாள் சமாதி அடைந்தாள்.

2. ஞானகுரு குள்ளச் சுவாமிகள்

முக்தி எனும் வானகத்தே பரிதியாகி வானகத்தை வையகத்தில் காட்டும் சாமியே குள்ளச்சுவாமிகள். புதுவை நகரில் சுமார் 15 ஆண்டுகள் நடமாடி வந்துள்ளார். இவர் ஞான தேசிகன் மாங்கொட்டைச்சாமி, மூட்டைத் தூக்கி சுவாமி என்று பெயர்களால் அழைக்கப்பட்டார். குள்ளச்சாமிகள் அனைத்தையும் அறியும் பேராற்றல் கொண்ட சித்தர். ஊர் பெயர் எதுவும் தெரியவில்லை. உற்றார்,

பெற்றோர் பற்றி எதுவும் அறிய முடியவில்லை. சுவாமிகள் ஆத்மஞானிகளுக்குத் தீபச்சுடராய் விளங்கினார். ஆத்மஞானிகளின் சாதனையில் தோன்றும் சிக்கலை நீக்கி, குழப்பத்தைப் போக்கி நல்வழி காட்டியுள்ளார். எங்கேயோ பிறந்தவரை புதுவை மாநகர் தன்னின் ஆன்மீக காந்த சக்தியால் இழுத்தது. சுவாமிகள் இறையருட் காட்சியைக் கண்டது புதுவையில்! சுவாமிகள் இறைவனோடு கலந்ததும் புதுவையில்!

பாரதியாரும் குள்ளச்சுவாமிகளும் :

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் குள்ளச் சுவாமிகளைப் பலமுறை தரிசனம் செய்துள்ளார். சுவாமிகளின் அற்புதப் பேரருள் ஆற்றலைத் தெள்ளத் தெளிவாகவும், நுணுக்கமாகவும் அனுபவ பூர்வமாகவும் அறிந்தவர் சுவாமிகளிடம் உபதேசமும் பெற்றுள்ளார்.

தெளிந்த ஞானி-பாசத்தை அறுத்து விட்டவர் பயத்தை சுட்டு விட்டவர், நாசத்தை அழித்து விட்டவர், எமனை வென்றவர். பாவனையால் பரவெளிக்கு மேலே சென்றவர். பராசக்தியின் அருளைப் பெற்றவர். தவம் நிறைந்தவர் என்று குள்ளச்சுவாமிகளைப்பற்றி பாடியுள்ளார் பாரதியார்.

மகாகவி சுப்பிரமணிய பாரதியார். புதுச்சேரியில் உள்ள ஈஸ்வரன் தர்மராஜா கோவில் வீதியில் தங்கியிருந்தார். அப்போது ஒருநாள் குள்ளச்சுவாமிகளை கண்டார். உடனே சுவாமிகளின் கையைப் பேரன்போடு பற்றினார். ஐயா தேசிகனே உன்னை எல்லோரும் ஞானி என்று சொல்லுகிறார்கள். சிலர் பித்தன் என்று சொல்லுகிறார்கள். அஷ்டாங்க யோக சித்தி கைவரப் பெற்றவர் என்று புகழ்கிறார்கள். ஆனாலும், கந்தையைக் கட்டிக்கொண்டு சுற்றுகிறீர்களே ஏன்? தங்கள் உருவத்தைப் பார்க்கும்பொழுது ஈஸ்வரன்போல் காட்சி கொடுக்கின்றீர்கள். யாவற்றையும் எனக்கு உணர்த்த வேண்டும் என்றார்.

அப்போது அங்கே ஒரு குட்டிசுவர் இருந்தது. மேலே சூரியன், அருகே ஒரு கிணறு. சுவாமிகள் பாரதியாரை உற்று நோக்கிக் குமிழ் சிரிப்புடன் அக்குட்டிச்சுவரைச்

சுட்டிக்காட்டினார். பின் விண்ணில் உள்ள சூரியனைக் காட்டினார். உடனே கிணற்றுக்குள் இருக்கும் தண்ணீரில் சூரியனின் பிம்பம் தெரிவதையும் காட்டினார். தெரிந்து கொண்டாயா என்று கேட்டார். அதற்குப் பாரதி அறிந்தேன் என்றார். இந்த வேதாந்த தத்துவத்திற்கு பாரதியின் விளக்கம்– நாசியில் ஓடும் வாசியை கும்பத்து லலாடத்தில் இறுகக்கட்டி எதிரிலுள்ள குட்டிச்சுவர் போன்று உறுதியாக இருத்தல் வேண்டும். பின் கிணற்றுனுள்ளே சூரியனின் பிம்பத்தைக் கண்டதுபோல் உன்னுள்ளே சிவனைக் காண வேண்டும். செயலில் இறங்கினால் சிவனை அடையலாம். இங்கு பாரதியாருக்கு சுவாமிகள் உபதேசித்த வாசி யோகமாகும்.

சுவாமிகளுக்கு தெரியாத தத்துவங்களே கிடையாது. அவரவர் பரிபக்குவ நிலைக்கேற்றவாறு அதை உணர்த்தும் ஆற்றல் உடையவர். ஒருநாள் சுவாமிகள் பழங்கந்தை அழுக்கு மூட்டையை முதுகின்மேல் சுமந்துக்கொண்டு பாரதியின் முன்னே வந்து நின்றார். ஏனய்யா இப்பெரும் மூட்டையை சுமந்து திரிகின்றீர் என்றார் பாரதியார். சுவாமிகள் புன்னகையுடன் புறத்தே நான் சுமக்கிறேன். உன் அகத்தினுள்ளே இதைவிடப் பெரும் பழங்குட்டையைச் சுமக்கின்றாய் என்று கூறி ஓடிவிட்டார். பாரதிக்கு ஞானோதயம் தோன்றியது.

ஸ்ரீ குள்ளச் சுவாமிகளும் ஸ்ரீ அரவிந்தரும் :

1912ம் ஆண்டில் புதுவையிலுள்ள ஒரு வீதியில் இருந்த ஒரு வீட்டின் மேல்மாடியில் ஸ்ரீ அரவிந்தர் தங்கியிருந்தார்.

தீவிர ஆத்மசாதனையில் ஈடுபட்டிருந்த சமயம் அது. அச்சமயத்தில் ஆத்ம சாதனையில் பனிமூட்டம் போன்று இனம் தெரியாத குழப்பம் ஸ்ரீ அரவிந்தருக்கு இருந்தது. அப்போது மேல்மாடியில் உள்ள ஜன்னலை ஸ்ரீ அரவிந்தர் மெல்லத் திறந்தார். கீழே ஸ்ரீ குள்ளச் சுவாமிகள் நின்று கொண்டிருந்தார். ஸ்ரீ அரவிந்தரைப் பார்த்து சுவாமிகள் மூன்று முறை கை தட்டினார். ஸ்ரீ அரவிந்தர் கீழே குனிந்து சுவாமிகளைப் பார்த்தார். தன் கையில் கொட்டாங்குச்சி வைத்திருந்தார். அதை மூன்று முறை கையில் கவிழ்த்து, கவிழ்த்து எடுத்துக் காட்டியதும் ஸ்ரீ அரவிந்தருக்கு அந்தப் பனிமூட்டம் போன்ற குழப்பம் பட்டென விலகியது.

ஜன்னலைச் சாத்தினார். ஆன்மீகப் பாதையில் மிக வேகமாக ஸ்ரீ அரவிந்தர் சாதனையில் ஈடுபட்டார். அதைப்பற்றி பின்னாளில் 1924ல் ஸ்ரீ அரவிந்தர் துரைசாமி ஐயர் என்பவரிடம் இதுபற்றி குறிப்பிட்டுள்ளார். சுவாமிகள் முகத்தில் பேரொளி வீசிக்கொண்டிருக்கும் புனித உடல் சுவாமிகள் புதுவையில் பரம்பொருளோடு கலந்துவிட்டார். ஆதாரம் ஆத்ம ஞானம் பெற்றவர்கள் அறிவார்கள். குதித்தோடி வாழ்ந்த குள்ளச் சுவாமியைக் கண்டு கொள்ளாது. அன்றைய உலகம் விட்டுவிட்டது. எங்கும் பரந்து கிடக்கும் பரம்பொருளோடு ஐக்கியமான குள்ளச் சுவாமி, இதைப் படிக்கின்றீர்களே, உங்களுக்குள்ளும் இருக்கின்றார். பொய்யை ஒழித்துப் புறப்படுங்கள்! உண்மையோடு கலந்து வாழுங்கள்! ஓம் ஸ்ரீ குள்ளச் சுவாமிகளின் அரியதரிசனத்தைப் பெறலாம்.

3. சித்தானந்த சுவாமிகள்

ஓம் ஸ்ரீ சித்தானந்த சுவாமிகள் 15-ம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் கடலூர் அருகே வண்டிப்பாளையத்தில் அவதரித்தார். சிறுவனாக இருந்தபோது திருப்பாதிரிப்புலியூரில் கோயில் கொண்டுள்ள பாடலீஸ்வரரை வழிபடத் தொடங்கினார். தினமும் அங்குள்ள பெரியநாயகி அம்மைக்கு பூக்கள் பறித்துக் கொடுத்தல் முதலான ஆலயப் பணிகள் செய்து வந்தார். மெல்ல மெல்ல அம்பிகையின் கடைக்கண் பார்வை இவர் மேல் படத் தொடங்கியது. மனித உணர்வுகள் விலகி, மேல்நிலை எய்தின மனத்திற்கு வந்தார். இறைவனை சுவாமிகள் எய்தி வழிபட்டார். கோடிக்கணக்கான ஞானிகள், மகான்கள், யோகிகள் காலங்காலமாக தேடித் திரிகின்ற முக்தி நிலையை ஸ்ரீ சித்தானந்த சுவாமிகள், ஸ்ரீ பெரியநாயகி அம்மையின் திருவருட் பார்வையால் பெற்றார்.

ஒரு சமயம் புதுவையின் வட பகுதியிலுள்ள முத்தியால்பேட்டை என்னும் பகுதியில் திரு. முத்துக்குமார

சாமிப்பிள்ளை என்னும் சிவபக்தர் தன் குடும்பத்தோடு வாழ்ந்து வந்தார். அவருடைய மனைவி அன்னம்மாளுக்கு தீராத நோய் இருந்தது. சுவாமிகளின் பெருமையை அறிந்த முத்துக் குமார சாமிப்பிள்ளை பாடலீஸ்வரர் ஆலயத்திற்கு சென்று சுவாமிகளை தரிசித்து சாஷ்டாங்கமாக பாதங்களில் விழுந்தார். பின் எழுந்து தாம் வந்த கருத்தைச் சுவாமிகளுக்குப் புலப்படுத்தினார். சுவாமிகள் சற்றும் தாமதியாது புதுவைக்கு வரச் சம்மதித்தார். சுவாமிகள் புதுவையை நெருங்கிக் கொண்டிருக்க அன்னம்மாளின் நோயும் விலகிக் கொண்டிருந்தது. வீட்டிற்கு வந்ததும் நோயும் பறந்தது.

ஞானபூமி புதுவை தன் ஞான மகனை அன்புக்கரம் நீட்டி வரவேற்றது. ஓம் ஸ்ரீ சித்தானந்த சுவாமிகளுக்கு தொண்டர்கள் பலர் தொண்டு செய்து வந்தனர். தொண்டர்களின் துன்பங்களை சுவாமிகள் நீக்கி வந்தார். ஒருநாள் முத்தைய முதலியாரின் மனைவி பிரசவ வேதனையால் துடித்துடித்துக் கொண்டிருந்தார். அதைக்கண்டு பதைப்பதைக்க சுவாமிகளிடம் ஒடிவந்தார். சுவாமிகளிடம் எப்படிச் சொல்லுவதென்று தெரியாமல் தத்தளித்தார். அருளால் அதை அறிந்த சுவாமிகள்.

நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம். உனக்கு ஆனந்தம் தரும் . ஆனந்தம் பிறந்து விட்டான். சென்று பார் என்று திருவாய் மலர்ந்தார். சுவாமிகளின் ஞானவாக்கு அப்படியே நிகழ்ந்தது. தன் மகனுக்கு சுவாமிகள் கூறியபடியே ஆனந்தன் எனப் பெயரிட்டார். பக்தர்கள் கூட்டம்

பெருகியது. தத்தம் லௌகீகக் குறைகளைப் போக்கிக் கொள்வதற்குச் அவர் மக்கள் கூட்டம் அதிகரித்தது.



1837ம் ஆண்டு மே மாதம் 28ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று கூட்டைவிட்டு வெளியேறக் குறிப்பு தன் பிரம்மத்தினிடமிருந்து கிடைத்தது. அப்போது சுவாமிகள் முத்துக்குமாரசாமிப் பிள்ளையை அழைத்து ஏவிளம்பி ஆண்டு வைகாசி மாதம் 28ம் தேதி வெள்ளிக்கிழமையன்று எனக்கு கல்யாணம் நடக்கப் போகுது. இதை எல்லோரும் அறியும்படிச் செய் என்றார்.

இந்நிகழ்ச்சி ஆத்மசித்தர் சமாதியடைய பத்து நாட்களுக்கு முன் நடந்தது. நாட்கள் ஓடின. பத்தாம் நாள் வந்தது. சுவாமிகள் முத்தியால்பேட்டையிலுள்ள வேளாளர் வீதியிலுள்ள சிங்காரத் தோட்டத்தில் வந்தமர்ந்தார். செய்ய வேண்டிய முறைகளை அழைத்துக் கூறினார். பின் அமைதியானார். சுவாமிகள் பத்மாசனத்தில் உட்கார்ந்தார். அபிஷேகம் நடந்தது. கற்பனை கடந்த ஜோதி ஆராதனை நடந்தது.

பக்தர்கள், மக்கள் கண்ணீர் மல்க வணங்கினார்கள். சுவாமிகள் பரப்பிரம்மத்தோடு கலந்தார். அவருடைய திருமேனி முத்தியால்பேட்டை வெள்ளாள வீதி வழியாக ஊர்வலமாக எடுத்துச்சென்று புதுவைக்கு வடக்கிலுள்ள கருவடிக் குப்பத்தில் திரு. முத்துக்குமாரசாமி தோட்டத்தில் சமாதி செய்விக்கப்பட்டது.

தற்போது சுவாமிகளின் சமாதி ஒரு சிறந்த சிவாலயம் போன்று காட்சியளிக்கிறது. சமாதியின்மேல் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. மக்களின் நெறியான

வேண்டுகேள் நிறைவேற்றப் படுகின்றன. ஆத்ம சாதகர்கள் தியானத்திற்காக வருகிறார்கள். சுவாமிகள் கருங்கல்லில்தான் உணவை வைத்து சாப்பிடுவார். அந்த கருங்கல் இன்றும் முத்தியால்பேட்டை சண்முகம் என்பவர் வீட்டில் உள்ளது. யாருக்காவது பிரசவம் ஆகவில்லை என்றால் அவர்களை அழைத்து வந்து அதில் உட்கார வைத்தால் உடனே பிரசவமாகிவிடும். அதிசயம் இன்றும் நடக்கிறது.

சித்தானந்த சுவாமிகளின் சமாதி அமைவிடம் :

சுவாமிகளின் சமாதி புதுவையிலிருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள கருவடிக்குப்பம் என்ற பகுதியில் முத்துக்குமாரசாமி தோட்டத்தில் செய்விக்கப்பட்டது. பஸ், ஆட்டோ, போக்குவரத்து வசதி உள்ளது.

4. ராம் பரதேசி சுவாமிகள்

ராம் பரதேசி சுவாமிகள் ஆந்திராவைச் சேர்ந்தவர். சிறுவயதாக இருக்கும்போதே தாயை இழந்தார். அதனால் எதிலும் பற்றுக் கொள்ளாது, அணிந்து இருந்த ஆடைகளை தூக்கி எறிந்துவிட்டு சாதாரண கோவணத்துடன் திரிவது வழக்கம். வீட்டில் படுத்துக் கொள்வார். நடுரோட்டிலும் படுத்து தூங்குவார்.

ஒருநாள் வீட்டில் இருந்து வெளியே வந்தவர் பின் வீடு திரும்பவே இல்லை. மனிதனையும், அவனது தீயச் செயல்களையும் வெறுத்து ஒதுக்கினார். வேகமாக நடந்தார். சிரித்த வண்ணம் நடந்தார். ஆன்ம சக்தி அவர் உடலெல்லாம் பாய ஆரம்பித்தது.

இப்படி நடந்தே தீவிர ஆத்ம சாதனை செய்தே புதுச்சேரி வந்தடைந்தார். ஞானபூமி தன் ஞான மகனை வரவேற்றது. ராம் பரதேசி சுவாமிகள் நல்ல உடல் வலு வாய்ந்தவர். சுமாரான உயரத்துடன், நீண்ட தாடியும், சடாமுடியுடனும் காணப்படுவார்.



குழந்தைகளுடன் அன்புடன் பழகுவார். தம்மை பெரிய கயிற்றால் குழந்தைகளைவிட்டு கட்டச் சொல்வார். அவர்களை விட்டே வீதிவீதியாக இழுத்துச் செல்லும்படி கூறுவார். குழந்தைகள் அவ்வாறே சுவாமிகளை வில்லியனூர் முழுவதும் இழுத்துச் செல்வர். பிறகு குழந்தைகளுக்கு மிட்டாய்கள் கொடுப்பார்.

சுவாமிகளின் இயற்பெயர் என்னவென்று யாருக்கும் தெரியாது. ஆனால் எப்போதும் ராம், ராம் என்று சொல்லிக் கொண்டே இருப்பார். ராம் பரதேசி சுவாமிகளின் சித்து விளையாடல்கள் ஏராளம். அதன் மூலம் தம்முடைய ஆத்ம சக்தியால் பொதுமக்களுக்கு நன்மைகள் செய்தார்.

நாகப்பாம்பு கடித்து இறந்து விட்டவரைத் தூக்கிக்கொண்டு வந்து சுவாமிகள் முன் கிடத்துவார்கள். சுவாமிகள் சிரித்துக் கொண்டே, ஏ நாகம்மா இங்கே வாடி என்பார். எந்தப் பாம்பு அவரை கடித்ததோ, அதே நாகம் அங்கு வந்து படம் எடுத்து நிற்கும். சுவாமிகள் தம் கையை நீட்டுவார். சர்ப்பம் தன் விஷத்தைச் சுவாமிகளின் கையில் கக்கும். அதை அப்படியே விழுங்கி விடுவார். பாம்பு கடித்து இறந்தவர் உயிர் பெற்று எழுவார். இதேபோன்று மவுனதியானத்தை ஆத்மிக சாதனையாகக் கடைபிடித்தார். பொதுமக்களுக்கு ஏற்படும் நோய்களைக் குணமாக்கினார்.

ராம் பரதேசி சுவாமிகள் இந்த இடத்தில் 30 ஆண்டுகளுக்குப் பிறகு ஓர் அதிசயம் நடக்கப் போகிறது என்று கூறினார். அதன்படி வில்லியனூர் புகைவண்டி நிலையம் சுவாமிகள் கூறிய இடத்தில் தோன்றியது.

பிரபஞ்சத்தின் ரகசியத்தை உணர்பவன், தன் ஆத்மாவை கண்டவன் ஞானி. ஊழ்வினையை வென்றவன் ஆத்ம ஞானி. ஆத்ம தரிசனம் கண்ட பிறகு பரப்பிரம்ம தரிசனம் காண உழைப்பது ஆத்ம ஞானியின் பணி. இதற்கு ஓங்கார யோகம் என்று பெயர். இந்தச் சாதனையின் உச்சக்கட்டம் பரப்பிரம்மத்தைச் சந்திப்பதும், பேசுவதும், கலப்பதும் ஆகும். உடலை தூக்கி எறிந்துவிட்டுப் பரப்பிரம்மத்தோடு இணையலாம். அத்தகைய தீவிரசாதனையை நம் சுவாமிகள் செய்து வெற்றி கண்டார்.

சுவாமிகள் தம் உடலை ஓங்காரப் பேரருளுடாக மாற்றி திரும்பினார் அப்படியே ஆடாமல், அசையாமல் சமாதி நிலைப்பெற்றார். சுவாமிகள் சாகவில்லை. பரப்பிரம்மத்தோடு கலந்துரையாடினார். இதை அறியாத மக்கள் சுவாமிகள் இறந்து விட்டார் என்று கருதி அவரது உடலை 1838ஆம் ஆண்டு தற்போது வில்லியனூர் புகைவண்டி நிலையத்தில் உள்ள பயணச்சீட்டு தரும் அறைக்குக்கீழே சமாதி நிலையில் அப்படியே வைத்து விட்டார்கள். மண்மூடிக் கொண்டது. பின்னர் அந்த இடத்தை ரெயில்வே தண்டவளம் போடுவதற்கு தோண்டும்போது, ஆயுதம் சமாதி நிலையில் இருந்த சுவாமிகள் மீது பட்டது. திடீரென்று ரத்தம் உடலில் இருந்து வந்தது. இதுபற்றி தகவல் அறிந்ததும். அப்போது ஆட்சியில் இருந்த பிரெஞ்சு அதிகாரிகள் பெரிய குடுவை செய்து அதனுள் சுவாமிகளை வைத்து வேறு இடத்தில் புதைத்து விட்டார்கள்.

சுவாமிகளின் சமாதியுள்ள இடம் புதுவைக்கு மேற்கே வில்லியனூர் ரோட்டில் சுல்தான்பேட்டை சென்று வில்லியனூருக்கு திரும்பும் பாதையில் வலப்புறம் அமைந்துள்ளது.

சமாதிக்கு முன்னால் இரண்டு தூண்கள் உள்ள ஒரு கருங்கல் மண்டபம் உள்ளது. உள்ளே 4 அடி உயரத்தில் எண்கோண அமைப்பில் உள்மண்டபமும் அதன்கீழே சமாதியும் உள்ளது.

மண்டபத்தினுள் சுவாமியின் திரு உருவம் மிக அழகாக கருங்கல்லில் செதுக்கப்பட்டுள்ளது. சுவாமியின் திரு உருவத்திற்கு கீழே கீழ்க்கண்ட வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

சுவாமிகள் ஜீவன் உள்ள பொழுதே சமாதி அடைந்தார்கள். இதற்கு ஜீவ சமாதி என்று பெயர். சுவாமிகளின் சமாதி உள்ள கட்டிடம் 109 வருடங்களுக்கு முன்பாக கட்டப்பட்டது. சமாதி அடைந்து சுமார் 136 வருடங்களாகி விட்டன.

வில்லியனூருக்கு அருகில் உள்ள விவசாயிகள், சிலர் விவசாயம் செய்வதற்கு முன்பாக சுவாமிகளின் சமாதிக்கு சென்று வழிபட்ட பிறகு சாகுபடியை ஆரம்பிப்பார்கள்.

5. தொள்ளைக்காது சுவாமிகள்

ஓம் ஸ்ரீ தொள்ளைக்காது சுவாமிகள் தெற்கிலிருந்து புதுவைக்கு வந்தார். தொல்லைக்காது சுவாமிகளின் இரண்டு செவிகளிலும் பெரிய துவாரங்கள் இருக்கும். மாஞ்செவலை நிறம். கட்டான உடல். நிமிர்ந்த பார்வை. கண்ணிலே பேரொளி. வயிறு சிறிதளவு பெருத்திருக்கும். கோவணம் கட்டியிருப்பார். கரங்கள் முட்டிக்கால் வரை நீண்டிருக்கும். சுமார் 6 அடி உயரம் இருப்பார். சுவாமிகளுக்கு திருமணம் செய்வதற்காக தாயார் கடுமையான முயற்சி எடுத்துக் கொண்டார். இளம் வயதிலேயே தந்தையை இழந்த சுவாமிகளுக்கு இத்திருமண ஏற்பாடு பெரும் சுமையாகவும், ஒரு பயத்தையும் உண்டு பண்ணியது. அச்சமயம் வீட்டின் அருகே உள்ளே அம்மனை நோக்கி குளத்தினருகே அமர்ந்தார். அவ்வளவுதான் அதுவரையில் தான் இருந்த நினைவு யாவற்றையும் இழந்தார். ஏதோ ஓர் ஒலி கேட்டது. அந்த ஒலியைக் கேட்டுக் கொண்டே சுவாமிகள் நடக்கத் தொடங்கினார். இறுதியில் ஆத்மீக சக்தி வாய்ந்த

அருமையான ஞானபூமியான புதுவைக்கு விடியற்காலை வந்தார். அவ்வொலி சுவாமிகளை தற்போது முரட்டாண்டி என்றழைக்கப்படுகின்ற ஊருக்கு அழைத்துச் சென்றது.

அங்கிருந்து சுவாமிகளை அத்தெய்வீகத் திருஒலி மணக்குள விநாயகரிடம் அழைத்துச் சென்றது. அடர்ந்த காடு, குளம் இதுவே அப்போதிருந்த விநாயகர் பெருமானின் திருக்கோயிலின் தோற்றம். அங்கு சுவாமிகளுக்கு ஞானம் கிடைத்தது. மீண்டும் பேரொலி சுவாமிகளை முத்துமாரியம்மன் கோவிலுக்கு அழைத்துச் சென்றது. அங்கே அம்மனை தரிசித்து யாவற்றையும் உணர்ந்தார். சுமார் 250 ஆண்டுகளுக்கு முன் இது நிகழ்ந்தது.

சுவாமிகள் இடைவிடாது தாயை வணங்கிக் கொண்டேயிருந்தார். காலையில் விநாயகரை பூஜை செய்வது வழக்கம். பின்பு முத்துமாரியம்மன் நிஷ்டையில் அமர்வார். முதலில் நடந்து சென்று கொண்டிருந்த சுவாமிகள் பின் அதை விட்டுவிட்டார். காலையில் பூஜை விநாயகரிடம், பின் சுவாமிகள் மறைந்து விடுவார். பிறகு பார்த்தால் அம்மனிடம் நிஷ்டையிலிருப்பார். பிறகு மறைந்து முரட்டாண்டிக்குச் செல்வார்.

காலங்கள் உருண்டு கொண்டேயிருந்தன. தன் உடலைவிட்டு, தான் வெளியேற அம்மனின் கட்டளை கிடைத்தது. மாலை சுவாமிகள் நிஷ்டையில் அமர்ந்தார். அம்மாவின் ஆனந்தத் திருநடனக் காட்சியைக் கண்டார். பேரொலி கேட்டது. தொடர்ந்து 9 நாட்கள் சுற்றினார். பௌர்ணமி அன்று வா! போகலாம் என்ற ஒலியைக்


தொள்ளை காது சித்தர்

கேட்டார். விநாயகர் தரிசனம் பெற்றார். மணக்குள விநாயகர் கோவில் அருகே சிரித்துக்கொண்டே தன்னுடைய உடற்சட்டையைத் தூக்கி வைத்தார். பிரம்மம் பரப்பிரம்மத்தோடு இணைந்தது. சுவாமிகளின் ஒளி உடல் தற்போது புதுவை மணக்குள விநாயகர் கோவிலினுள்ளே, அக்கால பக்தர்களால் சமாதி செய்விக்கப்பட்டது.

சுவாமிகள் புதுவையில் சுமார் 22 ஆண்டுகள் இருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகிறது. ஓங்கார ஒலி கேட்டு அந்த ஒலியினுள்ளே வாழ்ந்தார். ஓங்காரம் அவரை உயர்த்தியது. அவருள்ளேயிருந்து ஒலித்துக் கொண்டிருந்த ஓங்கார ஒலியே அவருக்கு ஞானாசிரியனாக இருந்தது. வேதாந்த துறையில் வெற்றி கண்டு நாதாந்தத்தின் மூலம் சுவாமிகள் பரப்பிரம்மத்தோடு ஐக்கியமானார்.

தொள்ளைக்காது சுவாமிகளின் சமாதி அமைவிடம் :

புதுவையின் சிறப்புமிக்க மணக்குள விநாயகரின் கோயிலில் சுவாமிகளின் சமாதி அமைக்கப்பட்டுள்ளது. விநாயகரின் கருவறைக்கு பின்புறத்தில் சுவாமிகளுக்கு ஒரு சிலை நிர்மாணிக்கப்பட்டு நித்தியபூஜை நடந்து வருகிறது.

6. மாதாஜி சித்தர்

1908ஆம் ஆண்டு ஒரு புதன்கிழமையில் திருவோண நட்சத்திரத்தில் இப்பூவுலகில் அவதரித்தார் அன்னை, தந்தை பழனி, தாய் முத்துலட்சுமி. இவர்களுக்கு ஐந்தாவது குழந்தை. பெற்றோர்கள் குழந்தைக்கு ராஜம் என்று பெயரிட்டனர். குலகுருவை அழைத்து உபசாரம் செய்து சன்மானங்கள் அளித்தனர். அப்பகுதியில் இருந்த பெரியோர்கள், சாதுக்கள், சந்நியாசிகள், ஞானிகள், மௌனிகள் எல்லோரும் வந்து குழந்தையைத் தரிசித்தார்கள், வணங்கினார்கள், போற்றினார்கள். அந்த அருட்குழந்தையின் அருட்சக்தி வெளிப்பட்டு வந்தோர்களை வசப்படுத்தி அவர்களின் குணங்களை நெறிப்படுத்தி அதுவே அவர்களைத் தன்னை வணங்கச் செய்தது.

குழந்தை வளர்ந்தது. எப்பொழுதும் ஆகாயத்தையே பார்த்துக் கொண்டிருப்பாள். கண்கள் விரிந்திருக்கும். முகத்தில் புன்னகை தவழும். சிலசமயம், அவள் கண்களில் இருந்து முத்துமுத்தாகக் கண்ணீர் வெளிவந்து

கொண்டிருக்கும். சிறுவயதிலேயே அவளிடம் ஜீவகாருண்யம் மலர்ந்து இருந்தது.

பருவ வயது வந்ததும் அவருக்கு தந்தையிடம் சொல்லி ஒரு அன்னச்சாலையைத் திறந்து எல்லோருக்கும் வயிறு நிறைய உணவு அளித்து வந்தார். அன்னதானம் செய்து வந்தாள். திருமணம் நடந்தது. வைதீகப் பரம்பரையில் வந்ததால் பெரியோர்கள் நல்ல திருமகனைத் தேர்ந்தெடுத்தார்கள். அவரது இயற்பெயர் நாராயணசாமி. தீட்சாநாமம் மகாசித்தர் என்பதாகும். சுமார் முப்பது ஆண்டுகள் கும்பகோணத்திலே பதியின் தீட்சையோடு பதிகாட்டிய சாதனைப்பாதையில், பதிக்கு இரவு பகலின்றி சேவை செய்து வந்தாள். பதிசேவையில் சிறந்து விளங்கினார் சாதனை வளர்ந்தது.

தனது தலைவருடன் பரங்கிப்பேட்டைக்கு வந்தாள். அங்கு சுமார் ஐந்து ஆண்டுகள் இருந்தாள். அப்போது அவளுக்கு இரண்டாவதாக ஆண் குழந்தை பிறந்தது. சிறப்புகள் சேர்ந்தன. மக்கள் அன்புச் சீடர்களின் அழைப்பிற்கிணங்க மயிலாடுதுறைக்குக் குடும்பம் இடம் பெயர்ந்தது.

அன்னையின் அருமை மகள் மணி சந்நியாசம் மேற்கொண்டு வெளியில் புறப்பட்டு விட்டாள். 1964ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முப்பத்தி ஓராம் தேதி திங்கட்கிழமையன்னு காலை அன்னையின் கணவர் முக்தி அடைந்தார்.



புதுவை வருகை :

1969ஆம் ஆண்டு புதுச்சேரிக்கு வந்தார்கள். சுமார் முப்பத்தி மூன்று ஆண்டுகள் புதுவையில் தங்கி இருந்தார். அச்சமயம் பாரதம் முழுவதும் பலமுறை யாத்திரைச் சென்று வந்தார்கள்.

அன்னை பெற்றெடுத்த இரண்டு குழந்தைகளும் சந்நியாசம் மேற்கொண்டு பூரணத் துறவு நிலையில் நிஷ்காமியப் பணியாற்றி வருகின்றனர். அன்னையின் குடும்பத்தில் சதி, பதி, புத்திரன் மூன்று பேருமே சித்தர்களாகும். இப்படிப்பட்ட ஒரு சித்தர் குடும்பத்தை இன்றைய நாளில் இந்த உலகில் வேறு எங்குமே காண முடியாது. இது நமது பாரத நாட்டின் சிறப்பாகும்.

அன்னையும் ஆத்ம ஞானிகளும் :

அன்னை சந்தித்த ஆத்ம ஞானிகளில் சிலர் :- கன்னியாகுமரி மாயம்மா, ஆனந்தமாயி, காஞ்சி பரமாச்சாரியார், காஞ்சி மகான் சிவகாமி, தவத்திரு அகண்டானந்த சுவாமிகள், மேலமங்கலம் ரம்தாஸ் சுவாமிகள், மௌன சுவாமிகள், சுடுகாட்டு சுவாமிகள், வெள்ளை வேட்டி சுவாமிகள், பச்சை வேட்டி சுவாமிகள், சாக்கு கட்டி சுவாமிகள், பகவான் ராம்சுரத் குமார் சுவாமிகள், சிருங்கேரி சிவகங்கா சுவாமிகள். இவர்களைப் போல் இன்னும் நூற்றுக்கணக்கானவர்களை அன்னை சந்தித்துள்ளார்கள், பேசியுள்ளார்கள்.

அன்னையும் அமான்ஷிய சக்திகளும் :

அன்னைக்கு தேகமில்லாத ஜீவன்களை பார்க்கின்ற ஆற்றல் உண்டு. கடைசிக் காலத்தில் நூற்றுக்கணக்கான ஜீவன்களைப் பார்த்ததாகவும், அவைகளின் குணங்கள், செயல்கள் பற்றி அடுத்தநாள் காலையில் தன் புதல்வரிடம் சொல்வார்கள். பல ஆண்டுகளுக்கு முன் யட்சணி தேவதை ஒன்று அவருக்குக் கைவசமாய் இருந்தது. அது அவர் காதில் ஏதாவது சொல்லிக் கொண்டே இருக்கும். அதன் அனுமதியின் பேரில்தான் அன்னை எந்தக் காரியத்தையும் செய்வார்கள். அன்னை இருந்த இடத்தில் உள்ள மக்களுக்கு அந்த தேவதையின் மூலம் பல நன்மைகளை செய்துள்ளார்கள். இன்றும் அந்த யட்சணி தேவதை மாதாஜி சித்தருக்காக தன்னை அர்ப்பணித்துள்ளது.

கனவு உலகம் அன்னைக்கு கைவரப் பெற்றது. தனக்கு ஏதாவது செய்தி வேண்டுமென்றால் கனவு உலகத்திற்கு சென்று அந்தச் செய்திகளையெல்லாம் வாங்கி அடுத்த நாள் வேண்டப்பட்டவர்களுக்கு அச்செய்தியைக் கூறுவார். அதனால் கனவின் வாசலான சுத்த நித்திரைக்கு அன்னை செல்வார்கள். அன்னை ஒரு தீர்க்கதரிசி. எதிர்காலத்தை உணரும் ஆற்றல் பெற்றவர்.

1998இல் ஏப்ரல் மாதத்தில் கைலாயத்திற்குச் செல்ல வேண்டும் என்ற குறிப்பு அன்னைக்குக் கிடைத்தது. எல்லோருக்கு ஆசி வழங்கினார்கள். அவர் சிவ ஐக்கியம் பெறுவதற்கு முதல் நாள் இரவு வெள்ளை நிறத்தில் அவரது பதி அவருக்குத் தரிசனம் கொடுத்து அவரை அழைத்துச்

செல்ல வந்தார். அப்போது அங்கு இரண்டு பெண்கள் தங்களது புறக்கண்களாலேயே அக்காட்சியைக் கண்டனர். 25-11-1998-ல் புதன்கிழமை காலையில் தனது மகனைக் கூப்பிட்டார். மகன் வந்து அன்னையின் தலையைத் தன் மடியில் வைத்துக்கொண்டார். தம்பி காற்று உள்ளே சுழலுது, உள்ளேயே சுற்றிக் கொண்டிருக்கு என்று சொன்னார்.

தொண்ணூறு ஆண்டுகாலம் இப்பூவுலகில் இருந்து மக்களுக்கு ஆன்மீக அருட் பணிகளை ஆற்றிக் கொண்டிருந்த மாதாஜி சித்தரின் ஆத்மா 25-11-1998 அன்று காலை பத்து முப்பது மணிக்கு வெட்டவெளியில் கலந்தது. அன்னையின் தவப்புதல்வர் தாம் இன்று உலகமுழுவதும் அமைதியாக வாழவும், எல்லோரும் சந்தோஷத்தை அடையும் நிஷ்காமியப் பணியாற்றிக் கொண்டிருக்கும் தவத்திரு சுவாமி ஓங்கார நந்தா.

அன்னை அதிஷ்டானம் :

ஸ்ரீ மாதாஜி சித்தர் வாழ்ந்து முக்கியடைந்த அறை இன்று அதே அமைப்பில் புதுவை ஓங்கார ஆசிரமத்தில் வைத்து நித்திய பூஜைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுவே அன்னையின் அதிஷ்டானம் பக்தர்களாலும், தவசிரேஷ்டர்களாலும் வணங்கப்படுகிறது.

7. கதிர்வேல் சுவாமிகள்

புதுச்சேரியில் கடந்த நூற்றாண்டில் நடமாடும் தெய்வமாக வாழ்ந்த சித்தர் மகான் ஸ்ரீ கதிர்வேல் சுவாமிகள்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுவாமிகள் புதுச்சேரி வந்து பல சித்தாடல்கள் புரிந்தவர் தீராத நோயினால் பாதிக்கப்பட்டவர்களை பச்சிலை மூலிகையால் குணப்படுத்தியவர். ஒல்லியான உடல்வாகு, உள்நோக்கிப் பார்வையுடன் முள்ளாலான பாதக்குறடு அணிந்து செல்வார். முத்தியால்பேட்டையில் வயதான மூதாட்டி ஒரு கிழங்கைக் சுட்டுக் கொடுப்பார். அந்தக் கிழங்கை மூன்று, நான்கு நாட்களுக்கு உணவாக வைத்துக் கொள்வார். வேறு எந்த உணவும் உட்கொள்ள மாட்டார்.

சுவாமிகள் தெருவில் நடந்து சென்றால் கார், ரிக்ஷா வண்டிகள் போன்ற வாகனங்களும், பொதுமக்களும் ஒதுங்கி நின்று வழி விடுவார்கள். அரசு அதிகாரிகள் மற்றும் பிரெஞ்சு அதிகாரிகள் அனைவரும் தொப்பியை எடுத்து மரியாதை செலுத்துவர். வடலூர் ராமலிங்க சுவாமிகள் புதுவை வந்து

சுவாமிகளுக்கு அருளாசி புரிந்தார்.

புதுச்சேரியை அடுத்த சித்தன்குடியில் மாந்தோப்பில் அமர்ந்து இருப்பார். ஆயிரக்கணக்கான பக்தர்கள் அவரிடம்வரத் தொடங்கினார்கள்.

1904ஆம் ஆண்டு சுவாமிகள் இறைவனோடு இரண்டர கலந்தார். சோப கிருது வருஷம் தைமாதம் 19-ஆம் தேதி திங்கட்கிழமை பூச நட்சத்திரத்தில் பவுர்ணமி திதியன்று 1-2-1904-ல் சுவாமிகள சமாதியடைந்தார்.

சுவாமியின் சாமதி மீது அழகான அறுகோண மண்டபம் கட்டப்பட்டது. சுவாமிகளின் பூத உடல் அங்குள்ள சமாதி அறையில் வைக்கப்பட்டு சமாதி எழுப்பப்பட்டது.

மகாகவி பாரதியார் சுவாமிகளை கண்டு தரிசனம் செய்துள்ளார். அவர் சுவாமிகளின் பொற்பாத கமலங்களில் சரணடைந்து விட்டால் சர்வ சித்தியும் கிடைக்கும் என்று தன் பாடலில் குறிப்பிட்டுள்ளனர்.

சுவாமிகள் ஜீவசமாதி சித்தன்குடியில் உள்ளது.

8. தயானந்த சுவாமிகள்

மண்ணுலகில் அவதரித்து சித்தாடல்கள் பல புரிந்து மக்களுக்கு நன்மைகள் பல புரிந்த மகான் ஸ்ரீ தயானந்த சுவாமிகள். இவர் மூன்று காலத்தையும் அறியும் ஆற்றல் படைத்தவர். மற்றவர்களுக்கு ஏற்படும் நோயை தாமே ஏற்றுக் கொண்டு, அவர்களுக்கு குணமளிப்பார்.

புதுச்சேரியை அடுத்துள்ள கடலூர், திருப்பாதிரிப்புலியூருக்கு அடுத்த புதுப்பாளையம் கெடில நதிக்கரையில் தயானந்த சுவாமிகளின் சமாதி அமைந்துள்ளது. சமாதியின் மேல் தண்டாயுதபாணியின் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

சுவாமியின் ஊர், பெயர் எதுவும் தெரியவில்லை. வடஇந்தியாவில் ராணுவத்தில் பணியில் இருந்தார். பின்னர் குடும்பத்தை உதறிவிட்டு தீவிர ஆத்ம சாதனையில் ஈடுபட்டார். பாளையங்கோட்டை தாமிரபரணி ஆற்றில் உள்ள பாழ்மண்டபத்தில் ஆத்ம சாதனை செய்தார்.

தயானந்த சுவாமிகளை பாளையங்கோட்டையில் இருந்து கடலூருக்கு தெய்வ சிகாமணி முதலியார் அழைத்து வந்தார். முதலில் அவரது வீட்டிலும், பின்னர் கெடிலம் ஆற்றங் கரையிலும் தங்கி இருந்தார். சுவாமிகளின் அற்புத ஆற்றல் அறிந்து மக்கள் கூட்டமாக வரத் தொடங்கினர். மகான் செய்த அற்புதங்கள் பல. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

புதுப்பாளையம் சீனிவாச செட்டியாரின் மனைவி பூங்காவனம் என்பவருக்கு பைத்தியம் பிடித்து இருந்தது. வைத்தியம் செய்தும் பலனில்லை. சுவாமிகள் மகிமை அறிந்து பூங்காவனத்தை சுவாமிகளிடம் அழைத்து வந்தனர். உடனே தயானந்தர் அந்த அம்மையாரை உற்றுநோக்கி அவரின் தலையில் உதைத்து நல்லாயிருப்போ என்றார். அப்போதே அவருக்கு பைத்தியம் தீர்ந்தது. திடீரென்று ஒருநாள் சுவாமிகள் தியானத்தில் அமர்ந்து இருந்தார். மண்டை வலிக்காரன், மார்பு வலிக்காரன் வருகிறான் என்றார். சுற்றி இருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. சிறிது நேரத்தில் சென்னையில் இருந்து ஒருவர் தீராத தலைவலியிடனும், மார்புவலியுடனும், சுவாமிகளிடம் வந்து சேர்ந்தார்.

தயானந்தர் அவரைப் பார்த்து எச்சில் தின்றால் வலி நீங்கும் என்றார். சுவாமிகள் கூறியபடி அந்த நபர் சுவாமிகள் உண்ண உணவில் மிகுதியைச் சாப்பிட்டார். என்ன அதிசயம்! அந்த நபரின் நோய் பறந்தோடியது. அவர்

சுவாமிகளின் பாதங்களில் விழுந்து வணங்கி ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

1904ஆம் ஆண்டு கெடிலநதியில் பெருவெள்ளம் கரைபுரண்டோடியது. சுவாமிகள் தன் தீர்க்க தரிசனத்தால் இதை முன்னதாக எச்சரித்து மக்களைக் காத்தார்.

25-6-1905ஆம் ஆண்டு சுவாமிகள் தனக்கு தொண்டு செய்து வந்த அனைவரையும் அழைத்து தான் சித்தியடையப் போவதை அறிவித்தார். இப்போது இவர் ஜோதியாகி விடுகின்றார். எல்லோரும் ஏட்டுச் சுரைக்காயாக இருக்கிறார்கள். எல்லாம் நம்பியிருந்தால்தான் நன்மை தரும் என்று கூறினார். தொடர்ந்து இவர் ஜோதியாக இருக்கப் போகிறார் என்று பல தடவை கூறினார். உடனே லட்சுமண சுவாமிகள் நாயுடு என்பவர் நிறைய கற்பூரத்தை ஏற்றி சுவாமிகளுக்கு எதிரே காட்டினார். தயானந்தர் எரிகின்ற ஜோதியைப் பார்த்தார். பார்த்த வண்ணமாகவே இருந்தார். 25-6-1905 ஞாயிற்றுக்கிழமை விதேக முக்தியடைந்தார்.

9. கோவிந்த சுவாமிகள்

புதுவை மக்கள் செய்த பெரும் தவத்தால் உதித்த தேவன் கோவிந்த ஞானி. அன்பே திருஉருவமாகி மனித உருவில் பூமியில் நடமாடினார் உலகில் எந்த உயிருக்கும் துன்பம் நேரிட்டாலும் அங்கு தாய்போல் சென்று அத்துன்பத்தை நீக்கிய பெரும் ஞானி.

ஒருநாள் கோவிந்தசாமி சுவாமிகள் புதுச்சேரியில் தங்கி இருந்த பாரதியாரின் வீட்டுக்கு வந்தார். பாரதியார் அவரை அன்போடு உபசரித்தார். பின்னர் சுவாமிகள் பாரதியாரை ஓர் அறைக்கு அழைத்துச் சென்றார். பல ஆண்டுகளுக்கு முன் பாரதியாரின் தந்தை இறந்துவிட்டார். அவரது உருவத்தைப் பாரதியாருக்கு காட்டினார். அவரது தாயாரின் உருவத்தையும் காட்டினார். இவற்றை கண்ணாரக் கண்டு மகிழ்ந்த பாரதியார் கோவிந்த சுவாமிகளே தனக்கு குரு என்று சரணடைந்தார். இது குறித்து அவர் எழுதிய பாடல்.

பொன்னடியால் என்மனையைப் புனிதமாக்கப்
போந்தானிம் முனியொருநாள்; இறந்தஎந்தை

தன்னுருவங் காட்டினான்; பின்னர் என்னைத்!
தரணி மிசைப் பெற்றவளின் வடிவமுற்றான்.
அன்னவன் மாயோகியென்றும் பரமஞானத்
தனுபூதியுடையனென்றும் அறிந்து கொண்டேன்
என்கிறார்.

ஸ்ரீ கோவிந்த சுவாமிகள் புதுவையில் 1910லிருந்து 1918 வரை நடமாடி வந்திருப்பதாக தெரிய வருகிறது. பின் அவர் எங்கு சென்றார். என்ன ஆனார்? என்று யாருக்கும் தெரியவில்லை. வந்ததை முடித்துக் கொண்டு பரம்பொருளோடு ஐக்கியமாகி விட்டார்.

10. மண்ணுருட்டி சுவாமிகள்

மண்ணில் நல்ல வண்ணம் வாழும் நெறிமுறையை உலகமக்களுக்கு தன் நடத்தையால் நிகழ்த்தி காட்டிய சித்தர்கள் ஏராளம். இவர்களது செய்கையினால் இயற்பெயர் மறைந்து காரணப் பெயரே நிலைத்து விடுகிறது.

ஓம் ஸ்ரீ மண்ணுருட்டி சுவாமிகளின் இயற்பெயர் ராமகிருஷ்ணன் சுவாமிகள். காவல்துறை அதிகாரியாக இவர் ஆத்ம ஞானம் பெற்று புதுச்சேரி வந்து தியானத்தில் ஈடுபட்டார். எப்போதும் சுவாமிகள் ஒரு கையில் தன் கட்டைவிரலை வைத்துக்கொண்டு சதா உருட்டிக் கொண்டிருப்பார். சில சமயங்களில் மண்ணை வைத்து உருட்டுவதுண்டு. இதனால் அவர் மண்ணுருட்டி சுவாமிகள் என்று அழைக்கப்பட்டார்.

புதுச்சேரியை அடுத்த பொம்மையார் பாளையத்தில் தாழைக்காடும், அடர்ந்த ஓடையும் இருந்தது. ஒருநாள் அந்த ஓடையில் சுவாமிகள் சென்று தவநிலையில் அமர்ந்துவிட்டார். திடீரென்று ஓடையில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

அந்த ஓடையில் சுவாமிகள் புதைந்துள்ளார். தலையும் உடலில் பாதியும் மண்ணுக்குள் இருந்தது. முதுகு மட்டும் மண்ணுக்குமேல் தெரிந்தது. அந்த வழியாக வந்தவர்கள் இதைப்பார்த்து மண்ணைத் தோண்டி அவரை வெளியே எடுத்தனர். வெளியில் வந்தவுடன் ஒன்றுமே நடக்காததைப்போன்று சுவாமிகள் போய்விட்டார். நினைத்த இடத்திற்கு செல்லும் ஆற்றல் சுவாமிகளுக்கு இருந்தது. சுவாமிகள் ஆஜானுபாகுவான தோற்றம் உடையவர். தட்டாடையாக வேட்டியை கட்டிக்கொண்டு அங்கவஸ்திரத்தை நீள தொங்கும்படி போர்த்திக் கொண்டிருப்பார். முகத்தில் தாடி, பரட்டைத்தலை, யாரையும் நிமிர்ந்து பார்ப்பது கிடையாது.

கோட்டக்குப்பத்தில் ஒரு டீக்கடையில் ஒரு டீக்கடைக்காரர் சுவாமிகளுக்கு காப்பி கொடுப்பார். ஒருமுறை டீக்கடைக்காரரின் குழந்தைக்கு நோய் அதிகமாகி விட்டது. கடைக்காரர் குழந்தையை எடுத்து வந்து சுவாமியின் மடியில் குழந்தையைக் கிடத்தி இந்தா உன் குழந்தை இதை என்ன பண்ணுவாயோ என்று தெரியாது என்று கூறி குழந்தையை சுவாமிகளிடம் கொடுத்தார். சுவாமிகள் அந்தக் குழந்தையை உற்று நோக்கினார். உடனே குழந்தைக்கு நோய் நீங்கி விட்டது.

1965ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மாட்டுப் பொங்கல் அன்று சுவாமி சமாதி ஆனார். கோவிந்தசாமி பிள்ளை தோட்டத்தில் சுவாமிகளை சமாதியில் அமர்த்தினார்கள்.



சுவாமிகளின் சமாதியுள்ள இடம் புதுச்சேரி சுதேசி காட்டன்மில் எதிரில் உள்ள கோவிந்தசாமி முதலியார் தோட்டத்தில் உள்ளது.

11. சட்டி சுவாமிகள்

புதுவையில் அவதார புருஷராக வாழ்ந்து, மக்களை வாழ்வாங்கு வாழ்வித்து கொண்டு இருப்பவர் ஸ்ரீ சட்டி சுவாமிகள்.

முழங்கால் அளவு வேட்டி அணிந்து கொண்டு, கையில் ஒரு பெரும் சட்டியை வைத்திருப்பார். புதுச்சேரி வீதிகளில் நடமாடி கொண்டு இருப்பார். அவர் பின்னால் பல பக்தர்கள் செல்வார்கள். பலர் அவரை கெஞ்சி தன் வீட்டுக்கு வந்து சாப்பிட வரும்படி அழைப்பார்கள். அதை ஏற்று சட்டி சுவாமிகள் வீட்டினுள் சென்று சமைத்ததை எல்லாம் எடுத்து வரச்சொல்வார். சாதம், சாம்பார், ரசம் ஆகிய எல்லாவற்றையும் சட்டியில் போட்டு ஒன்றாகப் பிசைந்து அங்குள்ள அனைவருக்கும் தலா ஒரு உருண்டை கொடுப்பார். பின்னர் பல கவளங்களை பல திக்குகளில் விட்டெறிவார். ஏன் இப்படி செய்கிறீர்கள் என்று கேட்டால், பூதகணங்கள், பைசாசங்களுக்கு போடுகிறேன் எனக் கூறுவார். அவர் விட்டெறிந்த கவளங்கள் யாவும் கீழே விழாது.

சில வினாடிகளில் மறைந்துவிடும். மனிதர்களுக்குத் தெரியாத சக்திகள் சுவாமிகளின் கண்களுக்குப் புலப்பட்டன.

ஒருமுறை சுவாமிகள் உழவர்கரை பக்கத்தில் ஒரு ஆலமரத்தின் பொந்தில் கைவிட்டு ஒரு பாம்பை வெளியே எடுத்தார். சர்ப்பம் விஷத்தை கக்கியது. சுவாமிகள் விஷத்தை அப்படியே சாப்பிட்டு விட்டார்.

சட்டியைத் தலையிலே கவிழ்த்துக் கொண்டு திரிந்ததால் இவருக்கு சட்டி சுவாமிகள் என்ற பெயர் ஏற்பட்டது. சுவாமிகள் என்று, எப்பொழுது மெய்ப்பொருளோடு கலந்தார் என்பது யாருக்கும் தெரியாது.

12. லட்சுமண சுவாமிகள்

சித்தன் போக்கு சிவன் போக்கு என்பார்கள் இந்த நிலையில் புதுச்சேரியில் வாழ்ந்தார் ஒருவர் அதுவும் நம் காலத்திலேயே வாழ்ந்தார். இந்த ஆத்ம சாதகரின் பெயர் ஓம் ஸ்ரீ லட்சுமண சுவாமிகள் யாரிடமும் எதுவும் பேச மாட்டார்.

ஒரு சாக்குத் துண்டை கோவணமாக கட்டியிருப்பார். கொளுத்தும் வெயிலில் சாலையில் அமைதியாக உட்கார்ந்திருப்பார். இவர் கடை வீதியில் சென்று கொண்டு இருப்பார். கடைக்காரர்கள் தங்கள் கல்லாப் பெட்டியைத் திறந்து வைத்து இருப்பார்கள். நேரு வீதியில் உள்ள பொடிக் கடைக்கு எப்போதாவது செல்வார்.

கல்லாவிலிருந்து ஒரே ஒரு காசை எடுப்பார். பின்னர் வெளியே வந்து தூக்கியெறிந்து விட்டு மறைந்து விடுவார். சுவாமிகள் காசு எடுத்த கல்லாப் பெட்டியில் பணம் நிரம்பி வழியுமாம்.

புதுச்சேரியில் நேரு வீதி, ரங்கப்பிள்ளை வீதி, வழுதாவூர் ரோடு, மீனாட்சிப்பேட்டை, மேட்டுப்பாளையம்



போன்ற இடங்களில் சுவாமிகள் நடமாடி வந்துள்ளார். இரவில் மீனாட்சிப் பேட்டையில் உள்ள அம்மன் கோவில் வெளியே உட்கார்ந்து இருப்பார். அப்போது சத்துள்ள விடியங்கள்பற்றி தானாகவே பேசி கொண்டு இருப்பார். அது அவருக்கும், அம்மனுக்கும் இடையே நடந்த உரையாடலாகவே இருக்குமாம்.

சுவாமிகளின் இறுதி காலம் வந்தது. ஒருநாள் கால்போன போக்கில் நடந்தபடி காலாப்பட்டு வந்தார். அதைக் கடந்து புத்துப்பட்டில் உள்ள ஐயனார் கோவிலுக்கு நடந்து சென்றார். சன்னிதானத்தின் முன்னே சாஷ்டாங்கமாக படுத்தார். சுவாமிகளை இறைவன் ஆட் கொண்டார். மறுநாள் காலையில் மக்கள் சுவாமிகளை பார்த்தார்கள். அருகிலேயே சமாதி வைத்துள்ளார்கள். சுவாமிகளின் சமாதி பூரண அருளாசியுடன் பொலிகிறது.

13. வேதாநந்தா சுவாமிகள்

தவத்திரு ஓம் ஸ்ரீ வேதாநந்தா சுவாமிகள் தமிழ்நாட்டில் திருமருகல் என்ற ஊரில் 1872-ல் பிறந்தார். இளமையிலேயே இவரது மனம் ஆன்மீகத்தை நாடியது. ஞான பூமியான புதுச்சேரிக்கு வந்தார். இல்லற ஞானியான சுவாமிகள் புதுவை நேரு வீதியில் கைலியும் மற்றும் பொருட்களையும் வியாபாரம் செய்து வந்தார்.

பல ஞானிகளை சந்தித்து பல ஞான நூல்களை கற்றுத் தேர்ந்தார். சுவாமிகள் இறுதிக் காலத்தில் வேதாந்த பாடங்களைப் போதித்து வந்தார். ஒரு சமயம் படகில் நண்பர்களுடன் ராமேஸ்வரம் சென்று கொண்டு இருந்தார். கடல் அலைக்கழிப்பால் படகு தத்தளித்தது. நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டது. மற்ற பிரயாணிகள் அஞ்சினர். சுவாமிகள் அவர்களைப் பார்த்து சங்கரா, சங்கரா என்று கூவும்படி சொன்னார். அவ்வாறே எல்லோரும் கூறினர். சற்று நேரத்திற்கெல்லாம் காற்று நின்றது.



சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் முதல் நாள் அதாவது 1762-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17ஆம் தேதி திங்கட்கிழமை பகல் 3 மணியளவில் சுவாமிகள் தேக முக்தியடைந்தார்.

புதுவை முத்தியால்பேட்டையில் முத்துக்குமார சாமி முதலியார் தோட்டத்தில் சுவாமிகளின் சமாதி வைக்கப்பட்டுள்ளது. சமாதியின் மேல் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

14. பெரியவர்களுக்கு பெரியவர்

உலக மக்கள் எல்லோர் வாழ்விலும் ஆனந்த அன்பு வாழ்வை தந்திட அவதரித்த தெய்வீக புருஷர் புதுவைக்கு அடுத்த தட்டாஞ்சாவடியில் வசித்து வந்தார். பெரியவரைப் பெரியசாமி என்று மக்கள் அழைத்தனர். இவர் செய்த அற்புதங்கள் ஏராளம். 5 அடி உயரமுள்ள சுவாமிகள் திண்ணையில் படுத்து தூங்குவது போன்று இருப்பார். யாருடனோ பேசிக் கொண்டிருப்பது போல தோன்றும். திடீரென்று எழுந்து எமன் இந்த வீட்டில் உள்ள உயிரை எடுத்துக் கொள்ளப் போகிறான் என்பார். அவ்வாறே அந்த வீட்டில் நிகழும். பெய்கின்ற மழையைச் சட்டென்று நிறுத்துவார். பிறகு தொடர வைப்பார். இந்தப் பெரியவர் மக்களுக்கு வரும் நோய்களைத் தன் ஆத்மிகச் சக்தியால் குணமாக்கி விடுவார்.

சுவாமிகள் 14-7-1967 ஞாயிற்றுக்கிழமை ஏகாதசி திதியில் இரவு 10 மணி அளவில் முக்தி அடைந்தார். சுவாமியின் பூத உடல் புதுச்சேரி தட்டாஞ்சாவடியில் உள்ள ஸ்ரீ ஞான தேசிக கம்பளி சுவாமிகள் சமாதிக்குப் பின்புறம் உள்ள ருத்ராபூமியல் தகனம் செய்யப்பட்டது.

15. சிவஞான பாலசித்தர்

உலக மக்களுக்குச் சிவஞானத்தைப் போதித்து அவர்களைச் சிவஞான சக்தியில் மூழ்கவைத்தவர். சிவஞான பால சித்தர் 10 வயது சிறுவனாக காட்சியளித்தார். பால சித்தர் என்று மக்கள் அவரை அன்புடன் அழைத்தார்கள். அஷ்டமா சித்திகளில் வல்லமைபெற்று இருந்த இவர் புதுச்சேரி பொம்மையார்பாளையம் என்று தற்போது அழைக்கப்படும் பிரம்மபுரத்தில் பக்தர்களுக்கு அருளாசி புரிந்து வந்தார். முன்பு இவர் வங்கக்கடலில் பரண்அமைத்து வாழ்ந்துவந்தார். மிகவும் குள்ளமானவர். நீண்ட சடைமுடியுடன் காணப்படும் இவரது நெற்றியில் விபூதியும், கழுத்தில் உத்திராட்சமும் ஒளிவிடும்.

தினமும் காலையில் சதுரக் கள்ளிப்பாலை கறந்து உணவாக அருந்துவார் அத்தோடு ஆவாரம் பூவையும் சாப்பிடுவார். பிரம்மபுரத்தில் சிறிதுகாலம் தங்கி இருந்தபின்பு மாயவரம் சென்றார் அங்கு சில காலம் சிவஞானப் பணியைத் தொடர்ந்தார் பின்னர் பெருமுக்கல் மலைக்குச் சென்று ஆத்ம சாதகர்களுக்கும், சித்தர்களுக்கும் வழிகாட்டியாக விளங்கினார்.

சித்தருக்கு அம்மவை என்ற பெண் சதுரக்கள்ளிப்பால்

கொண்டுவந்து கொடுத்தார். அம்மவையின் விருப்பப்படி அவருக்கு சித்தரின் ஆசியால் சிவஞான பாலகன் பிறந்தார். அவருக்கு ஞானபதேசமும், ஆச்சாரிய பீடமும் அளித்தார். பின்னர் பிரம்மபுரத்திற்கு வந்து மக்களின் குறைகளையும் போக்கினார். பின் மயூராசலம் (மயிலம்) சென்றார். சிவயோக சமாதியில் வாழ்ந்தார். ஆனிமாதம் திருவாதிரை நட்சத்திரத்தில் முருகப்பெருமான் வீற்றிருக்கும் மயிலம் கோயில் தென்பகுதியில் சித்தர் சிவலிங்கமானார்.

சுவாமிகளின் சமாதி இன்றும் அருள் பாலித்துக் கொண்டு இருக்கிறது. சிவஞான பாலசித்தர் 3 ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்ததாக சொல்லப்படுகின்றது. புதுச்சேரியில் இருந்து மயிலம் செல்லும் பேருந்தில் செல்லலாம்.

16. சிவஞான பாலைய சுவாமிகள்

சித்தர்களுக்கும், ஞானிகளுக்கும், ஆத்மசாதகர்களுக்கும் சிறந்த தெய்வீக இடமாக திகழ்வது பெருமுக்கல் மலையாகும். இம்மலையில் 10 வயது தோற்றமளிக்கக்கூடிய சிவஞான பாலசித்தர் சித்தர்களுக்கெல்லாம் தலையாய சித்தராக உலவி வந்தார். அவருடைய உணவு கள்ளிப்பால் ஆகும். அம்மவை என்ற பெண் சுவாமிகளுக்கு தினந்தோறும் சதுரகள்ளிப்பாலைக் கறந்து கொடுத்துவந்தார். ஆனால் அவருக்கு குழந்தை இல்லை. இந்த ஏக்கம் அவளை வாட்டி வதைத்தது. அவரது ஏக்கம் சித்தருக்கு தெரிந்தது. சதுரகள்ளிப்பாலை எடுத்து பருகினார்.

பாத்திரத்தில் கொஞ்சம் பால் இருந்தது. அதை அம்மவையிடம் கொடுத்து குடிக்கச் சொல்ல, அவர் தாமதியாது சட்டென்று எடுத்துக் குடித்துவிட்டாள். சதுரக்கள்ளிப்பால் சிவஞான செல்வமாக அவள் கருப்பையில் நுழைந்து கரு வளர்ந்தது. சிவஞானம் பிறந்தது பாலை உண்டு பிறந்ததால் சிவஞான பாலைய சுவாமிகள் என்ற பெயர் வந்தது.

ஒருநாள் சித்தர் முன்பு அம்மவை தன் புதல்வரை அழைத்துவந்து ஆசிர்வதிக்கும்படி வேண்டி நின்றார். சித்தரின் பார்வை புதல்வரை தொட்டது. பின் சிவஞான பாலைய சுவாமிகளுக்கு சன்னியாச ஆசிரமம் தந்து, ஞானோபதேசம் நயன தீட்சை செயதார். பின உடனே ஆசாரியபீடம் தந்தார். நீ பாலிலே உருவான காரணத்தால் பாலையே உணவாகக்கொண்டு சீடப்பரம்பரையோடு சிவஞான தேசிகன் என வாழ்வாயாக என வாழ்த்தினார். சிவஞான தேசிகர் சிவலிங்கபூஜையும் பஞ்சாட்சர ஜெபமும், முருகவழிபாடும் மூச்சாகக் கொண்டார்.

சில காலம் புதுவைக்கு அடுத்த பொம்மையார்பாளையம் என்றழைக்கப்படுகின்ற பிரம்மபுரத்துக்கு வந்ததார் பின்னர் மயிலம் சென்று தவத்தை மேற்கொண்டார். சுவாமிகள் காஞ்சிபுரத்திற்கு சென்று இருந்தபோது பாம்பு தீண்டி இறந்த ஒருவரை சுவாமிகளிடம் கொண்டுவந்து சேர்த்தனர் சுவாமிகள் திருநீறு அளித்து பாம்பு தீண்டியவரை உயிர்ப்பித்தார். தொடர்ந்து செய்யூர், சிதம்பரம், மதுரை போன்ற நகரங்களில் பயணித்து பலசித்தாடல்கள் புரிந்து மக்களுக்கு நண்மைகள் பல செய்தார்.

சிதம்பரபூபதி என்ற அரசனின் நாட்டை வேறொரு நாட்டு அரசன் கவர்ந்து கொண்டான். ஒருநாள் அவன் தேசிகரிடம் வந்து அவருக்கு தொண்டுகள் செய்துவந்தான் சிவஞான பாலதேசிகர் தம் சேனைகளை அனுப்பி பகை அரசனை வெற்றிபெற உதவி சிவபூபதிக்கு மீண்டும் அவ்வரசை மீட்டுத்தந்து ஆசி கூறினார்.

சிவஞானச் செல்வர் சிவப்பிரகாச சுவாமிகளுக்கு ஞானாபதேசம் தந்து, தமது பீடத்தில் சன்னியாசம் தந்து அமர்த்தினார். சிவஞான பாலைய சுவாமிகள் தம் வாழ்நாள் முழுவதும் பாலையே பருகினார். மக்களின் குறைகளையும், தம்சித்திகளையும் திரு நீற்றாலே அருளாடல் புரிந்தார். வைகாசி மாதம் பவுர்ணமி திதியில் விசாக நட்சத்திரத்தன்று சிவஞானபாலைய சுவாமிகள் மடத்தில் உள்ள குகையில் இறங்கி, தம்மை விபூதி லிங்கமாக மாற்றிக்கொண்டார். அங்கு சிவஞான பாலைய தேசிகனின் திருவருள் இடைவிடாமல் பூரண பொலிவுடன் பிரகாசித்து கொண்டு இருக்கிறது.

அமைவிடம்

புதுவைக்கு வடக்கே 6 மைல் தூரத்தில் சிவஞான பாலதேசிகர் மடம் உள்ளது. மடத்தில் உள்ளே குகையும் குகையினுள்ளே அன்று விபூதிலிங்கமாக மாறிய விபூதி லிங்கமும் உள்ளது.

17. சிவப்பிரகாச சுவாமிகள்

கருவில் திருவாகி, திருவே அருவாகி, அருவே உருவாகி இரண்டும் அருஉருவாகி வந்த சிவக்கொழுந்து சிவப்பிரகாச சுவாமிகள் முப்பத்திரண்டு வயதில் முப்பத்திரண்டு தெய்வீகத் தத்துவங்களை தமிழில் தந்தருளியவர் 16ஆம் நூற்றாண்டில் நடமாடும் சித்தராய் திகழ்ந்த இம்மகான் ஆழ்ந்த தமிழ்ப் புலமையும், வாக்குச் சித்தியும் நிரம்பப்பெற்றவர். புதுச்சேரி மாநிலம், புதுச்சேரியில் இருந்து 10 கி.மீட்டர் தொலைவில் வில்லியனூர் அருகில் உள்ள நல்லாற்றூர் கிராமத்தில் இவரது ஜீவசமாதி அமைந்துள்ளது.

சுவாமிகளின் தந்தையார் பெயர் குமாரசாமி தேசிகர். காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் தேசிகரின் குருவான திருவண்ணாமலை குருதேவரை தரிசித்து அங்கே சில நாட்கள் தங்கினார். பின்னர் தமது சகோதரர்களுடன் பெரம்பலூர் வந்தார். அங்கு வள்ளல் அண்ணாமலை ரெட்டியார் ஒரு மடத்தைக் கட்டி சுவாமிகளை அங்கே இருக்கச் செய்தார். சுவாமிகள் 2 ஆண்டுகள் அங்கு தங்கி சிவபூஜையை



செய்துவந்தார். பின்னர் தமிழ் கற்றோரை அணுகி தமிழ் கற்க விரும்பினார். திருநெல் வேலிக்கு சென்று வெள்ளியம்பலவாணரை சந்தித்து ஐந்திலக்கணங்களையும் கற்று தேர்ந்தார். பின்னர் திருச்செந்தூரில் ஒரு புலவன் தனது குருவை இகழ்ந்து பேசுவதை அறிந்த சுவாமிகள் அங்கு சென்று, அந்த புலவனை சந்தித்தார். அந்தப் புலவன் செருக்குடன், புதிய பந்தயத்துக்கு சுவாமிகளை அழைத்தான். நாம் இரண்டுபேரும் நீரோட்டகயமகம் பாடவேண்டும். யார் முதலில் முப்பது பாடலைப்பாடி முடிக்கிறார்களோ அவருக்குப் பின்னவர் அடிமையாக வேண்டும் என்று நிபந்தனை விதித்தான். இதற்கு சிவப்பிரகாச சுவாமிகள் சம்மதித்தார். பந்தயத்தில் சிவப்பிரகாச சுவாமிகள் வெற்றி பெற்றார். பின்னர் அவர் அந்த புலவனை தன் குருநாதரிடம் அழைத்துச் சென்று அவருக்கு அடிமையாக்கினார்.

திருவெங்கை என்ற ஊரில் சுவாமிகள் தங்கி இருநத காலத்தில் அவ்வூரில் ஒரு பிடாரி கோவில் உற்சவம் நடைபெற்றது. சுவாமிகள மடத்தினருகே தேர்வந்தது. அந்த மடத்தின் எதிரே ஒரு முருங்கை மரத்தை வீழ்த்தியது. அம்மரத்தில் உள்ள முருங்கைக் கீரையையும், முருங்கப்பூவையும் சுவாமிகள் உணவாக கொள்வது வழக்கம். மரம் அழிந்ததைக்கண்டு சுவாமி ஒரு பாடலைப்பாடினார். இதைப் பாடி முடித்ததும் பிடாரியின் தேர் அச்சு முறிந்துவிட்டது.

பொம்மையார் பாளையம் சுவாமிகளுக்கு குருஷேத்திரமாக அமைந்து இருந்தது. ஞானாசிரியர் சிவப்பிரகாச சுவாமிகளை

அடிக்கடி சந்தித்து ஞானாபதேசம் பெற்றுவந்தார். சிவப்பிரகாச சுவாமிகள் இறைவனோடு கலந்த செய்தியை கேள்விப்பட்டு சிவப்பிரகாச சுவாமிகள் பொம்மையாபுரம் வந்து குருவின் சந்நிதானத்தில் விழுந்து அழுது புலம்பினார். பின்னர் அவர் வில்லியனூர் வந்து அங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை வணங்கினார். பின்னர் புதுவைக்கு 10 மைல் தூரத்தில் உள்ள நல்லாற்றூர் வந்து, அங்குள்ள சிவன் கோவிலில் இருந்து 100 மீட்டர் தொலைவில் உள்ள ஒரு நூணா மரத்தின் கீழே அமர்ந்தார். அங்கேயே தமது தவத்தை மேற்கொண்டார். தவம் முடிந்து, தாம் சிவமாகும் நிலையை உணர்ந்தார் அவருக்கு முப்பத்திரண்டு வயது பிறந்தது இந்த உடற் கூட்டில் இருந்து விடுபட நினைத்தார். அதன்படி புரட்டாசி மாதத்தில் பவுர்ணமி திதியில் பரம் பொருளுடன் ஐக்கியமானார். எங்கு சுவாமிகள் சித்தியடைந்தாரோ அங்கேயே சுவாமிகளுக்கு சமாதி வைக்கப்பட்டது. அங்கு பூஜைகள் நடைபெற்று வருகிறது.

18. கம்பளி ஞான தேசிக சுவாமிகள்

புதுச்சேரியில் கடந்த நூற்றாண்டில் நம்மோடு நடமாடி, நம்மோடு பேசி, வாழ்ந்து இறைவனோடு கலந்தவர் ஓம் ஸ்ரீ கம்பளி ஞானதேசிக சுவாமிகள் புதுச்சேரியில் இருந்த கோரிமேடு செல்லும் வழியில் பொய்யாக்குளம் வெள்ளவாரிக்கு மேற்கில் தட்டாஞ்சாவடிக்கு அருகில் ருத்திர பூமிக்கு சமீபத்தில் அவரது சமாதி கோவில் அமைந்துள்ளது.

கம்பளி ஞான தேசிக சுவாமிகள் சென்னையில் இருந்து புதுச்சேரிக்கு வந்ததாக கூறப்படுகிறது. புதுவையில் பாக்கமுடையான்பட்டு, கவுண்டன்பாளையம், முத்தியால்பேட்டை போன்ற பகுதிகளில் இவர் நடமாடி வந்தார். சுவாமிகள்தான் ஆன்மிகச் சக்தியால் மக்களுக்கு பல நன்மைகளை செய்து உள்ளார். மக்களுக்கு கொடிய நோய் வந்துவிட்டால் அவர்களுக்கு பச்சிலையும், விபூதியையும் கொடுத்து குணமாக்குவார். ஞான தேசிக சுவாமிகள் ஒரு இடத்தில் இருந்து நினைத்த இடத்திற்குச் செல்லும் ஆற்றல் பெற்று இருந்தார்.



நமது சித்தர் சில சமயம் வாயில் ஒரு சுருட்டை வைத்துக் கொண்டு, அவ்வழியாக செல்பவர்களிடம் நெருப்பு கேட்பாராம். அவர்கள் தராவிட்டால் ஆட்காட்டி விரலைச் சுருட்டுக்கு முன்னால் காட்டுவார். சுருட்டில் குப்பென்று தீப்பற்றிக் கொள்ளுமாம்.

சுவாமிகள் ஒரு சமயம் ஓரு கள்ளுக்கடைக்குச் சென்று கையை நீட்டினார். கடையில் இருந்தவர் இன்னும் போணியாகவில்லை போ என்றார். சுவாமிகள் நீண்டதூரம் சென்று, ஒரு ஆலமரத்தடியில் அமர்ந்துவிட்டார். கள்ளுக்கடைகாரர் சிரமப்பட்டு சுவாமிகளை தேடிச் சென்று தன்னுடன் வரும்படி கூப்பிட்டார். நீ போ நான் வருகிறேன் என்றார் சுவாமிகள்.

கடைக்காரர் குதிரை வண்டியில் மிக வேகமாக கடைக்கு வந்து சேர்ந்தார் வண்டியை விட்டுக் கடைக்குள் நுழைந்தபோது கடையில் மன்னதாகவே சுவாமிகள் உட்கார்ந்திருப்பதை பார்த்து ஆச்சரியத்தில் உறைந்துவிட்டார்.

சுவாமிகள் பாக்காமுடையான்பட்டில் ஒரு வீட்டில் ஊறுகாய் கேட்டார். வீட்டுக்காரர் இல்லை போ என்றார். சிறிது நேரம் கழித்து வீட்டுக்காரர் வீட்டில் சனறு ஊறுகாய் பானையைப் பார்த்ததும் ஊறுகாய் புழுவாய் புழுத்திருந்தது. உடனே அவர் சுவாமிகளைத் தேடிச் சென்று மன்னிப்புக் கேட்டார். இதைத் தொடர்ந்து புழுக்கள் மறைந்து மீண்டும் ஊறுகாயாக மாறின.

ஒரு சமயம் சுவாமிகளை ஒரு விரியன் பாம்பு கடித்துவிட்டது இதைப்பார்த்து சுவாமிகளுடன் இருந்தவர்கள் பயந்தார்கள் ஆனால் சுவாமிக்கு ஒன்றும் ஆகவில்லை சுவாமியை கடித்த

பாம்போ செத்துக்கிடந்தது. சுவாமிகள் தன் ஆத்மசாதனைகள் அனைத்தையும் தண்ணீரிலேயே முடித்தார். எப்போதும் தண்ணிரிலேயே மிதந்து கொண்டிருப்பாராம் சுவாமிகள் சில நாட்களில் ஜல சமாதியடைந்தார். குளத்திலேயே அவர் உடல் கிடந்தது. இதை யாரும் கவனிக்கவில்லை மறு நாள் ஒரு குரல்கேட்டது. கம்பளி தண்ணியிலே! கம்பளி தண்ணியிலே! இந்த ஒலி தொடர்ந்து கேட்டவண்ணம் இருந்தது. பிறகு மக்கள் ஒன்றுகூடி இதைக் கவனித்தனர். சுவமிகளின் திரு உடலை தட்டாஞ்சாவடிக்கு அருகில் சமாதிவைத்து அதன் மேல் கோவில் கட்டி உள்ளனர். சமாதியின் மேல் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டு உள்ளது. சமாதிக்கு வெளியே கூரையால் வேயப்பட்ட ஒரு மண்டபம் உள்ளது. சமாதியைச் சுற்றியும் சுவாமியின் அருளைப்பெற்ற 7 பேரின் சமாதிகள் உள்ளன.

கம்பளி ஞான தேசிக சுவாமிகள் பெரிய மகான். இவர்தன் உடலில் கம்பளி போர்வை போர்த்தி இருந்ததால் எல்லோரும் இவரை கம்பளிப்பூச்சி சாமியார் என்று அழைத்தனர்.

19. பகவந்த் சுவாமிகள்

ஓம் ஸ்ரீ பகவந்த் சுவாமிகள் எல்லோரையும் உய்விக்க வந்தவர். இவரது பிறந்த ஊர் எது என்று தெரியாது. கணபதி சுவாமிகள், குருநாத சுவாமிகள், சுவாமிநாத சுவாமிகள் எனப்பல பெயரிட்டு அழைத்தனர். எப்போதும் பகவந்த் பகவந்த் என்று சொல்லிக்கொண்டேயிருப்பார். யாருக்காவது ஆசீர்வாதம் செய்யும்போது பகவந்தன் இருப்பான் காப்பாற்றுவான் என்று கூறுவார்.

சதா காலமும் தெய்வ நிலையிலேயே இருந்ததால் அவராக உணவு உண்ணமாட்டார். யாராவது ஊட்ட வேண்டும். தன்னை அண்டி வந்தவர்களுக்கு மோட்சத்தை தந்தருளும் ஆற்றல் படைத்தவர் சுவாமிகள்.

விருத்தாச்சலத்தில் தங்கி இருந்த அவரை தெய்வசிகாமணி முதலியார் என்பவர் கடலூருக்கு அழைத்து வந்தார். அங்குள்ள தோட்டத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்து பக்தர்களுக்கு நோய் தீர்த்தார். விஷம் தீண்டியவர்களை காப்பாற்றினார். பலருக்கு குழந்தை வரம் கொடுத்தார்.

சுவாமிகள் சிவ ஐக்கியமாவதற்கு 40 நாட்கள் முன்னதாக உணவு உண்பதை நிறுத்திவிட்டார். சுவாமிகள் முக்தியடையும் தினத்தன்று பக்தர்கள் கற்பூரத்தை கொளுத்தி சுவாமிகளுக்கு ஜோதியாக காட்டினார்கள். அப்போது சுவாமிகள் பல வழியில் பாக்கியமில்லை கச்சேரி வாசல் காத்திருந்தால் உண்டு. ஒரு பயலும் வழிபட்ட பயலாயில்லை என்று திரும்ப, திரும்ப கூறினார். மேலும் சுவாமிகள் இங்கு அம்பாள் பிரசன்னமாயிருப்பாள். இங்கு ஓர் அற்புதம் நிகழும் இது அம்பிகையின் ஆலயமாகும் என்று அருளினார்.

விரோத கிருது வருஷம் மார்கழி மாதம் 5 ஆம் தேதி 18-12-1889 புதவாரம் கிருஷ்ணபட்சம் ஏகாதசி திதி சித்திரை நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் இரவு 11 மணிக்கு பரம்பொருளோடு ஐக்கியமானார்.

திருப்பாதிரிப் புலியூருக்கு அடுத்த புதுப்பாளையத்தில் கெடில நதிக்கரையில் சுவாமிகளுக்கு சமாதி எழுப்பப்பட்டுள்ளது. சமாதியில் ராஜராஜேஸ்வரி திரு உருவம் பிரதிஷ்டை செய்யப்பட்டு பூஜை நடைபெற்றுவருகிறது.

20. சாந்தாநந்த சுவாமிகள்

புதுச்சேரியில் உள்ள எல்லைப்பிள்ளைச் சாவடியில் ஸ்ரீ சாரதா சிவகங்கை பீடத்திற்கருகில் ஓம் ஸ்ரீ சாந்தாநந்த சுவாமிகள் அமர்ந்த நிலையில் பக்தர்களுக்கு அருளாசி வழங்கி கொண்டு இருக்கிறார்.

சுவாமிகள் 1854-ம் ஆண்டு டிசம்பர் மாதம் சென்னையில் பிறந்தவர். இவரது இயற்பெயர் சீனிவாசலு நாயுடு. நேஷனல் வங்கியில் குமாஸ்தாவாக பணியாற்றினார். பின்னர் தெய்வீக நிலை அடையப்பெற்று வங்கிப் பணியில் இருந்து நீங்கி ஆத்ம சாதனையில் ஈடுபட்டார். சுவமிகளின் குருவான குரு சதாநந்த சுவாமிகள் இவருக்கு சாந்தாநந்த சுவாமிகள் என்று பெயரிட்டார்.

சுவாமிகள் அடிக்கடி புதுச்சேரி வருவார் புதுவையில் வைசியாள் வீதியில் சீர்காழி கிருஷ்ணசாமி செட்டியார் வீட்டில் தங்குவார். சுவாமிகள் யாரைப் பார்த்தாலும் ஜபநிஷத்துகளைப் படிங்கள் என்று கூறுவார் எவரைப் பார்த்தாலும் கீதையைப் படிக்கச் சொல்லுவார். சுவாமிகளின் அந்திமக்காலம் நெருங்கியதை அறிந்து நிஷ்டையில் அமர்ந்தினார்.

சீர்காழி கிருஷ்ணசாமி செட்டியார் என்பவர் சென்னை சென்றார். சுவாமிகளை தரிசித்தார். சுவாமிகள் தாம் மறைந்தவுடன் தனது உடலை அவரிடம் ஒப்படைக்கும்படி கூறினார். அதன்படி சுவாமிகள் பிலவ வருடம் ஆடி மாதம் 20-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை, உத்திரட்டாதி நட்சத்திரம் அன்று சென்னையில் சித்தி அடைந்தார். (ஜூலை மாதம் 1901) சுவாமிகளின் விருப்பப்படியே கிருஷ்ணசாமி செட்டியார் சுவாமிகளின் உடலைப் புதுவைக்கு எடுத்துவந்து எல்லைப் பிள்ளைச்சாவடியில் சமாதி செய்தார்.

21. நாகலிங்க சுவாமிகள்

உலக மக்கள் நன்மைக்காக மாணிக்கவாசக சுவாமிகள் சொல்ல இறைவனால் எழுதப்பட்ட திருவாசகத்தைப் போற்றிப் பாதுகாத்துப் புதுவைக்கு கொண்டுவந்த பெருமை நாகலிங்க சுவாமிகளையே சாரும்.

புதுச்சேரி அம்பலத்தாடையார் மடத்தில் தங்கி இருந்து சிவனருளால் வய்க்கப்பட்ட சித்தாடலால் அன்பர்களின் குறைகளைப் போக்கினார். சுவாமிகள் தங்கியிருந்த இடத்தின் உள்ளே சுவாமிகளின் சமாதி அமைக்கப்பட்டுள்ளது. சமாதிமேல் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

திருவாசக பெருமை

திருவாசகம், திருக்கோவையின் இரண்டு நூல்களையும் மாணிக்கவாசக சுவாமிகள் சொல்ல இறைவன் மனித உருவம்கொண்டு எழுதி கைச்சாத்திட்டு சிதம்பரம் நடராஜர் பெருமாள் ஆலயத்தில் உள்ள கனகசபையில் வைத்துவிட்டு மறைந்து விட்டார். இறைவனால் எழுதப்பட்ட திருவாசகத்தை யாரிடம் ஒப்படைப்பது என்ற பிரச்சினை ஏற்பட்டது.

இந்நூலை நம் சிவகங்கையில் விட்டுவிடுங்கள். அது யாரிடம் போய்ச் எசருகின்றதோ அவரிடம் இருக்கட்டும் என்றது. அவ்வாறே அந்தநூல் சிவகங்கையில் விடப்பட்டது. நூல் ஒரு சிவபக்தரிடம் சென்று நின்றது. அவர் அதை தன்கரத்தில் எடுத்துக்கொண்டு வீட்டுக்கு எடுத்து வந்தார். அன்று முதல் அந்த இடத்துக்கு ஸ்ரீ பாதபூஜை அம்பலத்தடையார்மடம் என்ற பெயர் வழங்கலாயிற்று.

இறைவன் அருட்குறிப்புபடி நாகலிங்க சுவாமிகள் திருவாசகம் இருந்த வெள்ளிப் பெட்டகத்தை எடுத்துக்கொண்டு கடும் புயலுக்கு மத்தியில் சில அடியார்களைத் துணைக்க அழைத்துக் கொண்டு புதுவைக்கு வந்து சேர்ந்தார். அங்கு சுவாமிகளுக்கு சக்திகளும் சித்துகளும் பெருகின.

சுவாமிகள் தான் இறைவனுடன் கலக்கும் நாளை ஞானதிருஷ்டியால் அறிந்து சீடர் ஒருவரைப் பக்குவப்படுத்தி அவருக்கு பட்டத்தை அளித்து தனது பீடத்தில் அமர்த்தினார். அதன் பிறகு ஜீவன் முக்தி பெற்றார்.

அம்பலத்தடையர் மடத்தில் இருக்கும் திருவாசகம் அமைந்த வெள்ளிப் பெட்டகத்திற்கு தினமும் பூசை செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் மகாசிவராத்திரி அன்று இரவு பெட்டகம் திறக்கப்பட்டு பூசை செய்யப்படுகிறது. இந்த நிகழ்வில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வார்கள்.

22. அழகர் சித்தர் சுவாமிகள்

புதுச்சேரி மாநிலம் வில்லியனுரை அடுத்த தென்னம்பாக்கம் கிராமத்தில் ஸ்ரீ அழகர் சுவாமிகள் ஜீவ சமாதி அமைந்துள்ளது.

சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு தென்னம்பாக்கம் கிராமத்தில் உள்ள ஐயனார் கோயிலில் ஸ்ரீ அழகர் சுவாமிகள் என்ற அழகப்ப சுவாமிகள் தங்கி இருந்தார். அங்கு வரும் மக்களுக்கு எல்லாம் தீராத வியாதிகள், இடையூறுகளை நீக்கி சுகம் அளிப்பார். பேய், பிசாசுகள் இவரைப் பார்த்தாலே ஓடிவிடும் பாம்பு கடித்தவர்களுக்கு மந்திரிப்பார். பயிர்களுக்குவரும் நோய்களையும் தீர்த்துவைப்பதில் பெயர் போனவர் சுவாமிகள் மகிமை பரவத் தொடங்கியதும் மக்கள் இவரை நாடி செல்லத் தொடங்கினர்.

சுவாமிகள் இரவும், பகலும் எப்போதும் ஐயனார் கோயிலில் உள்ள பெரிய ஆலமரத்தடியில்தான் படுத்து இருப்பார். சில நேரங்களில் இவர் மேல் நல்லபாம்பு சுற்றிக் கொண்டு படம் எடுத்து இருக்குமாம். பிறகு போய்விடும். ஊர்மக்கள் அன்புடன்

இவரை தங்கள் வீட்டுக்கு வரும்படி அழைத்தால் இதுதான் என் இடம். நான்வேறு இடம் போகமாட்டேன் என்று கூறிவிடுவார்.



அழகர் சுவாமிகளுக்கு 70 வயது பிறந்தது. சித்திரை மாதம் முதல் திங்கட்கிழமையன்று காலையில் பொதுமக்களை வரவழைத்து உங்கள் நலனுக்காக நான் இறைவனை வேண்டிக்கொண்டே இருக்கிறேன். இந்த முதல் சோமவார பூஜையை விசேஷமாக செய்வோம் என்று சொல்லிவிட்டு ஐயனார் கோவில் அருகே சென்றார். திடீரென்று யாரும் எதிர்பாராத விதத்தில் ஏற்றம் இறைத்துக கொண்டிருந்த கிணற்றில் இறங்கினார். அங்கேயே மூழ்கி விட்டார். சுவாமிகள் வராததால் அங்கிருந்தவர்கள் சுவாமிகளை காணமால் கிணற்றில் இறங்கி தேடிப்பார்த்தனர். சுவாமிகள் உருவம் கிடைக்கவே இல்லை. சுவாமி அருள் ஜோதி ஆகிவிட்டார்கள்.

அன்று முதல் அந்த ஊர்மக்கள் சுவாமிகளை வணங்க தலைப்பட்டனர். ஒவ்வொரு வருடமும் சித்திரை மாதம் முதல் திங்கட் கிழமையன்று மக்கள் ஒன்றுகூடி திருவிழா கொண்டாடுகிறார்கள்

அழகர் சுவாமிகள் சென்று இறங்கிய மூடப்பட்ட கிணற்றின் மேல்தான் எல்லா அபிஷேகமும் நடைபெறுகிறது. சமாதிக்குமேல் கூரை வேயப்பட்டுள்ளது.

சமாதிக்கு பெண்கள் யாரும் வருவதில்லை. பெண்கள் யாரும் செல்லக்கூடாது என்றுநியதியும் உள்ளது. சமாதி கோவில் அமைந்துள்ள இடம் பனைமரங்களும், மற்ற மரங்களும் அடர்ந்துள்ள ஒரு தோப்பாக விளங்குகின்றது.

சுவாமிகள் சமாதிக்கு வடக்கே சுமார் 3 மைலுக்கு அருகே நல்லாற்றூர் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் சமாதி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

23. சக்திவேல் பரமானந்த குரு சுவாமிகள்

எங்கும் இறைவன் மயம் என்ற சித்தாந்தத்தை நடமாடும் தெய்வமாக இம் மண்ணுலகில் காட்சியளித்து மகோன்னத புகழ் பெற்றவர். நம் ஸ்ரீ சக்திவேல் பரமானந்த குரு சுவாமிகள்.

175 ஆண்டுகளுக்கு முன்பு கடலூரில் அந்தணர்மரபில் தோன்றினார். ஆத்ம ஞானமே தமக்குத் தேவை, தாம் காணவேண்டிய காட்சி ஆத்மதரினமே, என்ற நிலையில் கங்கை, காசி, போன்ற இடங்களில் எல்லாம் சுற்றிவிட்டு இறுதியாக புதுச்சேரி வந்து மக்களுக்கு அருளாடல் புரிந்தார்.

குண்டலமான முகம், குமிழ்சிரிப்பு, அருட்பார்வை, சாதாரண நடுத்தர உயரம், எலுமிச்சம் பழம் போன்ற மேனி,

இறைவா நீ எங்குமிருக்கிறாய் உன்னை நான் பார்க்கிறேன். இப்படியே இருந்தால் போதும் என்று கூறி அனந்த கண்ணீர் வடிப்பார். சுவாமிகள் ஆனந்தமயமாக காட்சியளித்தார். சுவாமிகளின் அற்புத ஆற்றல் அறிந்து அவரிடம் அருளாசிபெற

பாமரமக்கள் வந்து குவிந்தனர். சுவாமிகளின் மகிமையால் தீராத நோயாளிகளின் நோய் குணமாகியது. அப்பகுதி மக்களின் துன்பம் சிறுக, சிறுக மறைந்தது. தங்கள் கஷ்டங்களை யாராவது சுவாமிகளிடம் சொன்னால், இதோ இறைவன் இருக்கிறானே! கஷ்டமெங்கே! ஆனந்தமாக இருக்கிளான் சந்தோஷமாக போ என்பார். வந்தவரின் கஷ்டம் அக்கணமே மறைந்துவிடும்.

24. மௌலா சாஹிப் மெய்ஞானி

அளவற்ற அன்புள்ளவனும், நிகரற்ற அருளாளனுமாகிய ஆண்டவன் அல்லாவின் அருளாற்றல் பெற்றவர் மவுலானா சாகிப் சுவாமிகள்.

வாழ்ந்த காலத்தில் பலசித்தாடல்கள் புரிந்து மக்களுக்கு நன்மைகள் பலசெய்த இம்மாகனின் சமாதி புதுச்சேரி பாலியே வீதியில் அமைந்துள்ளது.

சுவாமிகள் ஆற்காடு என்ற ஊரில் வெள்ளாளர் குலத்தில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்துவந்தார். தாய், தந்தை பெயர் தெரியவில்லை இறை உணர்வினால் ஆட்கொள்ளப்பட்டு ஒரு நாள் புதுவைக்கு வந்து சேர்ந்தார். சர்வகாலமும் இறைச் சிந்தனையிலேயே வாழ்ந்து வந்தார்.

புதுவை கடலோரப் பகுதி, லால்பகதூர் வீதியில் பல ஆண்டுகள் இருந்து இறைப்பணியாற்றிவந்த இவர் அங்கேயே சமாதி ஆனார். தற்போது 7-ஆம் நாள் திருச்சபை இருக்கக்கூடிய இடத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

நாளடைவில் பிரெஞ்சுக்காரர்கள் அவ்விடத்தில் குடியேறினர் அப்பகுதி மக்கள் வேறு இடத்திற்கு குடியேறினர். சுவாமிகளின் சமாதியை அப்படியே விட்டுவிட்டு வந்துவிட்டார்கள். சுவாமிகள் பள்ளி வாசல் உள்ள காஜியார் ஊர் நாட்டாண்மைக்காரர் கனவில் தோன்றி தனது சமாதியை பெயர்த்து தற்போதுள்ள பள்ளிவாசலுக்கு இடையே அடக்கம் செய்யும்படி கூறினார். பிரெஞ்சு கவர்னர் கனவிலும் தோன்றி இதுபற்றி அறிவித்தார்.

ஊர் நாட்டாண்மைக்காரர்கள் பிரெஞ்சு கவர்னராக இருந்த பிராந்தவா மார்த்தேன்டம் சென்று இது சம்பந்தமாக பேசினார். அதிகாரிகள் அதைக்கேட்டு நகைத்தனர். ஊர் பெரியவர்கள் தாங்கள் கூறியது உண்மை இல்லாவிட்டால் அபராதத்தை ஏற்கதயார் என்றனர். இதற்கு அதிகாரிகள் ஒப்புக்கொண்டனர். ஒரு வெள்ளிக்கிழமையன்று இஸ்லாமிய பக்தர்கள் வேதம் ஓதியபடியே சுவாமிகள் அடக்கம் செய்யப்பட்ட இடத்துக்கு வந்தனர். சுவாமிகளின் சமாதியை தோண்டினர் அப்போது அனைவரும் ஆச்சரியபடும் வகையில் மண்ணில் இருந்து ரத்தம் பீறிட்டு அடித்தது. சுவாமிகள் அடக்கம் செய்யப்பட்டுள்ள பெட்டியை ஊர்வலமாக தற்போது அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்திற்கு எடுத்துச் சென்றனர். பெட்டியை பிரித்து உள்ளே பார்த்தார்கள். சுவாமிகள் உடல் இளம்புன்னகையோடு தூங்குவதைப் போன்று காட்சியளித்தது.

எல்லோரும் சுவாமிகளின் உடல் நிலையைக்கண்டு ஆச்சரியப்பட்டனர். பின்னர் இஸ்லாமிய மதக்குருமார்களும் நாட்டாண்மைக்காரர்களும் சுவாமிகளை மீண்டும் துணியால்

போர்த்தி பெட்டியை மூடி, தற்போது உள்ள இடத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ளது. அந்த இடத்தில் ஒரு அழகிய தர்காவும் கட்டப்பட்டது.

சுவாமிகள் பற்றி இன்னொரு வரலாறும் சொல்லப்படுகிறது. சுவாமிகள் உடலமைந்த பெட்டி வங்கக்கடலில் மிதந்து வந்ததாகவும் கடலில் சென்றிருந்த மீனவர்கள் இதைப்பார்த்து முஸ்லிம் பெரியவர்களிடம் கூற, அவர்கள் அங்குவந்து பெட்டியை எடுத்து, தற்போது 7-வது திருச்சபை இருக்கும் இடத்தில் அடக்கம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

தர்காவிற்குப் பக்கத்திலேயே பள்ளி வாசல் அமைந்துள்ளது. அன்று முதல் இன்றுவரை பிரதி வியாழக்கிழமையிலும், வெள்ளிக்கிழமையிலும் மக்கள் கூட்டமாக வந்து பாதியா ஒதுகின்றனர். இன்றும் அப்பகுதியில் இரவு நேரத்தில் சூக்கும உடலில் சுவாமிகள் உலவி வருவதாக கூறுகின்றனர்.

ஒவ்வொரு வருடமும் ஹாஸ்பிறை 10ஆம் நாளில் கொடியேற்றி 20ஆம் நாளில் சந்தனக்குடத்தை ஊர்வலமாக கொண்டுவந்து தர்காவில் உள்ள சுவாமிகளின் சமாதியில் வைத்து வழிபடுகின்றனர்.

25. அக்கா சுவாமிகள்

ஞான நிலையில் நடமாடும் ஆத்ம ஞானி ஓம் ஸ்ரீ அக்காசுவாமிகள் பெண்களை தம் சகோதரிகளாகக் கருதினார். யாரைப் பார்த்தாலும், அக்கா, அக்கா என்று கூப்பிடுவார். ஆகவே அவர் அக்கா பரதேசி என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.

வாலிப பருவத்தில் சுவாமிகள் போலீஸ்காரர் வேலைப்பார்த்து வந்தார். ஒருநாள் தம் மேலதிகாரி ஒருவர் மீன் வாங்கி வீட்டில் கொடுக்கச் சொன்னார். சுவாமிகள் அதை வாங்கிகொண்டு தனது பெரியம்மாள் வீட்டில் கொடுத்து விட்டார். அன்று இரவு, மேலதிகாரிக்கு மீன் வீட்டுக்கு வரவில்லை என்று தெரிந்தது. அவர் சுவாமிகள் மீது கோபம் கொண்டார் மறுநாள் அவரை வேலையில் இருந்து நீக்குவது என்று முடிவு செய்தார். மறுநாள் காலை அலுவலகம் வந்த அவர் சுவாமிகளிடம் மீனைப்பற்றி விசாரித்தார். சுவாமி மீன் பத்திரமாக இருக்கிறது என்று கூறி தன் பெரியம்மாவிடம் கொடுத்த மீனைக் கொண்டு வந்து அதிகாரியிடம் கொடுத்தார் அப்போது அதிசயமாக அதிகாரி

கைகளில் இருந்த மீன்களுக்கு உயிர் வரப்பெற்று துள்ளிக் குதித்தன இதைப்பார்த்த அதிகாரி அதிர்ச்சி அடைந்தார். உடனே சுவாமிகள் சாகும் பிணங்கள் இன்று செத்த பிணத்தை தின்னும் மனிதனிடம் சேவகம் செய்ய விரும்பேன் என்று கூறிவிட்டு புதுவையை நோக்கிப் புறப்பட்டார்.

ஒருசமயம் சுவாமி யாழ்ப்பாணம் சென்று இருந்தார். அங்கு பெரும் பணக்காரர் ஒருவர் சுவாமிகளிடம் சுவாமிகள் அன்ன அபிஷேகம் செய்து கொள்ளுமா? என்று அலட்சியமாக கேட்டார். அதற்கு சுவாமிகள் தாராளமாக செய்யலாம் என்று பதிலளித்தார். உடனே அந்த செல்வந்தர் பல அண்டாக்களால் சாதத்தை வடித்து சுடச்சுட சுவாமிகளின் மீது கொட்டினார்கள். சுவாமிகள் அமைதியாக நிஷ்டையில் அமர்நதார்.

அன்ன அபிஷேகம் முடிந்ததும் சுவாமிகள் எமலோகம் சென்று இருப்பார் என்று கேவலமாக பேசி சாதத்தை தள்ளி சுவாமிகளைப் பார்த்தனர். சுவாமிகள் ஆடாது. அசையாது இறைபரம் பொருளுடன் தொடர்பு கொண்டு இருந்தார். ஆனால் அன்ன அபிஷேகம் செய்தவனின் கண்பார்வை போய்விட்டது, குருடனானான் உடனே அவன் தன் தவறை உணர்ந்து சுவாமிகளிடம் மன்னிப்புக் கேட்டான். பிறகு சுவாமிகள் புதுவைக்கு வந்தார் குருடனும் உடன் வந்தார். தன் தவறை நினைத்து தினமும் கண்ணீர்விட்டு கதறி அழுதான் ஒரு நாள் அதோ இருக்கும் திருமுருகனைப் பார் என்று சொன்னார் சுவாமி. பார்வை இழந்தவன் பார்க்க அவனுக்கு பார்வை வந்தது.

சுவாமிகள் மண்ணாலேயே ஒரு பிள்ளையாரை செய்து அதற்கு பூஜை செய்துவந்தார். அது இன்றும் புதுவை மேலண்ட புல்வார் வீதியில் சாலை விநாயகர் என்ற திருநாமத்தோடு விளங்குகிறது.

ஸ்ரீ அக்கா சுவாமிகள் சமாதி முத்தியால்பேட்டை குதிரைக்குளம் அருகே அமைந்துள்ளது. தற்போது அந்த வீதிக்கு அக்கா பரதேசி வீதி என்று பெயர் அதனால் சுவாமிகள் சாலை விநாயகர் முலம் தான் பக்தர்களுக்கு நல்லாசி வழங்கிவருகிறார்.

இன்னும் ஏராளமான மக்கள் சாலை விநாயகரை வணங்கி தங்களுக்குள்ள துன்பங்கள், நோய்கள் நீங்கி மகிழ்ச்சியோடு இருப்பதாக பேசிக் கொள்கிறார்கள்.

ஓம் ஸ்ரீ அக்காபரதேசி சுவாமிகள் தமிழ் பிரமோதூத ஆண்டு ஆனிமாதம் ஆங்கில வருடம் 1872 ஜூன் மாதம் இறைவனுடன் இரண்டரக் கலந்தார். அவர் சமாதியில் பெரிய கோயில் கட்டப்பட்டுள்ளது. குரு பூஜையும் நடைபெற்று வருகிறது.

26. மகான் படேசாயபு

மகான் படேசாயபு சிறந்த ஆத்ம ஞானி படே என்றால் பெரிய என்று பொருள் இப்புனித பெரியார் உயர்ந்த நிலையில், இறைவனின் பேராற்றலை உணர்ந்து மக்களுக்கு நன்மை புரிந்து வந்ததால் மக்கள் அவரை படேசாயபு என்று அழைத்தனர்.

கண்டமங்கலம் அருகில் உள்ள சின்னபாபு சமுத்திரம் என்ற இடத்தில் இம் மகானின் சமாதி மிக அமைதியான சூழ்நிலையில் அமைந்துள்ளது சுவாமிகள் புதுவை மாநிலம் திருக்கனூரில் சில ஆண்டுகள் தங்கியுள்ளார்.

நோய்க் கொடுமையால் அவதிப்படுபவர்கள் சுவாமிகளை தேடிச்சென்று தங்கள் குறைகளை கூறுவார்கள். அவர்களை சுவாமிகள் தனது அருட்பாவையால் உற்று நோக்குவார். சிறிது நேரம் கழித்து தலையை அசைப்பார். நோய் குணமாகிவிடும். சிலரை அங்குள்ள ஒரு மரத்தை சுற்றிவரும்படி ஜாடைக் காட்டுவாராம் அவர்கள் அவ்வாறு செய்யும் பட்சத்தில் நோய்

குணமாகிவிடுமாம் சுவாமிகள் சிறு குழந்தைகளிடம் பிரியம் உள்ளவர் அவர்களிடம் விளையாடிக்கொண்டு இருப்பார். அவர்கள் கையில் மண்ணை அள்ளிக்கொடுத்து கையை மூடச் சொல்வார் சுவாமிகள் குழந்தைகளை அழைத்து குழித் தோண்ட சொல்வார். குழி தோண்டிய குழந்தைகளின் கையில் மண்ணை கொடுத்தார் கையை மூடிக்கொண்டார்கள். குழியில் உட்கார்ந்து குழிக்குள் மண்ணைத் தள்ளி மூடிவிட்டு கையை திறந்துபாருங்கள் என்றார். அவ்வாறே குழந்தைகள் செய்தனர். பின்னர் கைகளை திறந்து பார்த்தனர் கையில் மிட்டாய்கள் இருந்தன.

மகான் படேசாயபு சின்னபாபு சமுத்திரத்தில் வெட்ட வெளியில் கி.பி. 1868 பிப்ரவரி மாதம் 12ஆம் தேதி செவ்வாய்கிழமை ஆயில்ய நட்சத்திரத்தில் சமாதி அடைந்தார். சமாதி எண்கோண வடிவில் கட்டப்பட்டுள்ளது. உள்ளே மகானின் திரு உருவப்படம் வைக்கப்பட்டுள்ளது. முன்மண்டபமும், மக்கள் சுற்றிவருவதற்கு விசாலமான இடமும் உள்ளது.

ஒவ்வொரு வாரமும் செவ்வாய்கிழமை தோறும் சமாதிக்கு சிறப்பு பூஜை நடந்துவருகிறது, சமாதியில் அணையா விளக்கு ஒளிவிட்டு எரிந்து கொண்டு இருக்கிறது.

ஒரு சமயம் விளக்கில் எண்ணை தீர்ந்தது, அணையப்போகும் நேரத்தில் அங்கு படுத்திருந்த ஒருவரின் கனவில் சென்று தட்டி எழுப்பினார் மகான் படேசாயபு, உறங்கியவர் எழுந்து வந்து எண்ணை ஊற்றினார்.

ஆண்டுதோறும் மகான் படேசாயபுவுக்கு குரு பூஜை சிறப்பாக




நடநது வருகிறது. எல்லோருக்கும் அன்னம் அளிக்கப்படுகிறது, மக்கள் தங்கள் வீட்டில் இருந்து சாதம் செய்து அண்டாவில் போட்டு விடுகிறார்கள்.

27. அரவிந்தர்

மனிதகுலத்தை காக்கும் உயிர்ஜீவனாக அவதரித்தவர். மகான் ஸ்ரீ அரவிந்தர் கொல்கத்தா நகரில் 1872ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ஆம் தேதி பிறந்தார். தொடக்கக் கல்வியை டார்ஜிலிங்கிலும் உயர் கல்வியை இங்கிலாந்திலும் பயின்றார். படிப்பை முடித்து இந்தியா திரும்பியபின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். பத்திரிகையில் உணர்ச்சிமிக்க கட்டுரைகள் எழுதினார். சுயராஜ் என்ற வார்த்தையை முதலில் பயன் படுத்தியவர் அரவிந்தரே.

1901-ல் அரவிந்தர் மிருணாளிதேவி என்ற பெண்ணை திருமணம் செய்துகொண்டார். வந்தே மாதரம் பத்திரிகை மூலம் அரசியலுக்கு புது வடிவங்கள் மற்றும் சுதேசி இயக்கங்களுக்கு உத்வேகம் அளித்தார். 1905 மே மாதம் பிரிட்டிஷ் அரசு அவரை கைதுசெய்து தனிமை சிறையில் அடைத்தது. அலிப்பர் ஜெயிலில் இருந்தபோது எல்லாமே இறைவன் செயல் என்ற ஆன்மீக சித்தியை அடைந்தார். சிறையில் இருந்து வெளியே வந்ததும் இறைவன் தம்மை வழிநடத்தியதை உத்தர்பாரர் என்ற இடத்தில் அறிவித்தார்.



அரவிந்தர் அரசியலிலிருந்து முற்றிலும் விலகி முழுநேர யோக சாதனையில் ஈடுபட்டார். பிரிட்டிஷ் அரசு எப்படியாவது அரவிந்தரை கைது செய்யவேண்டும் என்று கருதியது.

1910-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ஆம் தேதி அரவிந்தர் சந்திரநாகூரில் இருந்து கப்பலில் புறப்பட்டு பிரெஞ்சு ஆட்சியில் உள்ள புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தார். அவரை மகாகவி சுப்ரமணிய பாரதியார் உள்ளிட்டோர் வரவேற்றனர். புதுவையில் முதலில் அவர் கலவை சுப்புராயசெட்டியார் வீதியில் உள்ள சங்கர செட்டியார் வீட்டின் மாடியில் தங்கினார். புதுச்சேரியில் அரவிந்தர் நிரந்தரமாக தங்குவதறகு உள்ளூர் பிரமுகர்கள் சங்கரன் செட்டியார், முருகேசன் செட்டியார் கையெழுத்திட்டு பிரெஞ்சு அரசுக்கு உறுதிமொழி அளித்தானர்.

புதுச்சேரியில் அரவிந்தர் மாதா கோவில் தெருவிலும், பிரான்சுவா மார்த்தேன் வீதிக்கும் இருப்பிடத்தை மாற்றினார். திருக்குறளில் 15 குறள்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

1914-ம் ஆண்டு மார்ச் மாதம் 29-ஆம் தேதி பால் ரிச்சர்டும் அவரது மனைவி மீராரிச்சர்டும் (ஆசிரம அன்னை) அரவிந்தரை சந்தித்தனர். அரவிந்தர் ஆத்ம சாதனையில் ஈடுபட்டார். தமது அனுபவத்தில் கண்ட மகத்தான ஆன்மிக உண்மைகளை சாவித்திரி என்ற ஆங்கில மகாகாவியத்தில் வெளிப்படுத்தி உள்ளார். இது 23 ஆயிரம் வரிகள் கொண்டது. மூன்று பாகங்களையும், பன்னிரண்டு பகுதிகளையும் கொண்டது. அன்னை பராசக்தி, பிறப்பு, தெய்வீகபனி, விதி, யோகம், மரணம், நிலையான இரவு போன்ற பகுதிகளை சிறப்பாக எழுதி உள்ளார்.

தெய்வீக வாழ்ககை, இறைக்கட்டுரைகள் மறுபிறப்பின் பிரச்சினைகள் உள்ளிட்ட 30 புத்தகங்களை எழுதி உள்ளார். அரவிந்தர் யோகநெறிகளுக்கு புதுவை ஆசிரமத்தை சாதனை மையமாக்கினார். ஸ்ரீ அன்னை, ஸ்ரீ அரவிந்தர் 1950 டிசம்பர் 5-ஆம் தேதி தம் பூதஉடலை நீத்தார். அரவிந்தரின் உடலை தெய்வீக போராளி சூழ்ந்து கொண்டு இருந்தது. டிசம்பர் 9-ந் தேதி ஸ்ரீ அன்னை விருப்பப்படி புதுவை ஆசிரம வளாகத்தில் உள்ள மஞ்சள் கொன்றை மலர் மரத்தடியில் ஸ்ரீ அரவிந்தருக்கு சமாதி அமைக்கப்பட்டது.


28. அன்னை

பூரண யோகத்தின் தந்தையாக விளங்கிய ஸ்ரீ அரவிந்தரிடம் அடைக்கலம் புகுந்தார் தெய்வீகத்தின் திரு அவதாரமாகிய ஸ்ரீ அன்னை.

பல ஆயிரக்கணக்கான மக்களைக் கருணையோடு காத்து அவர்களை ஆன்மிகப்பாதைக்கு அழைத்துச் செல்லும் ஆன்மீக தீபச்சுடர். மகா யோகிகளின் வரிசையில் இடம் பெறும் ஒரே பெண் அரவிந்த ஆசிரமத்தின் அன்னையாவார்.

ஸ்ரீ அன்னை 1878-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ஆம் தேதி பிரான்சில் உள்ள பாரிஸ் மாநகரில் பிறந்தார். தந்தை பெயர் மாரிஸ் அல்பாஸா இவர் டர்கி நாட்டில் பிறந்தவர். தாயார் பெயர் மதில்டி இஸ்மாலுன். இவர் எகிப்தில் பிறந்தவர் இருவரும் தம் குழந்தைக்கு இட்ட பெயர் மீரா அல்பாஸா. இவர் பிறப்பதற்கு 3 ஆண்டுக்கு முன்னரே இவரது பெற்றோர் பாரீஸ் வந்தனர்.

மீரா அல்பாஸா தன் நான்காவது வயதிலேயே யோகம் பயில ஆரம்பித்தார். இறைப் பேருணர்வு அவரை யோக சாதனைக்கு அழைத்துச் சென்றது.



1905-ஆம் ஆண்டு அல்ஜிரியாவில் உள்ள டெல்ம்கா என்ற ஊருக்குச் சென்றார். அங்கு மந்திரசக்தியில் பேராற்றல் மிக்க மேக்ஸ்தியான் என்பவரிடமும் அவர் மனைவியிடமும் மறைமுக சக்திகளைப் பற்றிப் பயின்றார்.

மேக்ஸ்தியாளின் மனைவி உடலினுள் இருப்பது போன்ற சூக்கும உலகத்திற்கு சென்று அதிசூக்கும உலகத்திலும் வாழ்ந்தார். இப்படி பன்னிரண்டுமுறை செய்திருக்கிறார். அதை அவரே விவரிக்கிறார்.

நான் 1906-ல் மோனறியா தியானுடன் கப்பலில் சென்றுகொண்டு இருந்தேன் அப்போது பயங்கர புயல் அடித்துக்கொண்டிருந்தது. கடல் கொந்தளத்தது. தியான் என்னைப்பார்த்து போய் அதை நிறுத்து என்று சொன்னார். நான் என் உடலைவிட்டு புறப்பட்டுக் கடலுக்கு சென்றேன். பல உருவங்களற்ற சக்திகள் வெறிபிடித்து ஆடிகொண்டிருந்தததை கவனித்தேன் அவற்றிடம் அமைதியாகச் சென்று உங்கள் செயல்களை நிறுத்திவிடுங்கள் என்று அன்போடு சொன்னேன். இது அரைமணி நேரம் நடந்தது. கடல் அமைதியானது. நான் என் உடலுக்குத் திரும்பி வந்தேன். மக்களெல்லாம் மகிழ்ச்சியாகக் காணப்பட்டார்கள்.

அன்னை ஸ்ரீ அரவிந்தரை 1914 மார்ச் 20-ந் தேதி புதுச்சேரி ஆரியா என்னும் பத்திரிகையில் பணிபுரிய வேண்டி சந்தித்தார். தான் கனவில் கண்ட கிருஷ்ணரை நேரில் தரிசித்ததாக உணர்ந்தார். பின் முதலாம் உலகப்போர் காரணமாக புதுச்சேரியைவிட்டு ஜப்பான் நாட்டிற்கு சென்று சில ஆண்டுகள் வாழ்ந்தார்.

1920-ல் அவர் மீண்டும் புதுச்சேரிக்குவந்து வசித்தார். அரவிந்தர் மற்றும் அவரை பின்பற்றுபவர்களுடன் தங்கினார். அரவிந்தர் ஆசிரமத்தில் அரவிந்தருடன் ஒருங்கிணைந்த யோகாவினைப் பற்றி மக்களுக்கு போதனை செய்தனர்.

அரவிந்தரின் பிறப்பிற்குபின்பு ஆசிரமத்தில் பள்ளிக்கூடம் தொடங்கினார். ஆரோவில் எனும் தனனாட்சி நகரத்தினை தோற்றுவித்தார்.

இந்த நகரத்தின் நோக்கம் இங்கு உள்ள மக்கள் தேசியம், மொழி, சமயம், சாதி ஆகிய எந்த வேறுபாடுகளும் இன்றி இருப்பதை அடிப்படையாகக் கொண்டு செயல்படுகிறது.

ஸ்ரீ அன்னை 1973 நவம்பர் 17-ஆம் தேதி மாலை 7.15 மணிக்கு தம் உடலைவிட்டு பிரிந்தார். நவம்பர் மாதம் 20ஆம் தேதி ஸ்ரீ அன்னையின் உடலை ஸ்ரீ அரவிந்தரின் உடல் சமாதி வைக்கப்பட்டுள்ள இரண்டாவது அறையின் சமாதியில் வைத்தார்கள்.

கண்களுக்கான கடவுள் அன்னை அதனால்தான் அன்னையின் கண்கள் மட்டும் உள்ள புகைப்படத்தை வீட்டில் வைத்து பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர். அன்னையின் கண்களைக் கொண்ட படத்தை பூஜித்துவந்தால் நம் வீட்டில் உள்ள எவருக்கும் கண் தொடர்பான பிரச்சினைகள் வராது.

பக்தர்கள் தாங்கள் பிரச்சினைகள் தீரவேண்டும் என்பதற்காக ஸ்ரீ அன்னை பரிந்துரைத்த மலர்களை ஸ்ரீ அன்னை பரிந்துரைத்த மலர்களை ஸ்ரீஅன்னையின் திருவுருவப்படத்தின் முன்பு சமர்பித்து வேண்டிக் கொள்கின்றனர்.

29. ஆட்கொண்டார் சாமி

ஆட்கொண்டார் சுவாமிகள் ஓர் அவதார மகான். அன்பர்களின் எதிர்கால நிகழ்வுகளைச் சொல்லும் ஆற்றல் பெற்றவர் திருநெல்வேலியில் இருநது திருவையாற்றுக்கு வந்தவர். திருவையாற்றில் தண்டபாணி கோயிலின் எதிரே உள் மயில் மண்டபத்தில் அமர்ந்திருப்பார் யாருடனும் பேசமாட்டார். யாராவது நமது வேண்டுதலைக் கூறிச் சென்றால் போதும் குறை தீர்ந்துவிடும்.

மக்கள் அவரை ஆட்கொண்டார் சுவாமிகள் என்றும், ஆட்கொண்டார் பிரம்மம், ஆட்கொண்டார் பரதேசி என்றும் அழைத்தனர் அவரிடம் யாரும் அருகில் நெருங்கமுடியாது அப்படி நெருங்கினால் கண்டபடி திட்டுவார். கற்களை வீசி அடிப்பார் சித்துக்களைச் செய்து காட்டுவார். இரவில் உறங்கும்போது நவகண்டயோக நிலையில் (கை, கால், உடல் பாகங்களைத்தனித்தனியே கிடக்கச் செய்யும் நிலை) இருப்பாராம் . திருவாரூர் மடப்புறம் மகான் தெட்சிணாமூர்த்தி சுவாமிகளும் ஆட்கொண்டார் சாமிகளும் ஒரே காலத்தவர்.

ஆட்கொண்டார் சாமிகளுடன் தாம் முக்தி அடையப்போகும் கால நேரத்தை முன்கூட்டியே அறிவித்தார் நாளை பட்டம் பறக்கப் போகுதடா வந்து பார் என்று சொல்லி ஆடகொண்டார் சன்னதி முன் மதியம் 12 மணிக்கு அமர்ந்து நிஷ்டையில் அமர்ந்தார்.

அப்போது மண்டை தானாக வெடித்து கபால மோட்சம் கிட்டியது. இந்த அரிய காட்சியைக் கண்ட மக்கள் வியந்து வணங்கினார்கள். அடியவர்கள் ஒன்று கூடி சுவாமிகளின் ஸ்தூலத் திருமேனியை முறைப்படி சமாதி செய்து கோவில் கட்டினர்.

சுவாமிகள் கபால மோட்சம் எய்தியது கி.பி. 1835 மன்மத ஆண்டு ஆவணி மாதம் உத்திர நட்சத்திர நன்னாளாகும். தஞ்சை மாவட்டம் திருவையாற்றில் மேலவீதியும், தெற்கு வீதியும் சந்திக்கும் மூலையிலிருந்து தெற்கு வீதியில் கல்கி அகரஹாரம் உள்ளது. அக்ரஹாரத்தில் நுழைந்தவுடன் சாலையின் வடபுற வரிசையில் சில கட்டிடங்களைக் கடந்தவுடன் ஆட்கொண்டார் சமாதிக் கோயில் உள்ளது. கட்டிடங்களுக்கு இடையே மேல் கருவறை விமானம் தெரியும் அந்த வீட்டில் உள்ளவர்களிடம் அனுமதி வாங்கி வீடுகளுக்குள் நுழைந்து சென்றால் சிறிய தனிச் சன்னதியின் கருவறையும் சமாதி மேடை மீது அழகிய சிவலிங்கத் திருமேனியுடன் அதிஷ்டானம் காட்சியளிக்கிறது தஞ்சையில் இருந்து கும்பகோணம் செல்லும் சாலையில் 12 கி.மீட்டர் தூரத்தில் திருவையாறு உள்ளது.

30. பாலயோகி ராமதாஸ் சுவாமிகள்

பாலயோகி ராமதாஸ் சுவாமிகள் விழுப்புரத்தை சேர்ந்தவர். இவர் எட்டு வயதிலேயே துறவுநெறி மேற்கொண்டதால் பாலயோகி என்று அழைக்கப்பட்டார். பின்னர் கேரளாவில் கரண்கோடு ஆனந்தாசிரமத்தில் ராமதாஸ் சுவாமிகளின் சீடராக 10 ஆண்டுகள் இருந்தார்.

மேலமங்கலத்தில் மடம் எழுப்பி பணியை மேற்கொண்டார் மயிலம் முருகன் கோயிலில் படித்திருவிழாவை தொடங்கி அதை திறம்பட நடத்தி வந்தார் சுவாமிகள் 31/2 அடி உயரமே இருந்தாலும் மிகப்பெரிய அருளாளராக விளங்கினார்.

சுவாமிகள் 1993-ம் ஆண்டு தை மாதம் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பரி பூரணமானார். விழுப்புரத்தில் இருந்து திருவெண்ணைநல்லூர் செல்லும் வழித்தடத்தில் 13-வது கி. மீட்டரில் மேலமங்கலம் உள்ளது. இங்கு பாலயோகி ராமதஸ் சுவாமிகள் மடம் உள்ளது. திரு மடத்தின் பின்புறம் சுவாமிகளின் சமாதி பீடம் உள்ளது.

31. சுடுகாட்டுச் சாமி (எ) சதானந்த

சுவாமிகளின் பூர்வாசிரமப் பெயர் ராமசாமி பிள்ளை சொந்த ஊர் பற்றிய விவரம் தெரியவில்லை. இவர் உலக வாழ்வில் இருந்து விலகி, ஞானம் கைவரப்பெற்று சித்தரானார். எப்போதும் சுடுகாட்டில் இருந்து தவம் செய்தார். சிலரிடம் மக்கள் தங்கள் குறைகளை தெரிவித்தால் சுடுகாட்டு சாம்பலையே பிரசாதமாக கொடுப்பாராம். அது நோயகற்றும் அருமருந்தாக அமையும் என்பது இவரிடம் அருள்பெற்றவர்களின் நம்பிக்கையாகும்.

சுவாமிகளுக்கு சீடர்கள் பலர் இருந்தனர், சுவாமிகளை சதானந்த சுவாமிகள் என்றே அழைத்தனர், இவரது காலம் கிபி 18-ம் நூற்றாண்டின் பிற்பகுதியும், 20-ம் நூற்றாண்டின் முற்பகுதியாகும். தொடக்கத்திலே இவர் திருவையாற்றில் ஆட்கொண்டார் சுவாமிகளுடன் இருந்து உள்ளார் சுவாமிகளின் பரிபூரணகாலம் தெரியவில்லை.



திருவையாற்றில் மேலவீதி, தெற்கு வீதி சந்திப்பில் இருந்து மேற்கே செல்லும் கல்கி அக்ரகாரத்தில் கதவு எண் 41-ல் உள்ள கட்டிடமே சுடுகாட்டுச்சாமி சுவாமிகள் திருமடம் வெளியில் இருந்து பார்த்தால் கருவறை விமானம் பெரிதாகத் தெரியும் மடத்தின் முன்பகுதியிலேயே அதிஷ்டானம் உள்ளது.

32. 63 சித்தர்கள் ஜீவசமாதி

நாகை மாவட்டம் மயிலாடுதுறையில் அருகில் உள்ள சித்தர் காட்டில் 63 சித்தர்களின் ஜீவசமாதிகள் அமைந்து உள்ளன.

13-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த குருப்பரம்பரையான சீர்காழி சிற்றம்பல நாடிகள் சுவாமிகள் ஒரே சமயத்தில் தனது சீடர்கள் 63 சித்தர்களுடன் ஜீவசமாதியான நிகழ்வு இத்தலத்தில் நிகழ்ந்துள்ளது.

நாகை மாவட்டம் சீர்காழியில் பிறந்தவர் சிற்றம்பல நாடிகள் இவர் திருச்செந்தூர் சென்று முருகனை போற்றி வழிபட்டு தவம்புரிந்தார் இதன் பயனாக முருகன் இவருக்கு திருவருள்புரிந்து மெய்ஞானம் தந்தருளினார்.

தருமபுரம் ஆதினத்தின் குரு முதல்வர் திருஞானசம்பந்தர் குருபரம்பரை முன்னோடிகளில், முதன்மையானவர் சீர்காழி சிற்றம்பல நாடிகள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சிற்றம்பல நாடிகள் முருகனின் திருவருளைப் பெற்ற பின்பு மயிலாடுதுறையில் மடாலயம் ஒன்றை அமைத்து அங்கேயே

தங்கி இறைவனை நினைத்து தவமியற்றி வந்தார். இவரிடம் உபதேசம் பெற்ற பலர், மெய்ஞான செல்வர்களாக விளங்கினர் இவரது சீடர்களாக அறுபத்து மூன்று பேர் இருந்து வந்தனர்.

சித்தர்கள் வரலாறு

சிற்றம்பல நாடிகளைத் தலைமைக் குருவாகக் கொண்டு, அவரின் சீடர்கள் அறுபத்து மூன்று சித்தர்களும் நாள்தோறும் திருகூட்டமாகச் சென்று பிச்சை ஏற்று உண்பது வழக்கமாகும்.

ஒருமுறை அன்பர் ஒருவர் இத்திருகூட்டத்தாரை அணுகி, தம் இல்லத்துக்கு ஒருநாள் எழுந்தருளி, திருவருளமுது உண்டு, தங்களை வாழ்விக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

தீருக்கூட்டத்தினர் அறுபத்து மூவரும் அவர்தம் இல்லம் சென்று பிச்சை ஏற்கத் தயாராக அமர்ந்து இருந்தனர், அந்த இல்லத்தில் அடுத்தடுத்து குத்துவிளக்குகள் ஏற்றப் பெற்றிருந்தன. விளக்கை எரிவிக்க அக்காலத்தில் வேப்பெண்ணெய் பயன்படுத்தப்பட்டது.

வேப்பெண்ணெய் ஒரு பாத்திரத்தில் வைக்கப்பட்டு இருந்தது திருக்கூட்டத்தினருக்கு உணவு பரிமாறப் பெற்றது. எல்லா வேலைகளையும் இல்லத்து அம்மையாரே செய்து கொண்டிருந்தார். பதற்றம் காரணமாக, திருக்கூட்டத்தினருக்குப் பசுநெய் வார்ப்பதற்குப் பதிலாக, விளக்கு எரிப்பதற்காக வைத்திருந்த வேப்பெண்ணெயை வார்த்து விட்டார்.

கண்ணப்பர் என்ற சிஷ்யர் மட்டும் கசப்புச்சுவை உள்ளதை கண்டு கோபித்துக் கொண்டார். திருக்கூட்டத்தின் தலைவராகிய

சிற்றம்பல நாடிகளார் இதனை உணர்ந்தார். அவச்சுவை அறிவார் தவச்சுவை அறியார் என்று கூறினார்.

அடுத்த நாள் காலையில் திருக்கூட்டத்தினர் எண்ணிக்கையில் ஒருவர் காணப்பெறவில்லை. அவச்சுவை அறிவார் தவச்சுவை அறியார் என்ற வாசகம் எழுதப்பெற்ற ஓலை நறுக்கு ஒன்று அவர் இருந்த இடத்தில் காணப்பெற்றது.

முதல்நாள் விருந்தில் வேப்பெண்ணெய் என்று தெரிந்து கோபப்பட்டவரான கண்ணப்பர் தான் அவர்.

அதன் பின்னர் சில ஆண்டுகள் கழிந்தன, சிற்றம்பல நாடிகள் தம் கூட்டத்தினருடன் ஜீவசமாதி அடையப்போவதாக ஊரில் உள்ளவர்களுக்கு அறிவிப்புச் செய்தார். அதன்படி அவர் சொன்ன நாளில் ஊரார் முன்னிலையில் சிற்றம்பல நாடிகள் மற்றும் அவர் தலைமையில் அறுபத்திரண்டு சித்தர்களும் ஜீவசமாதி அடைந்தனர்.

இந்த செய்தியை கேள்விபட்ட கண்ணப்பர் இவ்வாலயம் வந்து 63 பேரும் சமாதி அடைந்த நேரத்தில் தனக்கு ஒரு இடம் ஒதுக்கப்படவில்லையே எந வருந்தி தான் தவச்சுவை அறிந்து வந்துள்ளேன், என்னையும் ஏற்று அருள வேண்டும் எந்று தனது குருவை வேண்டி ஓர்வெண்பா பாடினார் அப்போது சமாதி பிளந்து வெளிப்பட்ட சிற்றம்பல நாடிகள், தனது சீடன் கண்ணப்பரை தன் மடியில் அமர்த்தி, கண்ணப்பரை தன்னுடன் இரண்டறக் கலக்கச்செய்து மீண்டும் ஜீவசமாதி ஆனார் எனபது தல வரலாறு ஆகும்.

மயிலாடுதுறை அருகிலுள்ளசித்தவனம் எனும் சித்தர்காட்டில் ஞான குருவான சித்தர் சிற்றம்பல நாடிகளார் ஜக்கியம் ஆன திரிபுரசுந்தரி சமேத ஸ்ரீபிரம்மபுரீஸ்வரர் சிவன் திருக்கோயிலின் கருவறை திருச்சுற்று சுவரில் இந்த அறுபத்தி மூன்று சித்தர்கள்இத்தலத்தை சுற்றி வலம் வருவதை போல் 63 சிவலிங்கங்கலாக வடிக்கப்பட்டு வழிபாட்டில் இன்றும் உள்ளது மேலும் தங்களை வணங்கும் பக்தர்களுக்கு இச் சித்தர்கள் அருள் வளம் நாளும் வழங்கி வருகிறார்கள் என்பது ஐதீகம்.

பூஜைகள்

சித்தர்கள் 64 பேரும் முத்தி பெற்ற சித்திரை மாத திருவோணம் நட்சத்திர தினத்தில், இக்கோயிலில் ஆண்டுதோறும் சிறப்பாக குருபூஜை நடத்தப்படுகிறது.

இதைத்தவிர, மாதம் தோறும் பவுர்ணமி, பிரதோசம் தினத்தில் சிறப்பு பூஜைகளும், தின பூஜைகளும், நடத்தப்படுகின்றன.

மயிலாடுதுறை சப்தஸ்தானம்

மயிலாடுதுறையில், திருவாடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான ஐயாரப்பர் கோவிலில் நடைபெறும் சப்தஸ்தான திருவிழாவில் பங்கேற்கும் ஏழு சிவன் கோயில்களுள் இக்கோயிலும் ஒன்றாகும்.

கும்பகோணம் – மயிலாடுதுறை சாலையில் மயிலாடுதுறை பேருந்து நிலையத்திற்கு முன்பாக இரண்டு கிலோமீட்டருக்கு முன்பு உள்ள சம்பந்தக்குளம் பேருந்து நிறுத்தத்தின் அருகில் சித்தர்காடு உள்ளது.

33. பானிப்பட் சுவாமிகள் (எ) இராமாசாது

இந்தியாவின் தலைசிறந்த குண்டலினி யோகியருள் ஒருவராக விளங்கியவர் மகான் ராமாசாது சுவாமிகள் பஞ்சாப் மாநிலத்தில் உள்ள சேய்க்குவான் எனும் கிராமத்தில் வாழ்ந்து வந்த பிண்டிதாஸ், பிரேம் கௌர் என்னும் தம்பதியினருக்கு கி.பி. 1885ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14ஆம் தேதி மூன்றாவது மகனாய்ப் பிறந்தார்.

ராமாசாதுக்களுக்கு பெற்றோர் இட்ட பெயர் சுந்தரதாஸ் என்பதாகும். ஒன்பதாம் வகுப்பு வரை படித்த சுவாமிகள், பிரிட்டிஷ் இராணுவத்தில் குமாஸ்தாவாகப் பணியில் சேர்ந்தார். தமது 22ம் வயதில் இராணுவ சேவையை விட்டு விலகிய சுவாமிகள் தம் சொந்த ஊருக்கே வந்து, நமது தேசப் பிதாவான காந்திமகானுடன் நாட்டின் விடுதலைப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றார். லாகூரில் இருந்தபொழுது சாது ஒருவரின் தொடர்பு ஏற்பட்டது. அவரே இவருக்கு முதல் குருவானார்.

இந்த நிலையில் சுவாமிகளின் சகோதரர்கள் இருவரும் துறவறமேற்றனர். அதைக்கண்டு அஞ்சிய இவரின் அன்னை தம் இளைய மகன் சுந்தரதாசுக்குப் பெண் பார்க்க ஆரம்பித்தார். தாயின் மீது பேரன்பு கொண்ட சுவாமிகள் தாயின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு அமிர்த கௌர் என்பவரைத் திருமணம் செய்தார். நான்கைந்து ஆண்டுகள் இல்லற வாழ்வு தொடர்ந்தது. சுவாமிகளுக்கு கௌசல்யா எனும் மகள் பிறந்தாள். அதன் பிறகு மனம் மாற்றம் அடைந்த சுவாமிகள் குரு ஸ்ரீ பரமானந்தரைச் சந்தித்தார். அவரும் இவரை சீடராக ஏற்றுக் கொண்டார். குருவும் சீடரும் இராமேஸ்வரம் செல்லும் எண்ணமுடன் தென்னாடு யாத்திரை மேற்கொண்டார்கள். அதில் கும்பகோணம் வந்தவுடன் குரு என்ன நினைத்தாரோ "நீ இங்கேயே இரு" என்று கூறிவிட்டுத் தாம் மட்டும் இராமேஸ்வரம் சென்றார். அதனை தொடர்ந்து கும்பகோணம் காவிரி கரையில் உள்ள ஒரு ஆஞ்சநேயர் கோவிலில் தங்கி இருந்தார். அப்போது ஊரில் பரவி வந்த தொற்று நோய்க்கு சுவாமிகள் தமக்கு தெரிந்த பாரம்பரிய யுனானி வைத்திய முறையில் சிலகடைச் சரக்குகளை வாங்கி கஷாயம் தயாரித்து அதற்கு 'ஸ்ரீராமரசம்' என்று பெயரிட்டு அதனை தன்னை நாடி வருபவர்களுக்கு தந்து வந்தார் அம்மருந்து பல நோய்களை குணப்படுத்தியது.

சுவாமிகள் பெயர் என்னவென்று தெரியாது பக்தர்கள் எப்பொழுதும் 'ஹே! ராமா! ராம் ராம்!' என்று எப்போதும் கூறுவதால் அவரை ஸ்ரீ ராமாசாது என்றே குறிப்பிடத் தொடங்கினார்கள்.

இரோமேஸ்வரம் சென்றிருந்த குரு ஸ்ரீ பரமாநந்தா யாத்திரை முடிந்து கும்பகோணம் திரும்பினார். ராமா சாதுவின் ராமரசம் கஷாய வைத்தியம் போன்றவற்றைக் கண்டார். இவரின் சேவை இவ்வூருக்கு தேவை என்பதை உணர்ந்தார். அதன் பின்னர் கும்பகோணத்தில் ராமாசாதுவுடன் சிலநாள் தங்கியிருந்த குரு தம் சீடனுக்கு யோக சாதனைகள், குண்டலினி யோகமுறைகளில் பயிற்சியளித்தார்.

பின்னர், ராமாசாதுவை கும்பகோணத்திலேயே தங்கியிருக்கும்படி கூறி விட்டுத் தாம் மட்டும் வடநாடு புறப்பட்டார். ராமாசாது எவ்வளவோ கெஞ்சியும் அழைத்துச் செல்ல குரு மறுத்து விட்டார். அதன் பின்னர் ராமாசாது கும்பகோணத்தில் சோலையப்பன் தெருவின மேற்கு எல்லையில் காவிரியின் தென்கரையிலிருந்த செட்டிமண்டபத்தில் தங்கியிருந்தார்.

சுவாமிகள் நவகண்ட யோக வித்தையில் சிறப்பு பெற்றார். மலையாளப் பிரதேசங்களிலும் அங்கிருந்தவாறு தென்தமிழ்நாட்டிலும் யாத்திரை மேற்கொண்டார். அப்பொழுது தூத்துக்குடி மாவட்டம் தங்கம்மாள்புரம், மொட்டான் தரைக்காடு எனும் இடங்களில் சுவாமிகளுக்கு அன்பர் கூட்டம் ஏற்பட்டது.

ஆசிரமும் அமைந்தது. சுவாமிகள் தமக்கு அந்திம காலத்திற்குக் கொஞ்சகாலம் முன்பு வரை தங்கம்மாள்புரத்திற்கும் மொட்டான் தரைக்காட்டிற்கும் சென்று

வருவார். யோகதாரணைகளில் ஈடுபடுவதும் உண்டு. இதற்கிடையில் சுவாமிகள் பலமுறை வடநாட்டு யாத்திரை மேற்கொண்டார்கள். அங்கேயே சிலகாலம் தங்கி இருப்பார்.

சுவாமிகளின் ஆசிரமம் இவரின் சிஷ்யரான இராமதாஸ் அண்ணா காவிரியின் வடகரையில் சாதனா நிகேதன் எனும் பெயரில் புதிதாக ராமாசாதுக்கள் ஆசிரமம் அமைந்தது கும்பகோணம் சுவாமிகள் 1999ம் ஆண்டு ஜூலை 10ஆம் தேதி சாதனா நிகேதன் ஆசிரமத்தில் பரிபூரணமானார் சமாதிக்கோயில் அமைந்துள்ள இடம்.

ஸ்ரீராம சாது சுவாமிகளின் உடல் வடநாட்டு முறைப் படித் தகனம் செய்யப்பட்டது. அவர் தங்கியிருந்த குடிலில் தியான மண்டபமும் அதில் அஸ்தி அடங்கிய மேடையும் அமைக்கப்பட்டது. அதில் தியான நிலையில் ஸ்ரீராமசாது அவர்களின் சிலை அமைக்கப்பட்டுள்ளது. கும்பகோணம் நகரில் காவிரியின் வடக்குக்கரையை ஒட்டி மேற்கே செல்லும் சுவாமிமலை சாலையில் உள்ள ஏரண்ட மகரிஷி வழிபட்ட கொட்டையூர். கோடீஸ்வரர் ஆலயத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ள வள்ளலார் கல்வி நிலைய வளாக பின்புறம் காவிரிக்கரையில் சாதனா நிகேதன் ஆசிரமம் உள்ளது.

மேலும், இங்கு இவரின் சீடர்களின் சமாதிகள் சிலவும் உள்ளன. குரு பார்க்க கோடி புண்ணியம் உண்டாகும். கும்பகோணம் - சுவாமிமலை வழி தடத்தில் கொட்டையூர் வள்ளலார் பள்ளி பேருந்து நிறுத்தத்தில் இறங்கி முகவரி கேட்டால் சொல்வார்கள்.

34. மவுன குரு சுவாமிகள்

சூரியஒளிச் சுடர் போன்ற ஒளிரும் விழிகளுடன் ஒரு காலில் ஏழு விரல்களும், மறுகாலில் ஆறுவிரல்களும் உடைய செந்நிறத் திருமேனியுடன் வலம் வந்தவர். கி.பி. 1876 பவ வருட காலக் கட்டத்தில் உலா வந்த மகான் ஸ்ரீலஸ்ரீ மவுன சுவாமிகள்.

மகான் மவுனகுரு சுவாமிகள் :


கும்பகோணம் வருமுன்னர் கும்பகோணம் அடுத்துள்ள ஆலயம் அமையப்பெற்றுள்ள திருபுவனத்தில் இருந்தார். இவர் தெருவோரம் கோவில் மதில் சுவர் அருகில் என்று எப்போதும் ஏகாந்த நிலையிலேயே இருப்பார். திருமேனியில் ஆடை இருக்காது. உணவருந்துவது இல்லை. பேச மாட்டார். தூங்கவும் மாட்டார். நடப்பார். பலநாள் அசையாது நிஷ்டையிலிருப்பார். இந்த மகானை திருபுவன மக்களெல்லாம் சிவசொரூபம் என வணங்கி வந்தார்கள். இந்நிலையில் கும்பகோணம் பகுதி அடியார்கள் மனதில் சுவாமிகளை கும்பகோணம் அழைத்து வரவேண்டுமென்று

எண்ணம் உதயமானது. இச்செய்தியை திருபுவன அடியார்களிடம் சொல்ல அவர்கள் உள்ளம் பதறினர். முடியாது சுவாமிகளை உங்களுடன் அனுப்ப முடியாது நீங்கள் போகலாம் என்றனர்.

யாழ்ப்பாண சுவாமிகள்

ஸ்ரீலஸ்ரீ மவுன குரு சுவாமிகளின் கீர்த்தியைக் கேட்டறிந்த யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒரு துறவி ஒருவர் கும்பகோணம் வந்தார். மவுன சுவாமியைக் கண்டார். திருவடியில் வீழ்ந்து வணங்கி அவர் சந்நிதியில் தங்கியிருந்து பல்வேறு திருத்தொண்டுகளை அன்புடன் செய்து சுவாமிகளின் பூரண அனுக்கிரகத்தை பெற்றார். பின் திருப்புறம்பியம் சென்று சிவனோடு இரண்டறக் காலத்தலாகிய சாயுஜ்ஜிய பதவியைப் பெற்றார். (இவரின் சமாதி திருப்புறம்பியம் சாட்சிநாதர் கோவில் சன்னதி தெருவில் உள்ளது) பின் நாளில் மவுன சுவாமிகள் வீற்றிருக்க ஏற்ற இடமாக கும்பேஸ்வர சுவாமி கோயிலுக்கு மேற்குத் திசையிலே மேட்டுத் தெரு அருகில் பூஞ்சோலை சூழப்பட்ட ஓர் இடத்தை வாங்கி அங்கே ஸ்ரீலஸ்ரீ மவுன சுவாமிகளை இருக்கச் செய்தனர். இந்த இடத்திற்கு வந்த பலரும் சுவாமிகளை தரிசித்தும் பணிவிடைகள் செய்தும் பிறவி பிணி நீங்கப் பெற்றார்கள்.

சுவாமிகளை தரிசிக்க வந்தவர்கள் சாதாரண மக்கள் மட்டுமல்ல பல யோகிகளும் ஞானிகளும் அறிஞர்களும் கும்பகோணம் வந்து சுவாமிகளை தரிசித்துப் பேறு


ஸ்ரீலஸ்ரீ மௌனகுரு சுவாமிகள்

பெற்றார்கள் பலர் அதில் சிலர்.

1. கன்றுக்குட்டி சுவாமிகள்
2. அருணாச்சல சுவாமிகள்
3. அன்னிபெசண்ட் அம்மையார்
4. ஜட்ஜ் சுவாமிகள்
5. கள்ளியடி பிரம்மம்
6. காமாட்சி அம்மாள்
7. யாழ்ப்பாண சுவாமிகள்

8. சுவாமி விவேகானந்தர் ஆகியோர் ஆவார்கள். இவர்களில் ஸ்ரீலஸ்ரீ மவுன சுவாமிகளைக் காண வந்த சுவாமி விவேகானந்தர் மடத்தின் வாசலிலேயே நின்றுவிட்டார். அங்கிருந்தே மவுன சுவாமிகளைப் பார்த்தவர் இவரிடம் நெருங்கினால் இவரை விட்டு என்னால் வெளியே வர இயலாது. இவருடனேயே ஐக்கியமாகி விடுவேன் என்று கூறிவிட்டு 50 அடி தூரத்திலிருந்தே வணங்கி சென்றார். தன்னைக் காண வரும் அன்பர்கள் அனைவரின் குறைகளையும் கருணைப் பார்வையால் (நயன தீட்சையினால்) நீக்கிய ஸ்ரீலஸ்ரீ மவுனகுரு சுவாமிகள் சமய சாத்திரங்களைக் கடந்த பிரம்ம ஞானியாவார்.

ஞான பிரம்மம் என அழைக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ மவுனகுரு சுவாமிகள் கி.பி. 1899ம் வருடம் ஏப்ரல் மாதம் 22ம் தேதி விகாரி வருடம் சித்திரை 11ம் நாள் சனிக்கிழமை பூர்பட்சத் துவாதசியும் உத்தர நட்சத்திரமும் தனுசு லக்கினமும் கூடிய சுபவேளையில் இரவு 10 மணியளவில் மவுன சுவாமி மடத்தில்

அமர்ந்திருந்த ஸ்ரீலஸ்ரீ மவுன குரு சுவாமிகள் இறைவன் நாடி சேர்ந்தார். அதன் பின்னர் சுவாமிகளுக்கென்று கருங்கல்லால் அமைக்கப்பட்ட குகையுள் சுவாமிகளின் திருமேனியை அமரச் செய்து மேலே வேதாகம விதிப்படி, சிவலிங்க மூர்த்தியை பிரதிஷ்டை செய்தார்கள். அதன் பின்னர் இன்று வரை ஸ்ரீலஸ்ரீ மவுன குரு சுவாமிகளின் அதிஷ்டானம் அன்பர்களின் குறை தீர்த்து வினையறுக்கும் பாப விமோசனத் தலமாக விளங்கி வருகிறது.

கும்பகோணம் நகரம் :

தஞ்சை சாலையில் உள்ள ஆதிகும்பேஸ்வரர் ஆலய பேருந்து நிறுத்தத்தில் இருந்து மிக அருகில் உள்ளது. மவுனகுரு சாமிகள் மடம்.

35. நாராயணசாமி சித்தர்

கும்பகோணத்திற்குக் கிழக்கில் 6 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. திருநாகேஸ்வரம், ராகுஸ்தலமாகிய நாகநாதசுவாமி திருக்கோயிலும், புகழ்பெற்ற வைணவத் திருக்கோயிலான ஒப்பிலியப்பன் கோயிலும் அமையப்பெற்ற ஊர் திருநாகேஸ்வரம். ஒப்பிலியப்பன் திருக்கோயிலின் வடக்கு வீதியில் வசித்து வரும் பத்மசாலியர் மரபில் கி.பி. 1868ம் ஆண்டில் பிறந்தவரே ஸ்ரீ நாராயணசுவாமி சித்தர் தம் குல வழக்கப்படி பட்டு நெசவுத் தொழிலில் ஈடுபட்டு வந்தார். உரிய வயதில் மணம் முடிந்தது. சிறிது காலம் கழித்து இல்லறத்தை துறந்து சுவாமிகள் தன் குடும்பத்தை விட்டு வெளியேறி துறவு பூண்டார். சுவாமிகள் வெளியூர் எங்கும் செல்லாமல், உள்ளூரிலேயே உஞ்சவிருத்தி சென்று பிச்சை ஏற்று உண்பதும் சத்திரம் சாவடி கோயில்களில் தங்கி நிஷ்டையிலிருப்பதும் வழக்கமாயின. காலப்போக்கில் சுவாமிகள் பல சித்தர்களின் நட்பின் பயனாக அஷ்டமாசித்துக்களும் இரசவாதமும் கைவரப்பெற்றார்கள்.

அக்காலத்தில் உள்ள செப்புக்காசை மூலிகைச் சாற்றில் நனைத்துப் புடம்போட அது தங்கக்காசாக மாறும் அதனைக் கண்டு பலருக்கும் உதவி புரிந்து வந்தார். இதனை கண்ட சுவாமிகளுடன் பழகி வந்த அன்பர் ஒருவர் சுவாமிகள் செய்வதைப்போல அதே பச்சிலையைப் பறித்துப் புடம் போட வெப்பத்தில் அவரது கண்கள் மங்கத் தொடங்கியது. அதனைக் கண்டு பயந்து போய் அலறியடித்துக் கொண்டு சுவாமிகளிடம் ஓடிவந்து நடந்ததைக் கூறி மன்னிக்க வேண்டினார். சுவாமிகளும் மன்னித்து இனி அவ்வாறு செய்யக்கூடாது என்று அறிவுரை கூறினார்.

ஒரு முறை சுவாமிகள் அன்பர்களிடம் இரவு நேரங்களில் தாம் தங்கியிருக்கும் இடத்திற்கு யாரும் வரக்கூடாது என்று கண்டித்திருக்கிறார். அதையும் மீறி ஒரு நாள் சுவாமிகள் தங்கியிருந்த அறையின் சன்னல் வழியே சில அன்பர்கள் உள்ளே பார்த்திருக்கிறார்கள். அங்கே சுவாமிகள் கை கால் மற்ற உறுப்புகளெல்லாம் தனித்தனியே தோன்றச் செய்யும். நவகண்ட யோகத்திலிருந்தார். இதைப்பார்த்து பயந்துபோன அடியவர்கள் 'யாரோ சுவாமிகளை வெட்டிப்போட்டு விட்டார்கள்' என்று அலறிக் கூச்சலிட்டனர். மக்கள் திரண்டு அறைக்கதவைத் தட்டினர். சுவாமிகள் எழுந்து வந்து அறைக்கதவைத் திறந்து "ஏன் இங்கு வந்தீர்கள்? நான்தான் இரவில் யாரும் வரக்கூடாது என்று சொல்லியிருக்கிறேனே எனது தவத்திற்கு இடையூறு செய்யாதீர்கள்" என்று எச்சரித்து அனுப்பினார்கள்.

மேலநடுப்பட்டறைத் தெருவின் கடைசியில் சிறிய பிள்ளையார் கோயில் ஒன்று உள்ளது. அதன் பின்புறம் அக்காலத்தில் ஒரே காடாக இருந்துள்ளது. ஒரு நாள் சுவாமிகள் அக்காட்டுப்பக்கம் சென்றார்கள். வெகுநேரமாகியும் சுவாமிகள் வரவில்லையே என சீடர் நயினாசாமியும் பிறரும் சென்று பார்த்தார்கள். அங்கு சுவாமிகள் நிஷ்டை கூடிய நிலையில் சமாதியாகியிருந்தார்கள் அன்று. 1924ஆம் ஆண்டு மாசிமாதம் புனர்பூசம் நட்சத்திரம் கூடிய நன்னாள் பரிபூரணம் எய்தும்போது சுவாமிகளுக்கு வயது ஐம்பத்தைந்து.

ஊருக்குள் சுவாமிகளை அடக்கம் செய்து நினைவிடம் கட்ட எண்ணிய அடியவர்கள கலெக்டரிடம் அனுமதி வாங்கினர். உப்பிலியப்பன் கோவில் திருத்தேர் மண்டபம் அருகிலுள்ள கீழ்நடுப்பட்டறைத் தெருவின் கடைசியில் இடம் தேர்வு செய்யப்பட்டு கிழக்குப் பார்த்த சன்னதி கொண்ட கருவறையில் ஸ்ரீ நாராயணசாமி சித்தர் திருமேனி சமாதி மீது லிங்கத் திருமேனி சமாதி மீது லிங்கத்திருமேனி பிரதிஷ்டை செய்யப்பட்டது. இதனை சீடர் நயினாசாமி மறையும் வரை ஆண்டுதோறும் குருபூஜையும் மிகச்சிறப்பாக நடத்தி வருகை தரும் அன்பர்களுக்கு அன்னதானமும் வழங்கினார். சீடர் நயினாசாமி மறைந்ததும் அவரது ஸ்தூலத் திருமேனி கருவறைக்கு முன்னாலுள்ள நந்தியின் கீழ் சமாதி செய்யப்பட்டது.

வருவார். யோகதாரணைகளில் ஈடுபடுவதும் உண்டு. இதற்கிடையில் சுவாமிகள் பலமுறை வடநாட்டு யாத்திரை மேற்கொண்டார்கள். அங்கேயே சிலகாலம் தங்கி இருப்பார்.

சுவாமிகளின் ஆசிரமம் இவரின் சிஷ்யரான இராமதாஸ் அண்ணா காவிரியின் வடகரையில் சாதனா நிகேதன் எனும் பெயரில் புதிதாக ராமாசாதுக்கள் ஆசிரமம் அமைந்தது கும்பகோணம் சுவாமிகள் 1999ம் ஆண்டு ஜூலை 10ஆம் தேதி சாதனா நிகேதன் ஆசிரமத்தில் பரிபூரணமானார் சமாதிக்கோயில் அமைந்துள்ள இடம்.

ஸ்ரீராம சாது சுவாமிகளின் உடல் வடநாட்டு முறைப் படித் தகனம் செய்யப்பட்டது. அவர் தங்கியிருந்த குடிலில் தியான மண்டபமும் அதில் அஸ்தி அடங்கிய மேடையும் அமைக்கப்பட்டது. அதில் தியான நிலையில் ஸ்ரீராமசாது அவர்களின் சிலை அமைக்கப்பட்டுள்ளது. கும்பகோணம் நகரில் காவிரியின் வடக்குக்கரையை ஒட்டி மேற்கே செல்லும் சுவாமிமலை சாலையில் உள்ள ஏரண்ட மகரிஷி வழிபட்ட கொட்டையூர். கோடீஸ்வரர் ஆலயத்தின் தென்மேற்குப் பகுதியில் உள்ள வள்ளலார் கல்வி நிலைய வளாக பின்புறம் காவிரிக்கரையில் சாதனா நிகேதன் ஆசிரமம் உள்ளது.

மேலும், இங்கு இவரின் சீடர்களின் சமாதிகள் சிலவும் உள்ளன. குரு பார்க்க கோடி புண்ணியம் உண்டாகும். கும்பகோணம் - சுவாமிமலை வழி தடத்தில் கொட்டையூர் வள்ளலார் பள்ளி பேருந்து நிறுத்தத்தில் இறங்கி முகவரி கேட்டால் சொல்வார்கள்.

36. ஹரித்துவாரமங்களத்து சித்தர்கள்

தஞ்சை மாவட்டத்தில் உள்ளது. அரித்துவாரமங்களம். இந்த ஊருக்கு இப்பெயர் வர காரணமான புராண வரலாறு. ஒருமுறை இறைவன் சிவனின் திருமுடி மற்றும் திருவடி காணும் முயற்சியில் பிரம்மனும் விஷ்ணும் ஈடுபட்டார்கள். இதில் பிரம்மா திருமுடியை தேடி போக விஷ்ணு எனும் ஹரி இத்தலத்தில் இருந்து ருத்திரனின் திருவடியை காண வராக அவதார உருவத்தில் பூமியில் துவாரம் ஏற்படுத்தி சென்றதால் ஹரித் துவார மங்களம் எனும் பெயர் பெற்றதாக வரலாறு மேலும் திருஞான சம்பந்த பெருமான் வழிபட்ட பஞ்ச ஆரண்ய ஸ்தலங்களில் இத்தலமும் ஒன்றாகும்.

சுமார் 50 வருடங்களுக்கு முன் இந்த ஊரில் கேராளாவில் இறந்த மனிதர் ஒருவரை தகனம் பண்ண சுடுகாட்டில் வைத்து எரியூட்டினார்கள். அப்போது அந்த இறந்த மனிதர் உயிருடன் எழுந்தார். இதைக்கண்டு

அனைவரும் பயந்து ஒடிவிட்டார்கள். அதனை தொடர்ந்து அந்த மனிதர் தமிழகத்தில் உள்ள பல ஊர்களில் பயணித்து நிறைவில் இந்த ஹரித்துவாரமங்களத்திற்கு வந்தார்.

அவரை இவ்வூர் பெரும் நிலக்கிழாரான சித்த வைத்தியர் வைத்திலிங்க சாம்பலாண்டியார் மற்றும் அவரின் சகோதரர் ஆகியோர் சுவாமிகளுடன் பழகி தன்னுடன் இருக்கும்படி கேட்டுக்கொண்டனர். அன்புக்கு கட்டுப்பட்டு இவ்வூரிலேயே தங்கிவிட்டார். அவர்தான் மலையான மஹான் எனும் வெள்ளை வேட்டி சாமிகள் இவர் சித்த வைத்திய மருந்துகளை கையாள்வதில் மிகவும் திறமைசாலி என்பதும் அதனால் பல உயிர்களை காப்பாற்றி உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலையாள சுவாமிகள் வந்த இரண்டு ஆண்டுகள் கழித்து திருநெல்வேலி மாவட்டம் சிவகிரி எனும் ஊரில் வசித்து வந்த சிவகிரி மஹான் ஸ்ரீபரம சொரூபனந்த சுவாமிகள் பஞ்ச ஆரண்ய தலங்களை தரிசிக்க யாத்திரை வந்தபோது அரித்துவாரமங்களத்தில் உள்ள சிவாலயம் மிகவும் சிதிலம் அடைந்துள்ளதை கண்டு மிகவும் வேதனையடைந்தார். மலையாள மகான் எனும் வெள்ளை வேட்டி சுவாமிகளை சந்தித்தார். அவர்களுடன் இணைந்து இக்கோயிலை சீரமைத்து திருப்பணி செய்ய மனதில் உறுதி பூண்டு இவ்வூரில் தங்கி விட்டார். வெள்ளை வேட்டி சுவாமிகள் எனும் மலையாளத்து மகான் சுமார் ;90 வயதில் இறையுடன் நிறைந்தார். அவரின் பூலோக பூதஉடலை சிவகிரிமஹான் அறிவுரைபடி வைத்தியர் தனது நிலத்தில் சமாதி வைத்து

வணங்கி வந்தார். இந்நிலையில் இரண்டு ஆண்டு கழித்த சிவகிரி மகான் ஒருநாள் காலைகடன் கழிக்கும்போது அதே நிலையில் இறைவனுடன் நிறைந்தார். அதன் பின் அவரின் ஆணைப்படி மலையாள மகான் அருகில் சுவாமியின் ஜீவ சாமதியும் வைக்கப்பட்டது. சுவாமிகள் இருவரின் சமாதிகள்மீது கோயில் கட்டப்பட்டது. தஞ்சை மாவட்டம் அம்மாப்பேட்டை அருகிலுள்ள அரித்துவார மங்கலம் மிக சிறிய கிராமமாகும்.

இவ்வூர் கும்பகோணத்தில் இருந்து 23 கிலோமீட்டர் தூரத்திலும், தஞ்சாவூரிலிருந்தும் 20 கிலோமீட்டர் தூரத்திலும் உள்ளது. இவ்விரு ஊர்களில் இருந்தும் பேருந்துகள் செல்கிறது. பேருந்து நிறுத்தத்தில் இருந்து மிக அருகில் உள்ளது சித்தர்கள் ஆலயம்.

37. அழுகுணிச் சித்தர்

நாகப்பட்டினம் கடற்கரை பகுதிகளில் தாடியும், முடியுமாக அந்த மனிதர் நடந்து கொண்டிருப்பார். அவர் கண்களிலிருந்து நீர் ஊற்றிக் கொண்டிருக்கும். அவரே அங்கே பார்த்தேன். இவ்விடத்தில் பார்த்தேன் என்பார்கள். ஆனால், எங்கும் தங்க மாட்டார். யார் எது கேட்டாலும், பதில் கூறவும் மாட்டார். அவர் கண்கள் மட்டும் அழுது கொண்டு இருக்கும். இதனாலேயே இச்சித்தருக்கு அழுகண் சித்தர் என்று வழங்கினர். காலப்போக்கில் அழுகண்ணர் என்றும் அழுகணிச் சித்தர் என்றும் அழுகுணிச் சித்தர் என்றும் அவர் அழைக்கப்பட்டார். இவருடைய பாடல்களில் அணி அழகாக அமைந்து இருப்பதால் அழகு அணிச் சித்தர் என்ற பெயர் இவருக்கு வந்ததாக கூறுவார்கள். அதனால் வந்த பெயர் தான் அழகு அணிச் சித்தர் என்பது நாளடைவில் திரிந்து அழுகுணிச் சித்தர் என்று ஆகிவிட்டது என்றும் செய்திகள் உண்டு.



இவருடைய பாடல்களில் யோகம் பற்றிய ஆழமான கருத்துக்களே அதிகமாக உள்ளது. இந்தக் கருத்துக்கள் அனைத்தும் படிப்பவர்களுக்கு புரிகிறதோ இல்லையே, பாடல்களின் சந்தம் படிப்பவர்களை மயக்கும் விதத்தில் உள்ளது என்பது என்னவோ உண்மைதான்.

ஏதாவது ஒன்று கிடைக்க வேண்டுமென்றால் குழந்தைகள், அழுது அடம்பிடித்து பெற்றோரிடம் எளிதாகப் பெற்றுவிடுவர். இதைப்போலவே தனக்கு முக்தி கிடைக்க எண்ணிய சித்தர் உலகத்தின் அன்னையான திருநாகையில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை நீலாயதாட்சியிடம் அழுது பெற்றுள்ளார். இதனால் இவர், "அழுகுணி சித்தர்" என்றே பெயர் பெற்றார். கோரக்கரின் சீடரான அழுகுணி சித்தர், இத்தல அம்பிகை மீது அதீத பக்தி கொண்டு, இங்கேயே தங்கி தினமும் அம்பிகையை வழிபட்டால் அம்பிகையிடம் முக்தி வேண்டி, சிறுவன் போல கண்ணீர் விட்டு அழுது, அடம்பிடித்து பிரார்த்தனை செய்தார். அம்பிகையும் அவருக்கு அருள்புரிய அருள்மிகு காயோரோகண சுவாமியை வேண்டவே, அவர் சித்தருக்கு முக்தி கொடுத்தருளினார். இவரது ஜீவசமாதி இக்கோயிலின் வடக்கு பிரகாரத்தில் உள்ளது.

"வாழைப் பழந்தின்றால் வாய்நோகு மென்றுசொல்லித்
தாழைப் பழத்தின்று சாவெனக்கு வந்ததடி
தாழைப் பழத்தைவிட்டுச் சாகாமற் சாகவல்லோ
வாழைப் பழந்தின்றால் என் கண்ணம்மா!
வாழ்வெனக்கு வாராதோ!"

–அழுகணிச் சித்தர்–

பொதுவாக இவர் தனது பாடல்களில் "உன்னை அறியாமல் உலகத்தில் உள்ளவைகளை அறிவதால் எந்தவிதப் பயனுமில்லை" என்னும் கருத்தை வலியுறுத்துவதைக் காணலாம்.

அழுகணி சித்தர் பாடல் 200
ஞான சூத்திரம் 24
அழுகண் வைத்தியம்
அழுகண் யோகம்

அழுகண் ஞானம் ஆகிய நூல்களை இயற்றியதாக சொல்லப்படுகிறது. நாகப்பட்டினத்தில் உள்ள நீலாய தாட்சி அம்மன் கோவில் வளாகத்தில் இவர் சமாதி இன்றும் உள்ளது.

38. மலைப் பெருமாள் சுவாமிகள்

காரைக்காலுக்கு அருகில் உள்ள ஆலத்தூரில் அருளாட்சி நடத்திவரும் அற்புதச் சித்தர் மலைப்பெருமாள் சுவாமிகள், நாகப்பட்டினம் மாவட்டம் பொறையாறு வட்டம் காட்டுச்சேரி எனும் சிற்றூரில் 18-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சுவாமிகள் தோன்றினார். இளம் வயதிலேயே சுவாமிகளின் பெற்றோர் மறைந்தனர். அதன் பின்னர் தமது சிற்றன்னையையும் அவரது குழந்தைகளையும் காப்பாற்றும் பொறுப்புக்கும் உரியவரானார்.

குடும்பத்தை காக்க அயல்நாட்டிற்கு சென்றார். நிரந்தரமான வேலை கிடைக்காத நிலையில் சிற்றன்னையின் வேண்டுகோளின்படி ஊர் திரும்பினார்.

ஒருநாள் பிறந்த ஊராகிய காட்டுச்சேரியை விட்டு வெளியேறிய சுவாமிகள் திரும்பி வந்தபொழுது துறவியாக மாறியிருந்தார். ''உங்களை எல்லாம் திருவருள் காக்கும்''

என்று கூறிய சுவாமிகள் ஊரினின்றும் பிரிந்து ஆலத்தூர் வந்து சேர்ந்தார். ஆலத்தூரில் சுவாமிகள் சித்தாடல்கள் புரிந்து வந்தார்.

ஒருமுறை ஆலத்தூருக்கு அருகில் உள்ள தூதுபோன மூலை எனும் சிற்றூரைச் சார்ந்த பெரிய தம்பிப்பிள்ளை எனும் பெருநிலக்கிழார் வழக்கம்போல ஆனி உத்திரத்தன்று ஆண்டுதோறும் சிதம்பரம் சென்று நடராஜரைத் தரிசிக்கும் பேறு இந்த ஆண்டு வாய்க்கவில்லையே என வருந்தினார்.

அவ்வழியே வந்த மலைப்பெருமாள் சுவாமிகள் பண்ணையாரிடம் கண்களை மூடியபடி தம் தோளைப் பிடித்துக் கொள்ளச் சொன்னார். பிள்ளையவர்கள் கண்களைத் திறந்தபோது சிதம்பரத்திலிருந்தார். தரிசனம் முடிந்து பிரசாதம் பெற்றபின் மீண்டும் கண்களை மூடி சுவாமிகளின் தோளைப் பற்றியபின் கண்களைத் திறக்க தம் வயலில் இருந்தார். மறுநாள் பெரியதம்பிப்பிள்ளை "மலைப்பெருமாள் சுவாமிகள் பெரிய சித்தர், அவருக்கு யாரும் இடையூறு செய்யக்கூடாது மீறினால் தண்டிக்கப்படுவார்கள்". என்று பறையறிவித்தார்.

அதுமட்டுமன்றி சுவாமிகள் தங்கியிருந்த பகுதியைச் செப்பம் செய்து சுவாமிகளுக்கு உரிமையாக்கியதுடன் பத்திரம் செய்து கொடுத்தார். அதனை தொடர்ந்து சுற்றுப்பகுதி மக்கள் தம் உடற்பிணி தீர சுவாமிகளை நாடி வந்தனர். வந்தவர்கள் பூரண நலம் பெற்று அகமும் முகமும் மலரச் சென்றனர். சுவாமிகளின் அருட்செயல்களைக் கேள்விப்பட்ட சிற்றன்னை

சுவாமிகளை தரிசிக்க ஆலத்தூர் வந்தார். சுவாமிகளுக்கு தாம் ஆசைவுடன் கொண்டுவந்த பிட்டையும், வடையையும் அளித்தார். சுவாமிகள் சிறிது உண்டு சுற்றியிருந்த அன்பர்களுக்கும் பகிர்ந்தளித்தார். அதனால் பின்னாளில் சுவாமிகளுக்குப் பிட்டும் வடையும் படைக்கும் பழக்கம் ஏற்பட்டது.

சுவாமிகளுக்கும் கோயில் கட்ட ஆலத்தூர் மக்கள் விரும்பினர். சுவாமிகளும் திருவுளம் காட்ட, கோயில் வேலை ஆரம்பமானது. பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டதால் அதற்கு சுவாமிகளின் தீவிர பக்தர் சுப்புப்பிள்ளை என்பவர் தென்னாப்பிரிக்காச் சென்று பொருளீட்டச் சென்றார்.

ஒருநாள் தன் பக்தர் சுப்புப்பிள்ளையின் கனவில் தோன்றிய சுவாமிகள் விரும்புவதாகவும் கூறினார்கள். ஊர் திரும்பிய சுப்புப்பிள்ளை, சுவாமிகளின் திருவடி வீழ்ந்து கதறினார்கள். பின் பிள்ளையிடம், "ஆவணி மாதம் மூலநட்சத்திரத்தன்று இரவு பன்னிரண்டு மணிக்கு சமாதி நிலை கூடும் எனவும், அப்பொழுது தமது ஸ்தூலத் திருமேனியிலிருந்து வியர்வை பெருக்கெடுக்கும் என்றும் அப்பொழுது உடல் மறையுமளவு அதன்மேல் திருநீற்றைக் கொட்டுமாறும், திருநீறு உலர்ந்த பின் அதை எடுத்துப் பத்தரப்படுத்தி நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன்படுத்திக்கொள்" என்றார். சுப்புப்பிள்ளையும் ஓவியர் ஒருவரை அழைத்து சுவாமிகளின் உருவை வரையச் செய்தார்.

பூந்தோட்டம் :

காரைக்கால் பேருந்து வழித்தடத்தில் உள்ள ஊழியபத்து அல்லது விழுதியூர் பேருந்து நிறுத்தத்தில் இறங்கினால் அங்கிருந்து 21/2 கி.மீ. தூரத்தில் ஆலத்தூர் உள்ளது. ஆட்டோ வசதி உண்டு (பேருந்து வசதி இல்லை).

நாகப்பட்டினம்–சன்னா நல்லூர் வழித்தடத்தில் உள்ள நடக்கடை பேருந்து நிறுத்தத்தில் இருந்தும் 21/2 கி.மீ. தூரமே ஆலத்தூர், ஆலத்தூர் மேற்கு எல்லையில் மலைப்பெருமாள் சித்தரின் ஜீவசமாதிக் கோயில் உள்ளது.

39. உரிகட்டி சுவாமிகள்

தஞ்சை மாவட்டத்தில் மயிலாடுதுறை கும்பகோணம் பேருந்து வழித்தடத்தில் உள்ள ஊர் குத்தாலம், குத்தாலத்திற்குக் கிழக்கே சுமார் இரண்டு கி.மீட்டர் தொலைவில் உள்ள ஊர் சேத்ரபாலபுரம். (இத்தலத்தில் புகழ் பெற்ற பைரவர் கோவில் உள்ளது) அவ்வூரில் கிராமத் தலைவராகவும் நாட்டாண்மையாகவும் இருந்த கோவிந்தசாமி படையாச்சி என்பவரே சுவாமிகளைஅவ்வூரில் முதன்முதலாகக் கண்டவர்.

ஒருநாள் எப்போதும் போல் கோவிந்தசாமிப் படையாச்சி காலை வேளையில் காவிரியாற்றுப் பக்கம் சென்றார். அப்பொழுது அங்கிருந்த நாணல் புதர் ஒன்றில் பரப்பிரம்மமாய் ஒரு தவஞானி நிஷ்டையில் இருந்தார். அந்த ஞானி எப்பொழுது அங்கு வந்தார்? எவ்வளவு காலமாகத் தவமிருக்கிறார்? என்பதெல்லாம் யாருக்கும் தெரியாது.

சுவாமிகளைக் கண்ட கோவிந்தசாமிப் படையாச்சியார் நெடுஞ்சாண் கிடையாக சுவாமிகளின் முன்வீழ்ந்து


சித்தர் தேசம்
மகான் ஸ்ரீ உறிகட்டி சுவாமிகள்
சேத்திரபாலபுரம்.

வணங்கினார். சுவாமிகளின் சம்மதத்துடன் அழைத்து வந்த கோவிந்தசாமி சுவாமிகளை சேத்ரபாலபுரத்தில் மயிலாடுதுறை பிரதான சாலையின் தென்புறமுள்ள மாரியம்மன் கோயிலில் தங்கவைத்தார். அதன் பின்னர் அப்பகுதி மக்களுக்கு மன, உடல் பிணிகள் தீர்க்கும் அருமருந்தாக சுவாமிகள் விளங்கினார்கள். தன் உணவு தேவைக்கு அன்று பிச்சை எந்த வீட்டில் எடுக்க வேண்டும் என்று விரும்புகிறாரோ அங்கு மட்டுமே சென்று பிச்சை ஏற்பார்.

உண்டது போக எஞ்சிய உணவை, ஒரு பாத்திரத்தில் வைத்து உரியில் வைத்து எரவானத்தில் தொங்க விட்டுவிடுவார். பின்பு எப்பொழுது அந்த உணவை எடுத்தாலும் அவ்வுணவு ஆவிபறக்க சுடச்சுட இருக்குமாம். இதனை கண்டவர்கள் அதன் காரணமாக சுவாமிகளை உரிக்கட்டி சுவாமிகள் என்று அழைக்கலாயினர்.

சுவாமிகள் எப்பொழுதாவது மாரியம்மன் கோயிலுக்கு எதிரே பிரதான சாலைக்கு வடக்கே உள்ள குளத்தில் மூழ்கி எழுவதுண்டு. எழுந்தவுடன் அந்தக் குளம் முழுவதுமே நறுமணம் வீசுமாம். இப்படி அங்குள்ளோருக்குப் பெரும் அரணாக விளங்கிய சுவாமிகள் கார்த்திகை மாதம் மிருகசீரிஷம் நட்சத்திரத்தன்று பரிபூரணமானார்கள். சுவாமிகள் நூறாமாண்டு குருபூஜை 2006 என்பதால் சுவாமிகள் பரிபூரணமானது கி.பி. 1907ம் ஆண்டாக இருக்காலம். கருவறையுள் சிவலிங்கத் திருமேனி பிரதிஷ்டை

செய்யப்பட்டுள்ளது. வடக்குப் பார்த்த சன்னதி. கார்த்திகை மிருக சீரிஷத்தன்று குருபூஜை நடைபெறும்.

சுவாமியின் சமாதிக்கோயில் அமைந்துள்ள இடம் :

கும்பகோணம் மயிலாடுதுறை சாலையில் உள்ள குத்தாலத்திற்குக் கிழக்கில் மயிலாடுதுறை சாலையில் குத்தாலத்திலிருந்து சுமார் இரணடு கி.மீ. தொலைவில் உள்ளது. சேத்ரபாலபுரம். அங்கிருந்து தெற்கே கம்பர் பிறந்த தோழந்தூருக்கு ஒரு சாலை பிரிகிறது. அச்சந்திப்பே பேருந்து நிறுத்தம். அவ்விடத்திற்குச் சற்று மேற்கே பிரதான சாலையிலிருந்துது உள்ளடங்கிய மாரியம்மன் கோயில் உள்ளது. அக்கோயிலுக்கு மேற்கில் சாலையை ஒட்டி உரிகட்டி சுவாமிகளின் சமாதிக்கோயில் உள்ளது.

40. திருக்களர் ஆண்டவர் (எ)

செட்டிநாட்டுக் காரைக்குடிக்கு மேற்கே உள்ள கோவலூர் மடத்தின் மடாதிபதியாக விளங்கியவர் அருளாட்சி நடத்தியவர்கள் வீரசேகர ஞானதேசிக சுவாமிகள். சுவாமிகள் செட்டிநாட்டில் புதுவயல் எனும் ஊரில் கி.பி. 1848ம் ஆண்டு கீலக வருடம் ஆவணி மாதம் 12-ம் தேதி வெள்ளிக்கிழமை அருணாச்சலம், உமையாள் எனும் பெற்றோருக்கு மகனாய் அவதரித்தார். பெற்றோர் வீரசேகரன் என்று பெயரிட்டு அழைத்தனர். சுவாமிகள் மூன்று வயது சிறுவனாயிருக்கும் போதே தந்தையார் மறைந்தார். ஐந்தாம் வயதில் தக்க ஆசிரியரைக் கொண்டு தாயார் கல்வி கற்க ஏற்பாடு செய்தார். கல்வியில் சுவாமிகள் தேர்ந்து விளங்கினார்.

பத்தாம் வயதில் குலவழக்கப்படி அயல்நாடு சென்று பொருளீட்டி வரும்போது பொருளிடத்தும் அதைத்தேடும் வழியிலும் வெறுப்புற்றுத் தம்மூர் வந்து சேர்ந்தார்.

வீரசேகரருக்கு 16 வயது நிறைந்ததும் வீட்டைத் துறந்து கோயிலூர் மடம் அடைந்தார். அங்கு மடாதிபதியாக விளங்கிய கருணாநிதி எனும் சிதம்பர ஞானதேசிகரை தரிசித்து அடிபணிந்தார். அங்குத் தம்மைத் தேடிவந்த வீட்டாரை விலக்கி ஒருமனதுடன் வேதாந்தப் பாடம் பயின்றார். அதன்பின் நாகப்பட்டினத்திற்கு மேற்கே உள்ள பொருள் வைத்த சேரியில் உகந்த லிங்க ஞானதேசிகர் திருமடத்தில் தலைமைப் பொறுப்பில் இருந்த சடையப்ப சுவாமிகளிடம் முறைப்படி காவியாடையேற்று சந்நியாசம் மேற்கொண்டார்.

துறவறம் மேற்கொண்ட பின் கோவிலூர் திரும்பிய வீரசேகரர் குருவிடம் பாடம் கேட்டு வரலானார். துறவு வழக்கப்படி பல ஊர்களுக்கும் தேசாந்திரம் சென்று சுவாமிகள் யாத்திரை முடிவில் சிதம்பரம் வந்தனர். அங்கு மௌனசாமி மடத்தில் தங்கி இருந்தார். சிதம்பரத்தில் மடம் அமைந்திருந்த பொன்னம்பல ஞானதேசிகர் மடத்தில் சிலகாலம் இருந்தார்.

இதற்கிடையே கோவிலூரில் மடாதிபதி பரிபூரணமாக அப்பீடத்திற்குத் தலைமை ஏற்கும் வாய்ப்பும் வீரசேகரருக்கு ஏற்பட்டது. அவரோ தலைமையை ஏற்க அஞ்சினார். சிதம்பரம் பொன்னம்பல ஞானதேசிகர் பலவாறு உரைத்து சம்மதிக்க வைத்தனர். கோவிலூருக்கு வந்து வீரசேகர ஞானதேசிகர் எனும் பெயருடன் கோவிலூர் மடாதிபதியாகப் பொறுப்பேற்றார். சுவாமிகள் அருளாற்றலால் பல்வேறு மடங்களைச் சேர்ந்தவர்களும் சுவாமிகளை அடிபணிந்து வந்தனர். ஏராளமான சீடர்களும் பாடங்கேட்டு நற்பேறடைந்தனர்.

கோவிலூர் உள்ளிட்ட பல இடங்களில் திருப்பணிகள் செய்வித்தார். தம்மை அண்டிய அன்பர்கள் பலருக்கும் தமது தவ ஆற்றலால் நல்வாக்குக்கூறி, அவர்தம் வாழ்வில் நன்மைகள் ஏற்படச் செய்வித்தார். வீரசேகர ஞானதேசிகரிடம் அன்பர் சிலர் சோழ நாட்டிலுள்ள திருக்களர் என்னும் ஊரில் பாரிஜாதவனேஸ்வரர் திருக்கோயிலைத் திருப்பணி செய்ய வேண்டினார். வீரசேகரரும் சம்மதித்து திருக்களர் வந்து திருப்பணியைத் தொடங்கினார். கோயிலை முற்றிலுமாகப் புதுப்பித்தும் புதிதாக ஐந்து திருத்தேர்கள் செய்வித்தும் சிறந்த முறையில் கும்பாபிஷேகம் செய்வித்தனர். பின்னர் கோயிலூர் சென்று மீண்டும் திருக்களரில் பிரம்மோற்சவம் நடத்துவதற்காக சென்றார். திருக்களரில் சுவாமிகளால் ஏற்படுத்தப்பட்ட திருமடத்தில் தங்கி விழாக்களை நடத்தினர். ஒன்பதாம் நாளில் பஞ்சமூர்த்திகளும் ஐந்து தேர்களில் பலனி வரும்போது, தேர் கீழவீதியில் தென்மூலையில் செல்லாமல் தங்கிவிட்டது. எவ்வளவு முயன்றும் செல்லாததால் சுவாமிகள் மடத்திற்கு வந்துவிட்டனர். சுவாமிகளுக்குத் தமது அந்திய காலக் குறிப்பு தெரிந்தது. அன்பர்களை அழைத்து திருக்களர் முதலிய கோயிற் பணிகளை அவரவரிடம் ஒப்படைத்தார்.

மறுநாள் பத்தாம் நாள் பூவனூர் இராசு முதலியார் முதலிய அன்பர்களை அழைத்த சுவாமிகள் இன்று எப்படியும் தேர் நிலைக்கு வந்துவிட வேண்டும் எனப் பணித்தார். தாமே முன்சென்று தேரை வடம் பிடித்து இழுத்தார்கள். சுவாமிகள் மடத்திற்கு வந்து சிறிது ஓய்வு எடுத்து மீண்டும் செல்லும்போது தேர் தெற்கு வீதிக்கு வந்திருந்தது. பல்லாயிரம் மக்கள்

பெருத்த ஒலியை எழுப்ப, தாரை, தப்பட்டை போன்ற வாத்தியங்களின் ஒலியுடன் தேர் நகர்ந்தது. இருகரங்களையும் சிரசின் மேற்குவித்து, இறைவனின் திருநாமத்தை உச்சரித்து தேர் வருவதைப் பார்த்துக் கொண்டிருந்த வீரசேகர ஞானதேசிகரின் திருமேனியிலிருந்து உயிர்ப் பறவை பறந்தது. அவரது திருமேனி நின்ற நிலையிலிருந்து பூமியில் சாயும்போது அருகில் இருந்தோர் தாங்கிப் பிடித்தனர். திருக்களர், பரிஜாதவனேஸ்வரர் சிவன்கோயில் ஈசானிய திசையில் (வடகிழக்கு) வடக்கு வீதியின் வடபுறத்தில் மடத்திற்குச் சொந்தமான இடத்தில் குகை செய்விக்கப்பட்டது. சுவாமிகள் பரிபூரணமான காலம் கி.பி. 1911ம் ஆண்டு விரோதிகிருது வருடம் வைகாசி மாதம் 27-ம் தேதி வெள்ளிக்கிழமை பகல் 11 மணிக்கு விசாகம் நட்சத்திரமாகும். சமாதிக்கோயில் மன்னார்குடிக்கும் திருத்துறைப்பூண்டிருக்கும் இடையில் மன்னார்குடிக்கு அருகில் திருப்பத்தூர் என்னும் சிற்றூரில் அமைந்துள்ளது.

41. சூட்டுக்கோல் இராமலிங்க சுவாமிகள்

மன்னார்குடி என வழங்கும் ராஜமன்னார்குடியில் ஜீவசமாதி நிலையிலிருந்து அருள்பாலித்து வரும் இராமலிங்க சுவாமிகளின் சித்தர் பீடம் அமைந்துள்ளது. இது ஐயர் சமாது எனவும் அழைக்கப்டுகிறது. வழிவழியாக வரும் செவிவழிச் செய்திகள் மூலமே நாம் சுவாமிகள் தொடர்பான சில செய்திகளை அறியமுடிகிறது.

சுவாமிகள் தனது இறுதிக்காலத்தில் மன்னார்குடியில் ஜீவசமாதி அடைந்தார். தம்மை நம்பிய பக்தர்களைப் பாவ ஊழ்வினைகளிலிருந்தும், நோய் நொடிகளால் இன்னல்பட்டு வரும் அடியவர்களை இன்பமாய் வாழவைக்க தன் கரத்திலிருக்கும் சூட்டுக்கோலால் அடியவர்கள் மீது சூடுபோட்டு விடுவாராம். உடனே பக்தர்கள் நோய் நீங்கி நலமுறுவார்களாம்.

சுவாமிகள் தான் முக்தியடையும் காலத்தை முன்கூட்டியே தெரிவித்து, இந்த இடத்தில்தான் சமாதி வைக்கவேண்டும் என்று சொல்லி இருக்கின்றார். சுவாமிகள், "நான்

முக்தியடையும் காலத்தில் துணி நெய்யும் தறிகள் நூல் அறுந்துவிடும். அரைக்கும் செக்கு, ஓடுகின்ற சக்கரங்கள் இவையெல்லாம் ஒரு நிமிடம் நின்றுவிடும். அதுதான் நான் முக்தியடையும் அறிகுறிகள். அப்படி முக்தியடைந்த பின் ஸ்தூலத்தை சமாதி வைக்கும் இடத்தைச் சுற்றித் தேர் ஓடும். எதிரே மயானம் இருக்கும். சமாதி வைக்கும் இடத்திற்கு அருகே குளம் இருக்கும். அந்த இடத்தில் சமாதி வைக்க வேண்டும்'' என்று சொன்னார்.

உரிய காலம் வந்தது. சுவாமிகள் திருவாரூர் சென்று வருவதாகக் கூறிச் சென்றார். ''தண்ணீர் குன்னம்'' என்ற இடத்தில் சென்று கொண்டிருந்தபோது, மாலை வேளையில் சுவாமிகள் ஜீவமுக்தி அடைந்தார். அதே நேரத்தில் சுவாமிகள் தெரிவித்தது போல நிகழ்ச்சிகள் நடந்தன. மன்னார்குடியிலிருந்த அன்பர்கள் திரண்டு சென்றனர். சுவாமிகளின் திருமேனியை கட்டிலில் வைத்துச் சுமந்தனர். திருமேனி கனமாக இருந்ததால் தூக்கி வருவது கடினமாக இருந்தது. அப்போது தண்ணீர் குன்மை ஊர் மக்கள், சுவாமிகளைத் தூக்கி செல்வது கடினம். எங்கள் ஊரிலேயே சமாது வைத்துக் கொள்கிறோம் என்று கேட்டனர். சுவாமிகளைச் சுவாமிகளைச் சுமந்து வந்த மன்னார்குடி அன்பர்களும் இசைவு தந்தனர்.

அப்போது மூர்ச்சையடைந்த நிலையிலிருந்த சுவாமிகள் திடீரென எழுந்து, ''ஏன்டா அறிவு கெட்டவர்களே உங்களிடம் என்னை எங்கே சமாது வைக்கச் சொன்னேன். இங்கு

எதற்காக வைக்க முற்படுகிறீர்கள்" என்று திட்டினார்கள். அன்பர்கள் நடுங்கி சுமை கனமாக இருந்தாலும் ஊர் மக்கள் கேட்டதாலும் தவறு செய்துவிட்டோம் என்று கூறி மன்னிப்புக் கேட்டனர்.

அப்போது சுவாமிகள் நான் இந்தக் கட்டிலில் படுத்துக் கொள்கிறேன். இனி சுமைபாரம் இருக்காது. என்னை மன்னார்குடிக்கு தூக்கிச் சென்று நான் சொன்ன இடத்தில் சமாதி வையுங்கள் என்று கூறி நிஷ்டையில் ஆழ்ந்தார். அன்பர்கள் அவ்வாறே மன்னார்குடியில் தற்பொழுது சமாதி உள்ள இடத்தில் சமாதி செய்து கோயில் எழுப்பினர்.

கிழக்குப் பார்த்த சன்னதியில் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிப்பட்டு வருகிறார்கள். சமாதி மேலிருக்கும் லிங்கம் நவபாஷானத்தால் ஆனது என்றும் சிலர் சொல்கின்றனர். மாயாண்டி சுவாமிகள் மன்னார்குடி எனும் ராஜமன்னார்குடியில் ஊரின் கிழக்கு எல்லையில் வடக்கு நோக்கித் திருவாரூர் சாலை பிரிந்த செல்லும். அச்சாலையில் சிறிது தூரம் சென்றால் சாலையின் மேல்புறம் கூட்டுக்கோல் இராமலிங்க சுவாமிகளின் ஜீவ சமாதிக்கோயில் உள்ளது.

42. தாண்டவராயர் சுவாமிகள்

ஸ்ரீ நாராயண குருவின் சீடராக விளங்கி, புகழ்பெற்ற கைவல்ய நவநீதம் எழுதிய ஸ்ரீ தாண்டவராய சுவாமிகள் நன்னிலத்தில் கி.பி. 1408ஆம் ஆண்டு மாதவநந்தர், அம்பிகை அம்மையார் ஆகிய பெற்றோருக்குத் திருமகனாய் அவதரித்தார்.

வெகுநாள் மகப்பேறின்றி வருந்திய மாதவ நந்தா தம்பதியர் மகப்பேறு வேண்டி திருப்பதி சென்று ஏழுமலையானைத் தொழுதனர். ஆண்டவனும் கனவில் அருள்புரிந்த வண்ணம் விரைவில் மகப்பேறு வாய்க்கப் பெற்றார். இறைவனது அருளால் பிறந்தமையால் தம் மகனுக்கு அருட்பிரகாசர் என்று பெயரிட்டு வளர்ந்து வந்தனர். ஒருமுறை நாராயண குரு அருட்பிரகாசரின் இல்லத்தின் வழியே வந்தார். அருட்பிரகாசர் அவரது காலில் நெடுஞ்சாணாக விழுந்து வணங்கினார். தம்மை

ஆட்கொண்டு அருள வேண்டினார். அருட்பிரகாசரைத் தாங்கிப் பிடித்த நாராயணகுரு "தாண்டவா நீ! ஞானபேரின்ப நற்கதியடைவாய்" என வாழ்த்தினார். ஆசிரியர் அழைத்ததிலிருந்து அருட்பிரகாசரின் பெயர் தாண்டவராயர் என வழங்கலாயிற்று. சீடராக ஏற்றுக் கொண்டபின் நாராயணகுரு பல்வேறு நற்பொருள் விளங்கக் கற்பித்துப் பின் துறவறமும் நல்கி வாழ்த்தினர். தாண்டவராயரும் தலைசிறந்த மாணவராகத் திகழ்ந்தார்.

நாராயண குரு பரிபூரணமடைந்த பின் தவக்குடில் வளாகத்திலேயே சமாதியெழுப்பி வழிபட்டனர். ஒருநாள் தாண்டவராயர் குருநாதரை வணங்கி சமாதி யோகத்தில் ஆழ்ந்தனர். அப்பொழுது நாராயணகுரு தோன்றி, அன்பனே நீ உலகில் உள்ள மக்களின் துன்பங்கள் நீங்குமாறு அவர்கள் தூய மெய்யறியவை அடையுமாறும் நீ கற்ற வேதாந்த நூல்களின் சாரங்கள் முழுவதையும் திரட்டி வேதாந்த நூல் ஒன்றை இயற்றுக! என்று அருள்பாலித்தனர்.

தம் குருவின் ஆணையைச் சிரமேற்கொண்ட தாண்டவராயர் கைவல்யநவநீதம் எனும் ஒப்பற்ற நூலை இயற்றினார். மக்கள் அந்நூலை போற்றிப் பரவலாயினர். அருளாட்சி நடத்திவந்த தாண்டவராய சுவாமிகள் தம் குருவைப்போல் அவர்மீது கொண்ட அளவற்ற பற்றினால் குருமறைந்த அதே வைகாசி விசாகத்திலே கி.பி. 1534ஆம் ஆண்டு பரிபூரணம் எய்தினார். நாராயணகுருவிற்கு அருகிலேயே இவரது திருமேனியும் குகை செய்விக்கப்பெற்றது. குரு. சிஷ்யர் இருவருக்கும் குருபூஜை

விழா வைகாசி மாதம் விசாக நட்சத்திர தினத்தில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நாராயணத் தாண்டவேஸ்வரர் ஆலயத்துள் ஒரே கருவறையுள் தென்புறமிருக்கும் லிங்கத்திருமேனி ஸ்ரீ குருப் பரம்பரை ஸ்ரீ நாராயணசுவாமி அதிஷ்டானமாகும். வடபுறமுள்ள லிங்கத்திருமேனி (சீடர்) ஸ்ரீ தாண்டவராயரின் அதிஷ்டானமாகும்.

சமாதிக்கோயில் அமைந்துள்ள இடம் (நன்னிலம்) :

கும்பகோணத்திற்குக் கிழக்கில் 20 கி.மீ. தொலைவிலும் மயிலாடுதுறைக்குக் தெற்கிலும் அமைந்துள்ள ஊர். கும்பகோணத்திலிருந்தும் மயிலாடுதுறையிலிருநதும் பேருந்து வசதிகள் உண்டு. நன்னிலம் பேருந்து நிலையத்திற்கு மிக அருகில் கிழக்குப்புறம் உள்ளது. பிள்ளையார் கோவில் தெற்குத் தெரு அவ்வீதியின் மேற்புறம் அமைந்துள்ளது. ஸ்ரீ நாராயண தாண்டீஸ்வரர் ஜீவசமாதி ஆலயம். ஆலயத்துள் ஒரே இடத்தில் அருகருகே சிவலிங் திருமேனிகளுடன் காட்சியளிப்பவை இருமகான்களின் சமாதி பீடங்களாகும். தென்புறத்திலிருப்பது ஸ்ரீநாராயணகுருவின் அதிஷ்டானம் வடபுறத்திலுளளது. ஸ்ரீதாண்டவராய சுவாமிகளின் அதிஷ்டானமாகும்.

43. ஆதித்த குரு சுவாமி

சுமார் 300 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஜீவசமாதி தஞ்சாவூர் கரந்தையிலுள்ள ஸ்ரீ ஆதித்த குருவின் ஜீவசமாதியாகும். இதுவரை வேறெங்கும் காணாத ஓர் அமைப்பு. கருவறையில் சிவலிங்கம் உள்ளது. அதற்கு இரண்டு அல்லது மூன்றடி தள்ளி சற்று உயரமான இடத்தில் உள்ளடங்கி சுமார் 4 X 4 அடி சதுரமுள்ள அறையும் அதன் நடுவில் ஆவுடையார் இல்லாத சுமார் நான்கு அல்லது ஐந்தடி உயரமுள்ள லிங்கமும் உள்ளது. அதுதான் ஆதிக்குருவின் சமாதி. கிழக்குப் பார்த்த சன்னதி. சமாதிக்கு முன்புறமும், தென்புறமும் அகன்று பரந்த இடமும் சமாதியை ஒட்டி மடமும் உள்ளன. சமாதிக்குத் தென்புறம் அதிஷ்டான அமைப்பில் ஒரு சமாதி. அது மடத்தில் பூஜை செய்து வந்த சாமியார் ஒருவரின் சமாதி. அதிலுள்ள கல்வெட்டில் சொக்கலிங்கசாமி மறைவு 25-8-1894 என்று உள்ளது. அதை எடுத்து வெளியே அம்மடத்தில் பணிபுரிந்த மேலும் நால்வரது சமாதிகள்

வருவாராம். ஸ்ரீபாடகச்சேரி) சுவாமிகள் அமர்ந்த கோலத்தில் உள்ள கதையிலான அழகிய சிலை ஒன்று ஆதித்த குரு மடத்தில் உள்ளது.

ஆதித்தகுருவின் சமாதி காந்தை வடவாற்றின் வடகரையை அடுத்து உள்ளது. இதே வடவாற்றின் தென்கரையில் பழைய திருவையாறு சாலையின் மேல்புறம் பஞ்சநதபாவா சுவாமிகளின் ஜீவசமாதி உள்ளது. இருவரும் மராட்டிய மன்னர்களின் காலத்தில் வடநாட்டிலிருந்து வந்தவர்கள் எனவும் கரந்தை. இங்குள்ள வடவாற்றின் வடபுறம் கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அருகில் உள்ளது. சேர்வைக்காரன் தெரு. அங்கிருந்து செல்லும் ஆற்றங்கரைச் சந்தின் நடுவில் ஸ்ரீ ஆதித்த குருவின் சமாதிக் கோயிலும் மடமும் அமையப்பெற்றுள்ளது.

44. முத்தைய தேசிக சுவாமிகள்

மயிலம் பாலசித்தர் வழிவந்த மரபுகளுள் இம்மரபு ஒன்று. இம்மரபில் வளவனூர் என்னும் ஊரில் வடபகுதியில் குமாரபூரி எனும் பெயர் கொண்ட பகுதியிலுள்ள வன்னி மடாலயத்தில் 57வது பட்டமாக விளங்கி ஜீவசமாதி கொண்டிருப்பவரே ஸ்ரீ முத்தைய தேசிக சுவாமிகள்.

சுவாமிகளுக்கு முன்பிருந்த 55 மடாதிபதிகளின் சமாதிகள் விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் பகுதியில் உள்ளதாகத் தெரிகிறது. 56வது குருவான ஸ்ரீ சிவஞான சுவாமிகள் ஆகாய மார்க்கமாக (அந்தர்தியானமாக) மறைந்து விட்டார். 57வது இம்மடாலயத்தில் (வன்னி மடலாயம்) ஜீவசமாதியில் அருள்பாலிக்கின்றார். தவத்திரு முத்தைய தேசிக சுவாமிகள் முருகப்பெருமானின் மீது மிகுந்த அன்பும் பக்தியும் கொண்டு விளங்கினார்.

மைலம் முருகப்பொருமானின் அருளால் பல சித்துக்கள் கைவரப்பெற்ற மகாசித்தராக வாழ்ந்த சுவாமிகள் அடியவர் குறைகள், வியாதிகளைத் தீர்த்து வந்துள்ளார். அந்தக் காலத்தில் மடாதிபதிகள் மேனா என்ற பல்லக்கில் பயணம் செய்வது வழக்கம். அவ்வாறே நம் சுவாமிகளும் ஒருமுறை சொல்லும்போது அதை பொறுக்காத அந்தணர்கள் சிலர், சுவாமிகளின் பெருமையை உணராததால் அவர்கள வசிக்கும் பகுதி வழியாக சுவாமிகள் பல்லக்கு வரும்போது தாக்க முற்பட்டனர். பல்லக்கைத் தூக்கி வந்தவர்கள் பயத்தில் அப்படியே விட்டுவிட்டு ஓடிவிட்டனர்.

பல்லக்கு அப்படியேஅந்தரத்தில் நின்றது. தாக்கியவர்களின் கைகள் செயலிழந்து விட்டன. தவற்றை உணர்ந்து அவர்கள் மன்னிப்பு கேட்டதும் சுவாமி அவர்களது கைகளைச் செயல்பட வைத்தார். பிறகு அவர்களே சுவாமியின் பல்லக்கை சுமந்து சென்றனர்.

சுவாமிகளின் சித்தாடல்கள் ஏராளம். சுவாமிகள் ஜீவசமாதியடைந்து 300 ஆண்டுகளுக்கும் மேலாகிவிட்டன. சுவாமிகள் ஜீவசமாதியான போது "நான் ஜீவசமாதி ஆன பிறகு ஒரு வருடம் கழித்து மீண்டும் திறந்து பாருங்கள். அப்போது மாலைகள் வாடாமலும், உடல் கெடாமலும் இருந்தால் நான் உயிரோடு அங்கு சமாதியில் இருக்கிறேன் என்று பொருள். இல்லையென்றால் இறந்து விட்டேன் என்று நினைத்துக் கொள்ளுங்கள்" என்று கூறி ஜீவ சமாதியடைந்தார்கள்.

அவ்வாறே ஒரு வருடம்ட கழிந்த பின் அதே நட்சத்திரத்தன்று சமாதியைத் திறந்த போது மலர்கள் வாடாமலும் உடல் கெடாமலும் அப்படியே இருந்தவனவாம். சுவாமிகளின் ஜீவ சமாதியின் முன்னுள்ள மண்ணை எடுத்து நெற்றியில் இட்டுக்கொண்டால் வியாதிகள் போகும் எனும் நம்பிக்கை இன்றும் நிலவுகிறது. சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்பு சுவாமிகள் சமாதி மேல் கிழக்கு பார்த்த வண்ணம் களி மண்ணால் செய்து வைக்கப்பட்ட சிவலிங்கப் பிரதிஷ்டையானது இறுகி இன்று வரை எந்த சேதமும் இல்லாமல் கருங்கல்போல் கல்லாகி உள்ளது.

இச்சன்னதியில் தினசரி வழிபாடுகளும் வருடத்தில் ஆடி மாதம் மகம் நட்சத்திரத்தில் குருபூஜை விழாவும் நடைபெற்று வருகிறது. சமாதி கோயில் அமைந்துள்ள இடம் விழுப்புரத்திற்குக் கிழக்கே விக்கிரவாண்டி தஞ்சாவூர் நெடுஞ்சாலையில் கோலியனூர் குறுக்குரோடு உள்ளது. அந்த நான்கு வழி சந்திப்பிலிருந்து கிழக்கே பாண்டி செல்லும சாலையில் 2 கி.மீ. தூரத்தில் உள்ளது வளவனூர். கோலியனூர் குறுக்குச் சாலையிலிருந்து செல்லும்போது வளவனூரில் நுழைந்ததும் இரண்டாவது பேருந்து நிறுத்தத்தில் இறங்கி சற்று வடக்கு நோக்கிச் சென்றால் வன்னிமடாலயத் தெரு வரும். அத்தெருவிலுள்ள வன்னி மடலாயத்துள் ஸ்ரீ முத்தைய தேசிக சுவாமிகளின் ஜீவசமாதி தரைமட்டத்திற்குக் கீழே பாதாளத்தில் அமைந்துள்ளது.

45. ரெங்கையா சுவாமிகள்

சுவாமிகள் சுமார் 200 ஆண்டுகளுக்குமுன் இப்பகுதியில் சஞ்சாரம் செய்தவர். சுவாமிகள் வடநாட்டில் உத்திரப்பிரதேசம் கான்பூர் பகுதியிலிருந்து வந்தவர் என்பது செவிவழிச் செய்தியாகும்.

சுவாமிகளின் சமாதிமேடை சிறிய கோபுர அமைப்பில் உள்ளது. சமாதி மேடை மேடையின் கூம்புப் பகுதியில் இஸ்லாமிய தர்காக்களில் சமாதி மேடையில் போர்த்தியிருப்பது போல அலங்காரத் துணி போர்த்தப்பட்டுள்ளது. ஆண்டுக்கொருமுறை பங்குனி மாதம் மகம் நட்சத்திரத்தன்று குருபூஜை நடக்கும்போது அத்துணி அகற்றப்பட்டு மேடையில் சந்தனம் பூசப்படுகிறது. மற்றபடி தினசரி அபிஷேக ஆராதனைகள் இல்லை. தினசரி நெய்வேத்தியத்துடன் பூஜை மட்டும் நடைபெறுகிறது.

சுவாமிகள் பைரவ உபாசனை உள்ளவராக இருந்திருக்க வேண்டும். மதியம் சுவாமிகளுக்குப் படையல் வைத்து பூஜை

செய்யும்போது பெரிய காண்டா மணியை ஒலிக்கச் செய்வர். அம்மணி ஒலிக்கத் தொடங்கியதும் மடவளாகத்துள் அந்நேரத்தில் வழக்கமாகக் கூடும் நாய்கள் ஒருசேர சங்கொலிபோல ஒலி எழுப்புகிறது. வழக்கமாக நாய்கள் எழுப்பும் ஊளையிலும் இவ்வொலி வேறுபட்டிருக்கும். வழக்கமாக வரும் நாய்கள் மட்டுமின்றி அந்நேரத்திற்குப் புதிதாக ஏதேனும் நாய் வந்தால் அதுவும் அதே சங்கொலியை எழுப்புவதை இன்றும் காணலாம்.

சுவாமிகளின் சமாதி இருக்கும் திருமடத்திற்குத் தெற்கே குடமுருட்டி ஆறு ஓடுகிறது. அந்தக் காலத்தில் அப்பகுதி வனமாக இருந்தது. அப்பொழுது ஆற்றில் நீர்ப்பெருக்கு அதிகமாக உள்ள காலங்களில் நாகூர் அன்பர் சுவாமிகளின் நித்திய பூஜைக்கு வேண்டிய பூக்களைத் தொடுத்து அவற்றைப் பாதுகாப்பாக முடித்து நாயின் கழுத்தில் மாட்டிவிடுவாராம். அந்நாய் ஆற்றில் நீந்தி வந்து சுவாமிகளிடம் சேர்ப்பிக்குமாம்.

சுவாமிகளின் அருளாற்றலால் பயனடைந்த அன்பர்கள் மட்டுமின்றி தேசாந்திரம் செல்லும் சாதுக்களும் சுவாமிகளைத் தரிசித்து தங்கிச் செல்வதுண்டு. ஒருமுறை சுவாமிகள் நிஷ்டை கூடுவதற்கு முன் தாம் நிஷ்டை கூடியிருக்கும்பொழுது முடிவில் பரிபூரணமாவேன் என்று முன்னதாகவே தாம் பரிபூரணமாகும். நாளையும், நேரத்தையும் கூறினார்.

இச்செய்தி நாகூர் அன்பருக்குத் தெரிந்தது. மனம் பதறி சுவாமிகளைக் காண ஓடோடி வந்தார். சுவாமிகளைக்

காணாமல் தம்மால் இருக்க முடியாது. அதற்கு முன் தம்முடிவு ஏற்பட விரும்பினார். சுவாமிகள் நிஷ்டை கூடியிருக்கும் நேரத்தில் நாகூர் அன்பர் வந்து சேர்ந்தார். அவர் விரும்பியவாறே சுவாமிகள் பரிபூரணமானவுடன் அன்பரது ஆவியும் பிரிந்தது. அப்பொழுது உடன்வந்த நாயும் முடிவை எய்தியது.

அன்பர்களும், அடியவர்களும் கூடி சுவாமிகளின் ஸ்தூலத் திருமேனியைக் குகை செய்வித்துக் கோயில் எழுப்பினர். சுவாமிகளின் சமாதிக்குக் கிழக்கில் சுமார் 50 அடி தூரத்தில் நாகூர் அன்பரையும், நாயையும் அருகருகே அடக்கம் செய்தனர். சுவாமிகளின் சமாதி கிழக்குப் பார்த்த சன்னதி. இம்மடத்தில் குருபூஜை விழா பங்குனி மாதம் மகம் நட்சத்திர தினத்தில் நடைபெற்று வருகிறது.

காரைக்காலுக்கும், நாகூருக்கும் இடையே செல்லும் என்.எச். 45 ஏ தேசிய நெடுஞ்சாலையில் காரைக்காலுக்குத் தெற்கே 11 கி.மீ. தொலைவிலும் நாகூருக்கு வடக்கே இரண்டு கி.மீ. தொலைவிலும் மேலவாஞ்சூர் உள்ளது. அங்கு தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி மேற்குப்புறம் ஸ்ரீரெங்கையா சுவாமிகள் ஜீவசமாதி மடம் எனும் பெயர் பொறித்த நுழைவாயில் வளைவு (ஆர்ச்) உள்ளது. அதன் வழியாக கொஞ்ச தூரம் உள்ளே சென்றால் உள்ளடங்கி மடம் உள்ளது. அம்மடத்தில் கிழக்குப் பார்த்து ஸ்ரீரெங்கையா சுவாமிகளின் சமாதிக் கருவறை அமையப் பெற்றுள்ளது.

46. புண்ணாக்குச் சுவாமிகள்

புண்ணாக்கு சுவாமிகள் கி.பி. 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திருமலைராயன் பட்டினத்தில் கள்ளிமேடு என்ற இடத்தில் தங்கியிருந்து இப்பகுதியில் வாழ்ந்த மக்களின் நோய்களை குணமாக்கினர் சுவாமிகளின் வயது போன்ற விவரங்கள் எதுவும் தெரியவில்லை. சுவாமிகள் பெரிய அருளாளர் என்பதால் மக்கள் அவரைத் தரிசித்ததையே பெறும் தவப்பயனாக நினைத்து அவரை வழிபட்டார்கள்.

சுவாமிகள் தங்கியிருந்த பகுதிகளில் வசித்த மருத செட்டியார் தம்வீட்டின் பின்புறம் செக்கு வைத்து எண்ணெய் வியாபாரம் செய்து வந்தார். அவர் சுவாமிகளுக்குத் தினமும் எள்ளுப் புண்ணாக்குக் கொடுத்து வந்தார். சுவாமிகளும் அதைத்தான் உணவாகக் கொள்வார். அதனால் மக்கள் அவரைப் புண்ணாக்குச் சாமி என்று அழைத்தனர், ஒருநாள் மருத செட்டியார் குடும்பத்துடன் வெளியில் சென்றிருந்தார். அப்பொழுது செட்டியார் வீட்டுக்கு வந்த சுவாமிகள்

புண்ணாக்கு கேட்டார். அங்கு வேலை செய்த வேலையாள் புண்ணாக்கு கொடுக்காமல் விரட்டி விட்டார். சுவாமிகளும் ஏதும் பேசாமல் வேறெங்கும் செல்லாமல் கள்ளி மேட்டில் போய் அமர்ந்து விட்டார்.

செட்டியார் வீட்டில் செக்கில் போட்ட எள், எண்ணெய் பிரியாமல் ஆடிக்கொண்டேயிருந்தது. மாலையில் வீடு வந்த மருத செட்டியார். "காலையில் போட்ட எள் இன்னுமா எண்ணெய் பிரியவில்லை? என்ன நடந்தது?" என்று கேட்டார். வேலையாள், புண்ணாக்குச் சாமி வந்து புண்ணாக்குக் கேட்டதையும் தான் மறுத்ததையும் கூறினார். உடனே செட்டியாரும் அவர் மனைவியும் கள்ளிமேடு சென்று சுவாமிகளின் காலில் விழுந்து மன்னிக்க வேண்டினர். சுவாமிகளும் மன்னித்து அஞ்ச வேண்டாம் வீட்டுக்குச் செல்லுங்கள் என்று கூறினார். செட்டியார் வீட்டுக்கு வந்து பார்த்தபொழுது எள்ளிலிருந்து எண்ணெய் பிரிந்திருந்ததாம். அன்று முதல் சுவாமிக்கு ஒரு நாள் கூட புண்ணாக்கு தர தவறுவதில்லையாம்.

ஒருநாள் தம்மை தரிசிக்க வந்த சதாசிவம் பிள்ளையிடம் உன் இடத்தில்தான் ஜீவசமாதியாகப் போறேன். ஏற்பாடு செய் என்று கூறினாராம். உடனே சதாசிவம் பிள்ளை தற்போது மடம் இருக்கும் இடத்தை விலைக்கு வாங்கினார். கி.பி. 1895-ம் ஆண்டு மார்கழி மாதம் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் சுவாமிகள் பரிபூரணமானார்கள். குழிக்குள் சுவாமிகளின் தலை வடக்கேயும், கால் தெற்கேயும் வைத்தார்கள். மறுநாள் பார்க்கும் பொழுது தலை தெற்கேயும், கால் வடக்கிலும்

இருந்ததாம். உடனே கிழக்கு திசை காணும் வண்ணம் உள்ள சன்னதியில் சமாதி எழுப்பி மகா சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து தினசரி பூஜைகள் மற்றும் வருடத்தில் மார்கழி மாதம் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் மகா குருபூஜையும் நடைபெற்று வருகிறது.

சமாதிக்கோயில் அமைந்துள்ள இடம் :

காரைக்காலுக்குத் தெற்கே 5 கி.மீட்டரில் உள்ளது. திருமலைராயன்பட்டினம். அங்கு பிரதான சாலையிலிருந்து -- 45 - தேசிய நெடுஞ்சாலை)

அரசு மேல்நிலைப்பள்ளி வீதி பிரியும் சந்திப்பிலிருந்து ஹைஸ்கூல் சாலையில் சில அடிகள் சென்றால் கிழக்குப் பார்த்த கோபுரத்துடன் கூடிய சிவன் கோயில் உள்ளது. அதன் உள் முகப்பில் புண்ணாக்குச் சாமி மடலாயம் என்று எழுதப்பட்டிருக்கும். இவ்வாலய கருவறையில் விஸ்வநாதர் எனும் திருநாமத்துடன் அமையப் பெற்றுள்ள அருள்மிகு சிவலிங்க திருமேனியுடைய சன்னதி தான் புண்ணாக்குச் சாமி சமாதியாகும்.

47. சவுரிச் சித்தர் (எ) நவகண்ட யோகி

சுவாமிகள் திருமலைராயன் பட்டினத்தைச் சேர்ந்தவர். சுமார் 200 (இருநூறு) ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். இவையே சுவாமிகளைப் பற்றி நமக்குக் கிடைக்கும் பூர்வாஸ்ரம செய்திகள். சுவாமிகளின் சமாதி இருக்கும் இடத்தில்தான் சுவாமிகள் நடமாடிய காலத்தில் தங்கியிருப்பாராம். நீண்ட ஜடா முடியுடன் இருந்ததால் சடையைக் குறிக்கும் மற்றொரு சொல்லான சவுரி எனும் பெயரால் சுவாமிகள் சவுரிச் சித்தர் என்றும் அழைக்கப்பட்டார். அவர் தங்கியிருந்த இடமும் சவுரியார் மடம் என்றே அழைக்கப்பட்டது. சுவாமிகள் சித்துக்களில் வல்லவராக விளங்கியதுடன், உடல் உறுப்புகளைத் தனித்தனியே பிரித்துக்காட்டும் நவகண்ட யோகத்திலும் சிறந்து விளங்கினார். நாளடைவில் நவகண்டயோகி எனும் பெயரே நிலைத்துவிட்டது.

ஒரு நிகழ்வு சுவாமிகளின் ஆற்றலை வெளிப்படுத்தும் விதமாக பேசப்படுகிறது.

திருமலைராயன் பட்டினம் கடற்கரை வணிகம் நடைபெறும் இடமாகவும் குறுநில மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டும் இருந்தால் அங்குள்ள புதையலை எடுப்பதற்காக ஒரு மந்திரவாதிக் குழு திருமலைராயன் பட்டினம் வந்ததாம். ஒருவாறு இடத்தைத் தேர்வு செய்த மந்திரவாதிகள் நரபலி கொடுத்துதான் புதையலை எடுக்க முடியும் என்று முடிவு செய்தனர். அதற்கான திட்டம் தீட்டி ஒருநாள் இரவு சுவாமிகளை அமரச் செய்தனர். சூழ்நிலையைத் தமது மந்திர சக்தியால் ஆராய்ந்த குழுத்தலைவன் அலறினான். உடன் வந்திருந்த மந்திரவாதிகள் என்ன என்று கேட்க, ஒரு பெரிய பூதம் தஞ்சாவூர் பெரிய கோயிலில் ஒரு காலை வைத்து மறுகாலைத் தூக்கி வைத்ததில் அந்தக்கால் நாகூரில் வைத்துள்ளது. அடுத்த அடி நம்மீது வைக்கப் போகிறது. தப்பியோடுங்கள் என்று கூறி அனைவரும் உயிர் பிழைக்க ஓடி ஒளிந்தார்கள். மறுநாள் அந்த இடத்திற்கு வந்த மந்திரவாதிகள், முதல் நாள் தாம் அந்த இடத்தில் தோண்டிய குழி இல்லாமல் எப்பொழுதும் போல் இருந்ததையும் தாம் கொண்டு வந்திருந்த பூசைப் பொருட்கள் அங்கு இல்லாததையும் கண்டனர். சுவாமிகள் எப்பொழுதும் போல் தமது மடத்தில் இருப்பதையும் கண்டு சுவாமிகளின் அருளினை புரிந்து கொண்ட மந்திரவாதிகள் அவ்வூரை விட்டுச் சென்றனர்.

அப்பகுதி மக்கள் மட்டுமல்லாது சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் அப்பகுதியில் வாழ்நத அருளாளர்கள் மதிக்கும் வண்ணமும் சுவாமிகள் அருளாட்சி புரிந்து வந்தார்கள். சுவாமிகள் மறைந்த காலம் சரியாகத் தெரியவில்லை.

ஆயினும் சுவாமிகள் நடமாடிய பொழுதே ஜீவசாமதிக் குழியுள் இறங்கியவர் என்று இப்பகுதியில் உள்ள சில வயதான பக்தர்கள் கூறுகின்றனர். கிழக்குப் பார்த்த சன்னதியில் அமையப்பெற்றுள்ள சமாதி மீது சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இம் மடத்தில் ஆனி மாதம் அவிட்ட நட்சத்திர தினத்தில் குருபூஜை விழா நடைபெற்று வருகிறது.

சவுரிச் சித்தர் (எ) நவகண்ட யோகி சமாதிக்கோயில் அமைந்துள்ள இடம் :

காரைக்காலுக்குத் தெற்கே 6 கி.மீட்டரில் திருமலைராயன்பட்டினம் உள்ளது. அவ்வூர் எல்லையம்மன் கோயில் தெரு குளம் அருகில் சிறிய ஓட்டுக் கட்டிடத்தில் தான் சவுரியார் சித்தரின் சமாதி அமையப்பெற்றுள்ள மடம் உள்ளது.

48. ஸ்ரீ சித்தானந்தர் சுவாமிகள்

(அக்கரை வட்டம்)

சித்தானந்தர் சுவாமிகளின் பூர்வாசிரமம் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. பக்திமிக்க குடும்பத்தில் பிறந்ததால் சுவாமிகள் இளமை முதலே மிகுந்த இறை நாட்டத்துடன் விளங்கினார். காசியிலிருந்து தமிழகத்திற்கு வந்த ஒரு மகானின் தரிசனம் இவருக்குக் கிடைத்தது. அவர் மூலம் துறவறத்தின் மகிமையை உணர்ந்த சுவாமிகள் காசி சுவாமியிடமே உபதேசம் பெற்றுத் துறவறம் மேற்கொண்டார். பின்னர்த் தமிழகம் முழுவதும் தலயாத்திரை மேற்கொண்டு அற்புதங்கள் நிகழ்த்தும் ஆற்றலும் கைவரப் பெற்றார்.

இவ்வாறு யாத்திரை சென்ற சித்தானந்தர், பதினெட்டு சித்தருள் ஒருவராகிய அழுகணிச் சித்தர் கோயில் கொண்டு விளங்கும் நாகப்பட்டினம் அருள்மிகு திருநாகைக் காரோணம் திருக்கோயினுள் அன்னை நீலாயதாட்சி சந்நிதியில் தங்கியிருந்தார். அப்போது காரைக்கால் திருமலைராயன்பட்டினம் கொம்யூனைச் சேர்ந்த அக்கரை

வட்டம் சிற்றூரில் வாழ்ந்த வீரப்ப வன்னியர் நாகப்பட்டினம் சென்று நீலாயதாட்சி அம்மையைத் தரிசித்து வரும்பொழுது சித்தர் சித்தானந்தரைத் தரிசித்தார். அவர் உள்ளத்தில் மகிழ்ச்சி பெருக்கெடுத்தது. தாயைக் கண்ட சேயைப் போல விரைந்தேடி சித்தரின் திருவடியைத் தொழுதார். அதன் பின்னர் சித்தரைத் தம் இல்லத்திற்கு எழுந்தருள வேண்டினார். சுவாமிகளும் வீரப்ப வன்னியரின் வேண்டுகோளை ஏற்று, அவரோடு மாட்டு வண்டியில் பயணம் செய்து அக்கரை வட்டத்தில் உள்ள அவரது இல்லம் வந்தார்.

சுவாமிகள் தங்களுடைய கிராமத்திற்கு எழுந்தருளிய செய்தி ஊர் முழுவதும் காற்றோடு பரவியது. மக்கள் திரளாக வந்து சுவாமிகளைத் தரிசனம் செய்தனர். அப்பொழுது கூட்டத்தில் தீராத வயிற்றுவலியால் அவதிப்பட்ட ஒருவன், சுவாமிகளின் திருவடிகளில் வழுந்து நோய் தீர்க்க மன்றாடினார். சுவாமிகள் சிறிது திருநீற்றை எடுத்து அவனது வயிற்றில் தடவி, தியானத்தில் ஆழ்ந்த பின்னர் சிறிது தண்ணீரைப் பருகக் கொடுத்தார். அப்போதே நோய் இருந்த இடம் தெரியாமல் மறைந்தது.

சித்தரைத் தரிசிக்க வருவோர் எண்ணிக்கை நாளும் பெருகியது. சித்தரின் விருப்பத்தின்படி வீரப்ப வன்னியர் சுவாமிகளை தனது மாந்தோப்பில் தங்கியிருக்க ஏற்பாடு செய்தார். சுவாமிகள் அத்தோப்பில் உள்ள ஒரு மாமரத்தடியில் அமர்ந்து கொண்டு ஆசி வழங்கி வந்தார். சுவாமிகள் மாமரத்தின் அடியில் அமர்ந்திருக்கும் காலத்தில்

சில சமயம் மழை பொழியும். ஊரெங்கும் மழை பொழியும். ஆனால் சுவாமிகள் அமர்ந்திருக்கும் இடத்தில் மழை பொழிவதில்லை. இந்த அதிசயத்தை மக்கள் கண்டு வியந்தனர்.

சுவாமிகள் நிகழ்த்திய அற்புதங்கள் எல்லையில்லாதது. அனைவரின் அல்லல் போக்கும் அருமருந்தாய் விளங்கிய சுவாமிகள் ஆனந்த வருடம் ஆவணி மாதம் 14ம் நாள் 30-08-1914-ல் மூல நட்சத்திரத்தில் பரிபூரணமானார். அதன் பின்னர் ஊர் மக்கள் கிழக்கு பார்த்த சமாதிக் கோவில் அமைத்து அதில் லிங்கத்திருமேனி பிரதிஷ்டை செய்து வழிபாடுகள் நடத்தி வருகிறார்கள். வருடத்தில் ஆவணி மாதம் மூலம் நட்சத்திர தினத்தில் சுவாமிகளின் குருபூஜை விழா நடைபெற்று வருகிறது.

சமாதிக் கோயில் :

காரைக்காலிலிருந்து நாகூர் செல்லும் சாலையில் முட்டுச்சாவடி அருகிலுள்ள அக்கரை வட்டம் எனும் சிற்றூர் பிடாரி குளத்தின் சமீபம் சுவாமியின் சமாதிக் கோவில் உள்ளது.

49. கல்பட்டு அய்யா

திருவருட்பிரகாச வள்ளற்பெருமானின் சன்மார்க்கப் பெரு நெறியில் ஈடுபாடுகொண்டு அந்நெறியினைப் பின்பற்றிய அன்பர்கள பலருண்டு. அவருள் வள்ளற்பெருமானே தேடிச்சென்று ஆட்கொண்ட புண்ணிய உத்தமர் தான் இந்த கல்பட்டு ஐயா என்றழைக்கப்படும் கல்பட்டு இராமலிங்க சுவாமிகள்.

வள்ளற்பெருமான் பெயரும் இராமலிங்கம் என்பதனால் இவர் கல்பட்டு ஐயா என்றே அன்பர்களால் அழைக்கப் பெற்றார். கல்பட்டு ஐயாவின் பூர்வாசிரம் வரலாறுகள் தெரியவில்லை. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கல்பட்டு என்னும் ஊரில் பிறந்தவர். இவரின் இயற்பெயர் இராமலிங்கம். இளமை முதற்கொண்டே இறையருள் நாட்டம் மிக்கவராக விளங்கினார்கள்.

சுவாமிகள் உளுந்தூர்பேட்டை இரயில் நிலையத்தில் வடமேற்கே 16 கி.மீ. தொலையில் உள்ள திருநறுங்குன்றம்

எனும் ஊரிலுள்ள குன்று ஒன்றில் குடில் அமைத்துக்கொண்டு தவயோக நெறியில் திளைத்திருந்தார்கள். ஒருநாள் நிஷ்டை கூடியிருக்கும்பொழுது யோகக் காட்சி ஒன்று கண்டார். அதில் இன்ன மாதத்தில் இன்ன நாளில் இன்ன நாழிகையில் குருநாதர் தாமே வந்து தம்மை ஆட்கொள்வார் என்பதை அறிந்தார். இக்காட்சியை அன்பர்கள் பலருக்கும் தெரிவித்து அந்நாளை எதிர்நோக்கிக் காத்திருந்தனர்.

யோக நிஷ்டையில் சுவாமிகள் கண்ட அந்நாளும் வந்தது. அதேநாளில் கல்பட்டு ஐயாவின் குடிலில் வள்ளற்பெருமான் அடியெடுத்து வைத்தார். தாயைக் கண்ட சேய்போல் கல்பட்டு ஐயா பேரானந்தம் கொண்டு பெருமானின் திருவடி பணிந்தனர். வள்ளற்பெருமானும் தமது திருக்கரங்களால் தூக்கி ஆசி வழங்கி ஆட்கொண்டார்கள்.

வடலூரில் தருமசாலை தோற்றுவிப்பதற்கு முன்பு கல்பட்டு ஐயாவுக்கு வள்ளற் பெருமானிடமிருந்து உத்தரவு வந்தது. கருங்குழி வா என்று வள்ளற் பெருமானின் ஆணைப்படி வந்தவர் பெருமானைக் கண்ட அதன் பின்னர் தருமச்சாலைக்கு அருகில் உள்ள குடிலில் தவத்தில் ஈடுபட்டார்.

அதனால் ஏற்பட்ட உடல் வெப்பம் காரணமாக கல்பட்டு ஐயா உடலில் முழுவதும் காயங்கள் பரவியது. அதனால் அவர் இருப்பிடத்திற்கே உணவு எடுத்துச் செல்லுமாறு வள்ளலார் ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒருமுறை வள்ளலார் வெளியூர் சென்று திரும்பியதும் கல்பட்டாருக்கு உணவு கொண்டு கொடுத்தீர்களா? என்று வினவ மறந்து விட்டதாக


டக்கு ஐயாவுக்கு அன்னம் வழங்குதல்.

பதில் வந்தது. அதனை கேட்ட வருந்திய வள்ளலார் பெருமான் உடன் தாமே உணவு கொண்டு சென்றார். பெருமானைக் கண்டதும் அடியேனை ஆட்கொண்டருளியது போதாதா? அழைத்தால் நானே அங்கு வர மாட்டேனா? என ஆற்றாது புலம்பினார். அவரது மனவேதனையை கண்ட பெருமான அடியார்களுக்குச் சிவஞானிகள் தொண்டு செய்வது உண்டுங்காணும் என்று சொல்லித் தாமே உணவிட்டு உண்ணச் செய்தார்.

பெருமானை அண்டி அருள்நெறி பழகும் அன்பர்கள் பலருள் தலைநின்றவர் கல்பட்டு ஐயா, அவருக்கு யாருக்கும் கிடைக்காத பேறு கிட்டியது. பெருமான் அருட்பெருஞ்ஜோதி நிலை எய்திய பின் 28 ஆண்டு காலம் கல்பட்டு ஐயா தருமசாலையைத் திறம்பட நடத்தி வந்து 26-4-1902ஆம் ஆண்டு அருட்பெருஞ்சோதியின் திருவடிப் பேற்றினை அடைந்தார்கள். சுவாமியின் சமாதிக்கோயில் அமைந்துள்ள இடம்.

வடலூரில் வள்ளற்பெருமான் நிறுவிய தருமசாலைக்கு மிக அருகில் கல்பட்டு ஐயாவின் திருமேனி அடங்கிய சமாதிக்கோயில் வடக்குப் பார்த்த சன்னதியுடன் உள்ளது. கருவறையுள் சிறிய உயரத்தில் தென்வடலாக உள்ள நீண்ட சமாதி மேடையின் கீழ் செப்புத் தகடு கவசமிடப்பட்டு, அதன மேலே கல்பட்டு திருவுருவப் படம் வைக்கப்பட்டுள்ளது. வருடத்தில் சித்திரை மாதம் கேட்டை நட்சத்திர தினத்தில் இவருக்கு கருபூஜை விழா நடைபெற்று வருகிறது.

50. சித்தாண்டி சாமி

பழமையான சித்தர் பீடங்களுள் பண்ருட்டிக்கு அருகிலுள்ள சித்தாண்டி சாமி பீடமும் ஒன்று.

பண்ருட்டிக்கு மேற்கே இரண்டு கல் தொலைவில் புதுப்பேட்டை கோட்லம்பாக்கம் எனும் இடத்தில் சித்தவடமடம் எனும் அருள்மிகு சிவகாமசுந்தரி உடனுறை அருள்மிகு சிதம்பரஸ்வரர் ஆலய வளாகத்தில் சித்தாண்டி சாமி அடங்கி உள்ள பீடம் அருள் பாலிக்கிறது. இத்திருக்கோவிலில் உறையும் சிவபெருமானே சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருவடி தீட்சை கொடுத்து அருளியவர் என்பது தல வரலாறு. பழங்காலத்தில் இந்த இடத்தில் மிகப் பெரிய ஆலமரம் இருந்துள்ளது. அங்கு எழுந்தருளிய சித்தாண்டி சாமி அருளாட்சி நிகழ்த்தி வந்துள்ளார். அடியவர்களால் சித்தர் இருந்த ஆலமரத்தடியில் ஏற்படுத்தப்பட்ட மடம் சித்தவடமடம் என்று அழைக்ப்படலாயிற்று. (ஆலமரத்திற்கு வடம் என்ற பெயர் உண்டு). சித்தாண்டி சுவாமிக்கு சீடர்கள் பலர்

இருந்துள்ளார்கள். இங்குள்ள இறைவன் சுயம்பு சித்தர்கள் இருக்கும் இடத்தில் சுயம்பு தோன்றுவதும் சுயம்பு தோன்றிய இடங்களில் சித்தர்கள் இருப்பதும் இயல்பு சிதம்பரேஸ்வரர் கோவிலின் வெளிப்பிரகாரத்தில் நிருதி மூலையில் (தென்மேற்கு மூலை) சிவலிங்கம் பிரதிஷ்டை உள்ள பீடமே சித்தாண்டி சுவாமி சித்தர் எழுந்தருளியுள்ள இடம் ஆகும். அது சித்தர் பீடம் என்பதால் சிவலிங்கத் திருமேனிமீது காவியாடையும் உருத்திராக்க மாலையும் சாத்தப்படுகிறது. சுவாமிகளுக்கு மார்கழித் திருவாதிரையில் குருபூஜை முன்பு நடைபெற்றுள்ளது. சுவாமிகளின் காலம் சுந்தரர் வாழ்ந்த கி.பி. ஏழாம் நூற்றாண்டிற்கு முந்தைய காலமாக இருக்காலம் என்பது செவிவழிச் செய்தியாகும்.

சமாதிக்கோயில் அமைந்துள்ள இடம் :

கடலூர் மாவட்டம் பண்ருட்டிக்கு மேற்கு இரண்டு கி.மீ. தொலைவில் புதுப்பேட்டை கோட்லம்பாக்கம் எனும் பகுதி. அங்குள்ள சித்தவட மடம் சிவகாம சுந்தரி உடனுறை சிதம்பரேஸ்வரர் திருக்கோயிலின் வெளிப்பிரகாரத்தில் நிருதிமூலையில் சிறிய மாடம் போன்ற கோயிலுள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கத்திருமேனி பீடமே சித்தாண்டி சுவாமிகளின் திருமேனி அடங்கிய இடமாகும்.

51. வெங்கிடு சுப்பையா சுவாமிகள் பட்டுக்கோட்டை

ஸ்ரீ வெங்கிடு சுப்பையா சுவாமிகள் இப்பகுதியில் மிகவும் பிரபல்யமாக விளங்கிய மகான்.

தான் சமாதி அடையும் தினத்தை சில நாளுக்கு முந்தியே குறிப்பிட்ட சுவாமிகள், தான் சொன்ன நாள் அன்று காலையிலே முக்தியடைந்தர் பரிபூரணமானது கி.பி. 1873-ம் ஆண்டாகும். அதன் பின்னர் கிழக்குப் பார்த் சன்னதி கருவறையுள்ள சுவாமியின் சமாதிமேல் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபட்டு வருகிறார்கள்.

பட்டுக்கோட்டையில் தஞ்சாவூர் செல்லும் சாலையின் சந்திப்பிற்கு மேல்புறம் சாமியார் மடம் என்றழைக்கப்படும் பகுதியில் ஸ்ரீ வெங்கிடு சுப்பையா சுவாமியின் அழகிய சமாதிக்கோயில் சாமியார் மடம் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ளது.

52. வண்ணச்சரபர் தண்டபாணி

முருகப்பெருமானின் அருட்கடாட்சத்தைப் பரிபூரணமாகப் பெற்ற மகாஞானியே வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் திருநெல்வேலி சீமையில் வாழ்ந்து வந்த செந்தில்நாயகம் பிள்ளை, பேச்சிமுத்து அம்மை எனும் தம்பதிகளுக்கு புதல்வனாய் கி.பி. 1839-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 16-ம் நாள் சுவாமிகள் அவதரித்தார். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர் சங்கரலிங்கம் என்பதாகும்.

சுவாமிகள் உச்சி முதல் உள்ளங்கால் மட்டும் திருநீற்றைப் பூசியும், லங்கோடு கோவணம் மட்டுமே அணிந்தும், கையில் தண்டாயுதம் பூண்டும், சிரசில் சிகையை அவிழ்த்துத் தொங்கவிட்டும் விளங்கும் கோலத்தால் தண்டபாணி சுவாமிகள் என்றும், எதிர்த்த புலவர் வாயடங்கும் வண்ணம் பாடும் திறனால் வண்ணச்சரபம் என்றும் போற்றிப் பரவினர்.



ஏராளமான நூல்களை இயற்றியதோடு பல்லாயிரக்கணக்கான பாடல்களையும் பாடியருளினார். ஐந்திலக்கணமும் கற்றுணர்ந்தார். உறும்பயனாகிய புலமைக்குரிய இலக்கணமும் சேர்த்து அரிய அறுவகை இலக்கணம் என்ற நூலியற்றி உள்ளார்கள்.

மிகப்பெரும் தமிழறிஞரான யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் உள்ளிட்ட சான்றோர்களையும் வடலூர் வள்ளற்பெருமானையும் தரிசித்து பேசியுள்ளார். முருகன் உத்தரவுப்படி சுந்தரம்மை என்பாரை மயிலத்து முருகன் சன்னதியில் மணம் முடித்தனர்.

திருநீற்றுக் காப்பிட்டு ஆறுமுக உருத்திராக்கத்தையே மங்கல நாணாக அணிவித்தனர். திருவாமாத்தூரில் சுவாமிகள் இருந்தபோது தமது வயிற்றுவலி நீங்கப் பெற்ற விழுப்புரம் தாசில்தார் சண்முகப்பிள்ளை சுவாமிகள் மடம் அமைத்துக்கொள்ள இடத்தை இலவசமாக வழங்கினார். சுவாமிகளிடம் பேரன்பு கொண்ட வீரகேரளம் புதூர் ஜமீன் இருதாலய மருதப்பத் தேவரின் பொருளதவியால் மடம் உருவானது. முருகனின் ஆணைப்படி தவத்தை மேற்கொள்ளலானார். முற்பகலில் கவி பாடி ஏட்டில் எழுதுவார் பிற்பகலில் கடும்தவம் மேற்கொள்வார். இதனால் சுவாமிகளின் உடலில் கூடு அதிகரித்து நலங்குன்றியது. அன்பர்கள் சுவாமிகளிடம் தவத்தை நிறுத்த வேண்டினர். சுவாமிகள் வைராக்கியத்துடன் எழுதத் தொடங்கிய ஐயாயிரப் பிரபந்தத்தில் ஆயிரத்திற்கு மேற்பட்ட பாடல்களே

எழுதப்பட்டன. மந்திரஜெபமும் இரண்டரைக்கோடிகள் பக்கத்துக்கு எழுதப்பட்டது. சுவாமிகள் ஏட்டுக்கட்டையும் செபமாலையையும் வேலாயுதம் கடவுள் பீடத்தில் வைத்து, உன் சம்மதம் இதுவானால் என் செய்வது என வருந்தினார். இந்நிலையில் சுவாமிகள் கி.பி. 1898-ம் ஆண்டு விளம்பி வருடம் ஆனி மாதம் 23-ம் தேதி செவ்வாய்க்கிழமை பரவெளியில் கலந்து பரிபூரணமாயினர். சுவாமிகளின் மடத்தின் வடபுறம் சுவாமிகளின் முன்னமே குறிப்பிட்ட இடத்தில் குகையமைத்து திருநீற்றுக் காப்பீட்டு சமாது செய்யப்பட்டது. அதன் பின்னர் மடத்தினுள் கிழக்குப் பார்த்த சன்னதி கருவறையில் உள்ள சமாதி மீது அழகிய பெரிய ஸ்ரீ தண்டாயுதபாணி கற்சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வருகிறது.

விழுப்புரத்திலிருந்து செஞ்சி செல்லும் சாலையில் சுமார் 7 கிலோமீட்டர் தூரத்தில் திருவாமாத்தூர் கிராமத்திலுள்ள சிவன்கோயிலுக்கு வடமேற்கு திசையில் மாடவீதியில் சுவாமிகள் ஏற்படுத்திய கௌமார மடம் உள்ளது.

53. சொரூபானந்தர்

ஸ்ரீ சொரூபானந்த சுவாமிகள் சுமார் 300 ஆண்டுகளுக்கு முன் இப்பகுதியில் அருளாட்சி புரிந்தவர். சுவாமிகளின் வம்சாவழியினர் இப்பகுதியில் இப்பொழுதும் இருக்கின்றனர். வளவனூர் அருகில் 2 கி.மீ. தூரத்திலுள்ள செங்காடு என்பதே சுவாமிகளின் பூர்வீக கிராமமாகும். சுவாமிகளன இயற்பெயர் கிருஷ்ணப்பர் என்றும் அவருக்கு ஒரு தமக்கையர் இருந்தார் என்பதும் தெரிகிறது. சுவாமிகள் வைசிய குலத்தில் பிறந்திருந்தாலும் குடும்பம் மிகவும் ஏழ்மை நிலையிலிருந்ததால் அக்கால குலவழக்கத்திற்கு மாறாக மிக இளம் வயதிலேயே மாடு மேய்க்கும் தொழிலை மேற்கொண்டார்.

சிலகாலம் சென்றது. படிப்பறிவில்லா சிருஷ்ணப்பன் இறைவன் அருளால் வடமொழியில் பேசவும் வடமொழியில் சுலோகங்களுக்கு விளக்கங்களும் சொன்னார். அப்பகுதியிலிருந்த அந்தணர்களும், வடநூற்புலமை

கொண்ட சான்றோர்களும் கிருஷ்ணப்பனின் வடநூல் புலமைகண்டு வியந்தனர். மிகப்பல ஆண்டுகள் முறையாகப் பாடம் பயின்றோருக்கே வரக்கூடிய பாண்டித்தியம் இளம் சிறுவனுக்கு கல்லாமலே வந்ததை அறிந்து வியந்தனர். கிருஷ்ணப்பன் ஒரு தெய்வீக அருள்பெற்ற சிறுவன் என்பதை உணர்ந்தனர். உரிய பருவம் வந்ததும் பெற்றோர்களின் மனம் கோணாமல் இல்லற வாழ்வை ஏற்றார். இல்லறப் பயனாய் 2 மகன்கள் பிறந்தார். சுவாமிகள் தம்மிடம் பாடம் கேட்பதற்கும், ஆசிபெறுவதற்கும் வரும் அன்பர்கள் காணிக்கையாகக் கொண்டுவரும் தானியங்களைத் தமது தமக்கையாரிடம் கொடுத்து அனைவருக்கும் அன்னம் பாலிக்கச் செய்தார். ஏதும் இல்லாத நேரத்தில் அன்பர்கள் வந்துவிட்டால் தமக்கையார் யாது செய்கேன்? எனமருள்வார். அப்போது சுவாமிகள் உள்ளே போய்ப்பார் எல்லாம் இருக்கு என்பார். தமக்கையார் உள்ளே சென்று பார்த்தால் உணவுப் பொருட்கள் எல்லாம் தேவைக்கேற்ப இருக்கும். அன்னதானம் குறைவின்றி நடக்கும்.

சுவாமிகள் ஆன்மீகப் பாடங்களை விளக்குவதுடன் அன்னதானம் செய்யும் பணியையும் தமது கடமையாகக் கொண்டிருந்தார். அப்பகுதியில் மடங்களை அமைத்து சமயப்பணியுடன் சமுதாயப் பணியிலும் ஈடுபட்டு வந்த மடாதிபதிகள யாவரும் சுவாமிகளிடம் மிக்க ஈடுபாடு கொண்டு சுவாமிகளுக்கு சொரூபானந்தர் என்னும் திருப்பெயர் சூட்டி அழைத்தனர். திருமடம் அமைத்துப் பெரும் அருளாளராக விளங்கிய சுவாமிகள் கி.பி. 1673 ருத்ரோகாரி வருடம் தை

மாதம் உத்திரட்டாதி நட்சத்திரத்தில் பரிபூரணமடைந்தார். விழுப்புரத்திற்குக் கிழக்கே உள்ள வளவனூர் கிராமத்தில் சொரூபானந்த சுவாமி மடம் ஐயப்பன் ஆலயம் என்றுப் பெயர்ப்பலகையில் உள்ளது. அம்மடத்தினுள் கிழக்குப் பார்த்த சிறிய கருவறையே ஸ்ரீ சொரூபானந்தர்.

ஜீவசமாதிபீடம், பீடத்தில் கருங்கல்லில் வடிக்கப்பட்ட இரண்டு திருவடிகளே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன. இங்கு வருடத்தில் தை மாதம் உத்திரட்டாதி நட்சத்திர தினத்தில் குருபூஜை விழா மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

54. சற்குரு நித்தியானந்த சுவாமிகள்

ஸ்ரீ சற்குரு நித்தியானந்த சுவாமிகளின் பூர்வாஸ்ரம வரலாறுகள் தெரியவில்லை. நித்தியானந்த சுவாமிகள் இறைவன் திருமுகப் பெருமானின் உபாசகராக இருந்து தன்னை நாடி வரும் அன்பர்களின் பிணிகளை அகற்றி நல்லருள் நல்கி வந்துள்ளார்கள். பண்ருட்டி திருவதிகை அருகிலுள்ள கோழிப்பாக்கம் மாரியம்மன் கோவில் சன்னதித் தெருவில் கிழக்குப் பார்த்த சன்னதி கருவறையுள் சுவாமியின் சமாது மீது சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. கடந்த 5-4-2007 அன்று பங்குனி மாதம் விசாக நட்சத்திர தினத்தன்று இங்கு சுவாமிகளுக்கு 184-ம் சமாதியில் அமர்ந்தது. கி.பி. 1823 ஆக இருக்கலாம் என்று யூகிக்க முடிகிறது.

யாழ்ப்பாணத்தில் அருள் நிலையிலிருந்த சுப்ரமணயசாமி எனும் அன்பருக்கு சூட்சும நிலையில் சற்குரு நித்தியானந்த சுவாமிகள் அருள் பாலித்தார். அதனை

தொடர்ந்து அவர்தம் குருநாதரை தேடித் தமிழகம் வந்து சுவாமிகளைப் பல இடங்களில் போது நித்தயானந்த சுவாமிகள் சில குறிப்புகளை அளித்தார். அதன்படி சுப்ரமணிய சுவாமிகள் 1928-ஆம் ஆண்டு (பண்ருட்டி) திருவதிகைத் தலத்திற்கு ஈசானிய திசையில் தென்பெண்ணை நதிக்கரையில் இருந்த கோழிப்பாக்கம் வந்தார்கள். அங்கு நித்தியானந்த சுவாமிகள் அருளால் சுப்ரமணியசாமி தம்குருவின் சமாதியை கண்டுபிடித்தார்.

குருநாதர் :

நித்தியானந்த சுவாமிகள் சமாதி உள்ள இடம் தெரிந்தவுடன் அதை மெய் அன்பர்களின் உதவியுடன் சுப்ரமணியசாமிகள் அதிஷ்டானமாக கட்டி அதற்கு 1932-ல் கும்பாபிஷேகம் நடத்தி மகிழ்ந்தார். தம் குரு குருவுக்கு ஆற்ற வேண்டிய கடமைகளைச் செய்த சுப்ரமணியசாமி அதன் பின்னர் புதுச்சேரியிலுள்ள கம்பளிச்சாமி மடத்தில் திருத்தொண்டாற்றி அங்கேயே பரிபூரணமானார். அவரது சமாதி கம்பளிசாமி திருமட வளாகத்துக்குள் உள்ளது. கோழிப்பாக்கத்தில் ஸ்ரீ சற்குரு நித்தியானந்த சுவாமிகள் கருவறையில் லிங்கத்திருமேனியாய் வீற்றிருந்து அருள்பாலித்து வருகிறார்.

சமாதிக்கோயில் அமைந்துள்ள இடம் :

பண்ருட்டியிலிருந்து கடலூர் செல்லும் சாலையில் 9 கிலோமீட்டர் சென்றால் கோழிப்பாக்கம் மாரியம்மன்கோவில் சன்னதித் தெருவில் ஈசானிய பக்கத்தில் ஸ்ரீ சற்குரு நித்தியானந்த சுவாமிகளின் ஜீவசமாதி ஆலயம் உள்ளது.

55. ஞான கோரக்க சித்தர் வடக்கு (நாகை)

சித்த புருஷர்களின் பிறப்பிலேயே விசேஷமான தன்மை கொண்டவர் கோரக்க சித்தர். விபூதி எனில் சாம்பல் என்று ஒருபொருளும், ஞானம் என்று மறுபொருளும் உண்டு. அப்படிப்பட்ட விபூதியிலிருந்து பிறந்தவர் கோரக்கச் சித்தர் இவர். ஆணும் பெண்ணும் கூடி அந்தக்க கருவால் வளரும் உயிர்கள் கருமஞ்சார்ந்தவை..... ஆனால் அவ்வாறு இல்லாமல், விதிவிலக்காக பல மனித உயிர்களும் தோன்றியுள்ளன. அப்படி விசேஷமாகப் பிறந்தவர்களுக்கு ஒரு பெரிய கடமை இந்த உலகத்தில் காத்திருந்தது. இந்தப்பட்டியலில் கோரக்கரையும் இவரது குருவான மச்சமுனியையும் சேர்க்கலாம். மச்சமுனியும் சரி, கோரக்கரும் சரி சிவாம்சத்துடனும் முழுமையான சிவனருளோடும் பிறந்தவர்கள்! அதிலும் மச்சமுனியின் பிறப்பு மிக விசேஷமானது. தடாகம் ஒன்றின் கரையில் சிவபெருமான் உமாதேவியுடன் பிறப்பு மற்றும் இறப்பு

பற்றியும் உயிர்களின் தோற்றம் மாற்றம் பற்றியும் பலவாறாக பேசியபடி இருக்க, அதைக் கேட்டபடி இருந்த உமா தேவிக்குக் கண்ணயர்ச்சி ஏற்பட்டு உறக்கம் வந்து விட்டது. ஆனால், தடாகத்தில் நீந்திக் கொண்டிருந்த தாய் மீன் ஒன்று அதைக் கேட்டபடி இருந்தது. அந்த மீனின் வயிற்றிள் கருவாக இருந்த குஞ்சு மீன் பரமன் பார்வதிதேவிக்கு கூறிய உபதேச மொழிகளை முழுவதுமாகக் கேட்டதின் பயனாக அந்தக் குஞ்சு மீன், ஒரு பாலகனாய் மாறி உமாதேவன் முன்னாள் காலை உதைத்துக் கொண்டு அழுதது. தாய் மீனும் மானிட வடிவம் கொண்டு ஓடிவந்து அணைத்துக் கொண்டு, அப்படியே உலக நாயகன், நாயகி காலில் விழுந்தாள். மச்சமாய் இருந்து, இறை உபதேசம் கேட்டு பிறந்ததால் மச்சேந்திரநாதன் என்ற திருப்பெயரும் ஏற்பட்டது. கூடவே, அந்த ஈஸ்வரனின் பரிபூர்ண கிருபா கடாஷமும் மச்சேந்திரனுக்குக் கிட்டியது! இப்படி பிறக்கும் போதே சித்த நிலை கொண்டு பிறந்தவர் தான் மச்சேந்திர என்ற மச்சமுனி. இவரால் கோரப் பெற்றவர்தான், கோரக்கர்.

கோரக்கர் பிறப்பு

மச்சமுனி ஒருநாள் யாசகம் கேட்டு வீடு வீடாக வந்தபடி இருந்தார். அப்படி வரும்போது ஒரு வீட்டில் அன்னம் தந்த பெண் ஒருவள் எனக்கு புத்திர பாக்கியமில்லை என்பதை சொல்லி தனக்கு மழலை வரம் அருளுமாறு சித்தரின் தாழ் பணிந்தாள். உடனேயே புன்னகையுடன் சிவநாமத்தை ஜெபித்து, ஒரு சிட்டிகை விபூதியை அவளுக்குத் தந்தார்


_ஓவி சுகுமாரன்_
அருள்மிகு கோரக்கச் சித்தர்
வடக்குப்பொய்கை நல்லூர், நாகப்பட்டினம்.611105

மச்சமுனி. "இதை நீ சிவநாமம் கூறி உண்டால் பிள்ளையேறு பெற்றிடுவாய்..... ஒருநாள், அந்த பாலகனைக் காண நிச்சயம் நான் திரும்பவும் வருவேன்" என்று கூறியபடியே பிச்சைப் பொருளுடன் திரும்பி நடந்தார்.

இதனை பார்த்துக் கொண்டேயிருந்த பக்கத்து வீட்டுக்காரி ஒருவன் கையில் என்ன என்று கேட்டாள். "விபூதி" .... கோசாலை நோக்கி நடந்தபடியே பதில் சொன்னாள் அவள். அதைக் கேட்ட அந்தப் பெண். "இது விபூதியல்ல. அவனும் ஒரு மாயாவி. இதை நீ உண்டால் மயங்கக் கூடும். திரும்ப வந்து உன்னை அவன் அபகரிக்க கூடும்இ எனவே, இதை வீசி எறி என அவள் கூற அதனால் அந்த பெண்ணும் உடனே கோசாலையாகிய மாட்டுத் தொழுவத்தில் எருமுட்டைகள் கொண்டு மூடப்பட்ட அடுப்பில் அந்த விபூதியைப் போட்டுவிட்டாள். அவள் வீதி அந்த சக்தி பெற்ற விபூதியின் வழியை மாற்றி விட்டது.

சில காலம் சென்றது. மச்சமுனி, முன் சொன்னது போல திரும்பி வந்தார். அந்தப் பெண்ணிடம் விபூதியால் பாலகன் பிறந்தானா, எங்கே அவன்? என்று கேட்க, அவனிடம் தடுமாற்றம். திக்கினாள், திணறினாள். "உங்களை மாயாவியாக நான் எண்ணி விட்டதால், கோவகத்து அடுப்பில் அந்த விபூதியை வீசி விட்டேன். அதுவும் சாம்பலோடு சாம்பலாகி விட்டது". உடனே அந்த அடுப்பில் அந்த அடுப்பின் முன் சென்று நின்றவர் மனம் வருந்தினார். "தாங்கள் கடவுள் என்றால், அந்த அடுப்புச் சாம்பலில்

இருந்து கூட ஒரு உயிரை உருவாக்க இயலுமே" என்று சந்தேகத்தையே முன் நிறுத்தினாள். மச்சமுனி அதைக்கேட்டு சினமுற்றார். சித்தன் வாக்கு பொய்க்கக்கூடாது. எந்த விபூதியால் ஒரு பிள்ளை பிறக்கும் என்றேனோ அந்த விபூதியால் நிச்சயம் பிள்ளை பிறக்கும். உன் கருப்பைக்குள் வளரத்தான் உன் கருமம் இடம் தரவில்லை. ஆனால், கோசாலையாகிய இந்த கோவகம் அதற்கு இடமளித்துவிட்டது. நான் சிவசித்தன் என்பது சத்தியமானால், இந்த கோவகம் ஒரு கோவகனைத்தரட்டும். நான் கோருவதால் வரப்போகும் பிள்ளை, கோவடிகன் மட்டுமல்ல, கோரகனும் கூட, கோவாகிய பசுவுக்கு உள்ள இரக்கம் இவனிடம் இருக்கப் போவது சத்யம். அதனால், இவன் கோ இரக்கனும்கூட, முக்கண்ணன் அருளால் நான் மச்சத்தில் இருந்து உதித்து மச்சமுனியானது போல, என்னுள்ளில் இருக்கும் அந்த முக்கண்ணனே மூன்று நாமங்களை இவனுக்குப் பிறக்கும் முன்பே அளித்துவிட்டான். அந்த நாமங்களைக் கூறி அழைக்கிறேன். ....

கோவகனே.....கோவகனே.....கோரகனே....கோ இரக்கனே.....சிவமுனி அழைக்கிறேன் வா....." என்று உணர்ச்சி மிகுதியோடு அழைத்திட, கோரக்கரும் அந்த சாம்பலுக்குள் இருந்து ஒரு பாலகனாய் வெளியிட்டார்.

பழனியம்பதியின் சித்த விலாச கணக்குப்படி, கோரக்கன் இப்படி எழுந்து வந்த நாள், ஒரு கார்த்திகை மாதத்து அவிட்ட நட்சத்திர நாளாகும். இச்சம்பவம் நிகழ்ந்த ஊர், வடபொய்கை

ஆசை. நான் முன்பே வடை பொரிக்கும்போது எண்ணெய் தெரித்து கண்ணில்பட்டு கண் போகத் தெரிந்தது. நல்லவேளை தப்பித்தேன். இனி ஒரு முறை வடை பொரிக்கும்போது, எனக்கு ண போனால், நீ என்ன உன் கண்களை பிடுங்கியா தருவாய்?..... எகத்தாளமாய் கேட்டாள். அதற்கெல்லாம் தந்தால் போச்சு... என்ற கோரக்கர், அடுத்த நொடியே நெய்வடைக்காக தன் மெய்க்கண்கள் இரண்டையுமே பறித்து, தந்துவிட, அந்தப் பெண்மணி அரண்டுபோனாள். அடுத்த நொடி, கோரக்கரின் குருபக்திக்காகவே சுடச்சுட நெய்வடை பொரித்துத் தந்தாள். கோரக்கரும் முகத்தை மூடியபட வந்து வடையைத்தர மச்சமுனியும் உண்டுவிட்டு, கோரக்கர் முகத்தை மறைத்திருப்பதன் காரணம் அறியமுயல பகீரென்றது. கோரக்கர்..... எனக்காக... அற்பவடைக்காக உன் கண்களையா தந்தாய்?... ஆம் ஸ்வாமி. வேறுவழி அப்போது தெரியவில்லை. என்ற, கோரக்கரை ஆரத்தழுவி ஆலிங்கனம் புரிந்த மச்சமுனி தன் தவ ஆற்றலால் மீண்டும் கண்களை தருவித்தார். கோரக்குரும் பார்வை பெற்றார்.

மச்சமுனி மூலமாகவே சிவஞானபோதம் அறிந்தார். காயகற்ப முறைகளை கற்றார். தன் உடம்பை உருக்குபோல ஆக்கிக் கொண்டார். இவரை ஒரு வாள் கொண்டு வெட்ட முனைந்தால் வாளே முனை மழுங்கும். இதனை உணர்த்தும் ஒரு சம்பவம்.

ஒருமுறை திருக்கையிலாயத்திற்கு சென்றபோது அல்லமாதேவர் என்பவரை சந்தித்தார். கோரக்கர் அல்லமா

தேவரிடம் நீங்கள் யார் என்று கேட்டார். அதற்கு அவர் இறந்து போகும் உடலில் பற்றுக்கொண்டுள்ளவரை மதித்து சொல்ல தக்கது ஒன்றுமில்லை என்றார். கோரக்கர் குருவின் அருளால் காய சித்தி பெற்று எக்காலத்திலும் அழியாத உடலை பெற்றவன் நான் என்றார். ஆனால், அல்லமரோ காய சித்தி பெற்றுள்ளதால் வாழும் நாள் அதிகமாகுமே அன்றி அது நிலைத்திருக்காது. ஆகவே, அழியும் இந்த உடலை அழியா உடலாகக் கூறுவது வீண் என்றார். வீண் தர்க்கம் வேண்டாம் இதோ நிரூபித்து காட்டுகிறேன் என்று கூறி அல்லம தேவரிடம் கூர்மையான வாளினைக் கொடுத்து உன் தோள்வலிமையால் என்னை வெட்டு என்றார். அல்லமர் கோரக்கரை வெட்டினார். உடலின்மீது பட்டவாள் கிண் என்ற ஒலியுடன் தெரித்து அகன்றதே அன்றி அவர் உடம்பில் எந்தவித ஊறுபாடும் உண்டாக்கவில்லை. செருக்குடன் அல்லமரை கோரக்கர் நோக்கினார். அல்லமர் கோரக்கரை நோக்கி சரி, உன் திறமையை நிருபித்து விட்டாய்.

இதோ இவ்வாளினால் உன் வலிமையுடன் நீ என்னை வெட்டு என்று கூறினார். கோரக்கரும் அல்லமரை வாள் கொண்டு வெட்டினார். அவ்வாள் அல்லமரின் உடலில் புகுந்து வெளிப்பட்டது. மறுபடியும் வெட்டினார். காற்றை வெட்டுவது போன்று உடலினுள் புகுந்து வெளிவந்தது. தன்னைவிட மிக்க சக்தி பெற்ற அல்லமரை வணங்கி தன் பிழையை பொறுக்க வேண்டினார் கோரக்கர். இனியாகிலும் உடம்பிலுள்ள

பற்றினை நீக்கி உனது உண்மை நிலையை அறிவாயாக என்று கூறினார் அல்லமர். இதனைக் கேட்ட கோரக்கர் தன் உடலையே ஆன்மாவின் வடிவம் என்று எண்ணியிருந்ததை விடுத்து உண்மை நிலையை உணர்ந்தார்.

அருள்குரு காகபுஜண்ட சித்தரின் எண்ணற்ற சீடர்களுள் ஒருவர் கோரக்கர். பதினெண் சித்தர்களில் மிகப்பெருமை பெற்றவர் இவர். பல ஆயிரம் ஆண்டுகள் ஆயுள் உயர்ந்த மருந்துகளைத் தயாரித்து வைத்தியம், வாதம், யோகம் மற்றும் ஞானம் போன்றவழிகளை உலகிற்குப் பூரணமாக உணர்த்தியவர் கோரக்கரே! எனவே, தான் கஞ்சாவிற்கு கோரக்கர் மூலி என்கிற தனிப்பெயரொன்றுண்டு. பல சித்தர்கள் தேவரகசியங்களை வெளிப்படையாக ஓலைச்சுவடிகளில் எழுதிவைத்ததை அறிநத பதினெண் சித்தர்களின் தலைவராக விளங்கக்கூடிய அகத்தியர், அனைத்து சித்தர்களையும் ஒன்றுகூடி அவர்கள் எழுதிய அனைத்து ஓலைச் சுவடிகளையும் கைப்பற்றி ஒரு பேழைக்குள் வைத்துப்பூட்டி ஒரு பெரும் பாறையில் வைத்து மூடிவிடும்படி கோரக்கருக்கு கட்டளையிட்டார். அவ்வாறே, அகத்தியரின் வார்த்தையை மதித்த கோரக்கர் பெரும் பாறையொன்றினுள் அனைத்து ஓலைச் சுவடிகளையும் அடைத்து மறைத்து வைத்துவிட்டு அதன் சாவியை மட்டும் (திறவு கோல்) தானே வைத்துக் கொண்டார். எனவே, தான் தற்காலத்தில் சொற்ப அளவில் சித்தர் நூல்கள் உலாவிக் கொண்டு வருகின்றனர். பிரம்ம சுவடிகளைக் காண விரும்பும்

சித்தர்களுக்கு வசதியாக அவர்களுக்கு மட்டும் சூட்சுமத்திறவுகோல் மந்திரத்தை கோரக்கர் உபதேசித்தார் என்பது ஐதீகம்.

நாகப்பட்டினம் அருகே வடக்கு பொய்கை நல்லூரில் கோரக்க சித்தர் ஆலயம் உள்ளது. நாள்தோறும் 3 காலபூசைகள். இந்த ஆலயத்தில் நடந்து வருகின்றன. நாள்தோறும் ஒவ்வொரு சித்தராக ஆண்டு முழுவதும் தொடர்ந்து சித்தர் பலர் இவ்விடம் வந்து கோரக்கரை வழிபட்டுச் செல்வதாக மரபு உள்ளது.

கோரக்கர் அருகே நல்லூரில் சமாதி கூடியகாலம் கி.பி. 1233ம் ஆண்டாகும். இவர் பட்டினத்தார் காலத்திற்குப் பின்னும் வாழ்ந்திருந்தார் எனக்கூறப்படுகிறது.

கோரக்கரின் ஜீவசமாதி இடங்கள் :


1. பொதிய மலை
2. ஆனை மலை
3. கோரக் நாத்திடல் (பாண்டிய நாடு)
4. வடக்கு பொய்கை நல்லூர்
5. பரூரப்பட்டி (தென் ஆற்காடு)
6. கோரக்கர் குண்டா (சதுரகிரி)
7. பத்மாகரன் மலை (கர்நாடகம்)
8. கோரக்பூர் (வட நாடு)

இவற்றில் வடக்கு பொய்கை நல்லூர் மற்றும் படூர்பட்டி ஜீவசமாதிகள் பற்றி கோரக்கரே தமது நூலில்

56. பாடகச்சேரி சுவாமிகள் (எ) கால பைரவச் சித்தர்

பைரவ சித்தர் என்று பலராலும் அறியப்பட்ட மகான் பாடகச்சேரி ஸ்ரீ ராமலிங்க சுவாமிகள். தெலுங்கு மொழி பேசும் ஆந்திர மாநிலத்தை சேர்ந்த வீரசைவ ஜங்கம வகுப்பை சார்ந்த கந்தசாமி. அர்த்தனாரி தம்பதியரின் மகனாக கோவை மஞ்சம்பாளையம் கிராமத்தில் 1876ஆம் வருடம் மே மாதம் ஒன்பதாம் தேதி அவதரித்தார். சில காலத்திற்கு பின் பெற்றோர் மறைந்ததால் கர்நாடக மாநிலம் பெல்லாரி அருகே செள்ளக்குருக்கி எனும் கிராமத்தில் எழுந்தருளியிருந்த மகான் ஸ்ரீ எரிதாதா சுவாமிகளிடம் (குருவிடம்) சரணடைந்தார்.

பிறகு தனது குருவான மகான் எரிதாதா சுவாமிகளின் ஆணைக்கேற்ப இளம் பருவத்தில் தென்னாடு நோக்கிப் புறப்பட்டு வந்த இவர், கும்பகோணத்தை அடுத்த கிராமங்களில் உடலில் ஆடையேதுமின்றி திகம்பரராக அலைந்து திரிந்து வந்துள்ளார்.



வலங்கைமான் அருகில் பட்டம் கிராமத்திற்கு சென்றவரை மாபெரும் சித்தர் என்பதை உணர்ந்து கொண்ட பாடகச்சேரியைச் சேர்ந்த பெரியோர்கள் தங்கள் கிராமத்தில் ஒரு கொட்டகை அமைத்து அதில் தங்கியிருக்கும் படிப் பணிவுடன் விண்ணப்பிக்க, இவர் பட்டம் குக்கிராமத்திலிருந்து பாடகச்சேரி வந்து தங்கினார். இந்தக் காலகட்டத்தில் இவர் தியானம் செய்து திருவருளால் செந்தூரம் மற்றும் பல மூலிகை மருந்துகள் தயாரித்து நோயாளிகளுக்குக் கொடுத்து குணமாக்கி வந்துள்ளார். குறிப்பாக செட்டி நாட்டின் பெரும் செல்வந்தர் ஆதப்பச் செட்டியாரின் தொழுநோய் முற்றிலும் நீங்கி அவரது கைவிரல்கள் மீண்டும் வளரத் தொடங்கின. இது ஓர் அற்புதச் செயலாகும். இப்பெரும் தனவந்தர் சுவாமிகளின் தீவிர பக்தராகி 1920ம் ஆண்டு வாக்கில் குடந்தை நாகேஸ்வரன் கோயில் நடராஜர் சன்னதி மண்டபத்தை அப்போதைய மதிப்பில் பல லட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்துக் கட்டிக்கொடுத்தார். புதுப் பொலிவுடன், சிற்பக்கலை நயமாகத் திகழும் நடராஜர் சபையை இப்போதும் நாம் கண்டு மகிழலாம்.

சுவாமிகள் ஆறு அடி உயர பருத்த, கரிய திருமேனி உடையவர். அகன்ற நெற்றி, கூரிய கண்கள். தூய வெள்ளாடை அணிவார். விபூதி, சந்தனம், குங்குமம் தரித்திருப்பார். பல ஊர்களுக்குச் சென்று வருவார். ஒரே நேரத்தில் இரு ஊர்களில் தென்பட்டிருக்கிறார். தனக்காக உணவு கேட்கமாட்டார். அவர் வரும்போது வீடுகளில்

பக்தர்கள், உணவுடன் காத்திருப்பார்கள். ஒரு நாளைக்கு மூன்று உருண்டை கலவையான சாதம் மட்டும் கையால் வாங்கி சாப்பிடுவார். வடலூர் வள்ளலாரிடம் தனது 12-வது வயதில் ஞான உபதேசம் பெற்றுள்ளார்.

இவர் ரசவாதம் அறிந்தவர். நவகண்ட யோகம் அறிந்தவர். ஆழ்ந்த தியான நிலையில் மூழ்கியிருக்கும் போது ஞானச்சித்தர்களின் கை, கால் போன்ற உடல் உறுப்புகள் தனித்தனி பாகங்களாக பிரிந்து காணப்படும். அதை நவகண்ட யோகம் எனக் குறிப்பிடுவார்கள். இது அஷ்டமா சித்திகளுக்கு மேலே சொல்லப்படுகின்ற ஒரு சித்தியாகும். நவரத்தினமாகவும் மாற்றிக் காட்டியுள்ளார்.

பெங்களூரைச் சேர்ந்த ஏ.ஜி. சாமண்ணா பெரும் தனவந்தர். பட்டுஜவுளி மொத்த வணிகம் செய்து வந்தார். மருத்துவர்களால் குணப்படுத்த இயலாத கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு மரணத்தின் பிடியில் நாட்களைக் கடத்தி வந்தார். பெரும் மருத்துவர்கள் இனி உயிர் பிழைக்க இயலாது என கைவிட்டு விட்டார்கள். ஒருநாள் பாடகச்சேரி சுவாமிகள் திடீர் என்று சாமண்ணா வீட்டுக்கு வருகை தந்தார். மருந்து, மந்திரம் எதுவும் இல்லை, சாமண்ணாவின் உடலைத் தடவினார். பிறகு கொஞ்சம் கொஞ்சமாக நோய் குறையத் தொடங்கியது. அவர் முற்றிலும் குணமடைந்து ஆரோக்கியமாக 20 ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். தனது வணிகத்தை விட்டுவிட்டு பாடகச்சேரி சுவாமிகளுடன் ஐக்கியமாகி 1949-ம் ஆண்டு சுவாமிகள் சித்தியடையும்

அவருடன் தங்கி இருந்த தீவிர பக்தரான ஏ.ஜி. சாமண்ணா அவர்கள் 1958-ல் சித்தியடைந்தார்.

கும்பகோணம் நாகேஸ்வரர் ஆலய திருப்பணிக்காக சுவாமிகள் கழுத்தில் உண்டியலைக் கட்டிக்கொண்டு கும்பகோணம் வீதிகளில் சுற்றி வந்தார். தொழிலாளர்களும், வணிகர்களும் நிதி உதவி செய்யத் திருப்பணிகள் முடிக்கப்பட்டு காண்போர் வியக்கும் வண்ணம் 1929ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கும்பகோணம் ரயில்வே மேம்பாலத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீட்டர் தொலைவில் காரைக்கால் சாலையில், விஸ்தீரணமானதோர் இடத்தை வாங்கி, ஓர் முகப்பு கட்டிடம் கட்டி அதில் தன் ஆசான்கள் எரிதாதா சுவாமிகள் மற்றும் வள்ளலார் பெருமான் ஆகியோர் திருவுருவச் சிலைகளை நிறுவி வழிபாடு செய்து வந்துள்ளார் பாடகச்சேரி சுவாமிகள்.

இம்மடத்தின் பின்புறம் வடலூரில் உள்ளதைப்போல் பெரிய சத்திய சபைக்கட்டிடம், பாதாள அறையுடன் கருங்கற்களால் கட்டப்பட்டிருக்கிறது.

இந்த பாதாள அறையில் உள்ள பாதரச லிங்கத்தினை பிரதி வியாழக்கிழமை தோறும் மற்றும் பௌர்ணமி அன்றும் மாலை 6 மணியிலிருந்து 8 மணி வரை பக்தர்கள் தரிசனம் செய்யலாம்.

சுவாமிகள் இவ்விடத்தில் 1933 முதல் 1949 வரை 16 ஆண்டுகள் தங்கியிருந்து அன்னதானங்கள், பைரவ

பூஜைகள், தியானங்களை மேற்கொண்டு வந்தார். பஞ்சம் மக்களை வாட்டிய காலத்தில் கீழ் மண்டபம் அமைத்து அச்சாலை வழியாக கடந்து செல்லும் ஏழைகளுக்கு தினசரி கூழ் வழங்கினார். அதனால் இம்மடத்தினை கூழ்ச்சாலை என்று அழைக்கப்பட்டது. சுவாமிகள் நியமித்த டிரஸ்ட்டிகளின் வம்சாவளியினர் இப்போது இம்மடத்தை நிர்வகித்து வருகின்றனர்.

தஞ்சை புன்னைநல்லூர் மாரியம்மன் கோயில், தஞ்சை கீழவாசல் வெள்ளை விநாயகர் கோயில் இங்கெல்லாம் திருப்பணிகள் செய்யப்பட்டு சுவாமிகளால் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டுள்ளது. தஞ்சை தெற்கு வீதியில் உள்ள பிரசன்னா பெருமாள் கோயில் நாலுகால் மண்டபத்தில் அருள்பாலித்து வரும் சக்தி வாய்ந்த ஆஞ்சநேய சுவாமியை பிரதிஷ்டை செய்துள்ளார். அனைத்து இடங்களிலும் சுவாமிகள் திருஉருவச் சிலைகள் உள்ளன.

இவ்வாறு அல்லும், பகலும் ஓயாது இறைபணியில் ஈடுபட்ட வந்த சுவாமிகளின் உடல் நிலை 1948ம் ஆண்டு மோசமடைந்திருந்தது. சுவாமிகள் தன் பக்தர்களுக்கு எழுதிய கடிதங்களிலிருந்து அரிய முடிகிறது. பிறகு சென்னை சென்று திருவொற்றியூரில் 1949ம் ஆண்டு ஆடிப்பூரம் வெள்ளிக்கிழமையில் 29-07-1949 ஞான சமாதி அடைந்தார். அங்கு அவருக்கு சமாதிக்கோயில் உள்ளது. பல இடங்களில் வடலூர் வள்ளலார் ஸ்ரீ ராமலிங்க

சுவாமிகளுக்கும் பாடகச்சேரி சுவாமிகள் உயில் ஆவணங்களில் இவர் வடலூர் வள்ளலாரின் சிஷ்யர் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. பலர் இவர் வள்ளலாரின் மறு அவதாரம் என்று கருதுகின்றனர்.

சுவாமிகள் நடத்திய பைரவ பூஜைகள் புதுமையானதும் உலகில் இதுவரை கண்டிராததுமாகும். வடை, பாயசத்துடன் நூற்றுக்கணக்கான இலைகளில் விருந்து பரிமாறச் சொல்வார். சுவாமிகள சற்று நேரம் வெளியில் சென்ற பிறகு குரல் கொடுத்தவுடன் நூற்றுக்கணக்கான நாய்கள் எங்கிருந்தோ திடீரென திரண்டு வரும். அவர் கட்டளைகளுக்கேற்ப, குளத்தில் மூழ்கி அமைதியாக தனித்தனி இலைகளில் சாப்பிட்டு, அவரது வந்தனத்தை ஏற்றுக்கொண்டு நொடியல் மாயமாய் மறைந்து சென்றுவிடும் போட்ட இலைகளின் எண்ணிக்கையும் சமமாக இருக்கும். கூடவோ, குறையவோ செய்யாது.

இதை சாந்தானந்த சுவாமிகள் பெருமையுடன் நினைவு கூர்ந்துள்ளார். அரிது, அரிது மானிடராய் பிறத்தல் அரிது. மனிதர்களாகிய நமக்கு இதற்குமுன் எண்ணற்ற பிறவிகள் இருந்துள்ளன. புல், புழு, பூச்சி பறவை, விலங்கு என்ற வரிசையின் இறுதியில் மனிதப்பிறவி கிட்டுகிறது. பிறந்த கோடானகோடி மனிதர்களில் புண்ணிய ஆத்மாக்கள் மட்டும் தெரு நாய்களாக பிறவி எடுக்கிறார்கள். செய்த சிறு பிழைகளுக்கு கடன் தீர்க்கும் வகையில் 10,12 ஆண்டுகள்

இந்த நாய் வாழ்க்கை. இதுவே அவர்களுக்கு கடைசிப் பிறவியாகும். இதன் பின்னர் அப்புனித ஆத்மா இறைவனுடன் இரண்டறக் கலந்து விடும். இதுவே பைரவ வழிபாட்டின் தத்துவ விளக்கமாகும்.

பாடகச்சேரிக்கு செல்லும் வழி கும்பகோணம் மன்னார்குடி சாலையில் நான்கு கி.மீ. தொலையில் வலங்கைமான் அருகில் வெட்டாற்றங்கரையில் பாடகச்சேரி என்னும் கிராமம் உள்ளது. பஸ் நிறுத்தத்திலிருந்து சுமார் இரண்டு கி.மீ. தூரம் பாடகச்சேரி கிராமத்துக்கு நடந்து தான் செல்ல வேண்டும். பஸ் வசதி இல்லை. ஆட்டோ, கார் செல்லலாம்.

57. சீலவதி அம்மையார்

மயிலாடுதுறையில் இருந்து சுமார் 3 கிமீட்டர் தூரத்தில் காவிரியின் வடக்குபகுதியில் உத்திரமாயூரத்தைச் சேர்ந்த காணிமடம் என்று சொல்லுகின்ற கழூக்கானி முட்டம் என்ற கிராமம் உள்ளது. இங்கு ஒரு சிவன் கோயில் உள்ளது. அங்கு வீற்றிருக்கும் சிவபெருமான் அருள்மிகு கருணைபுரீஸ்வரர், இதன் எதிரே ஒரு அக்ரஹாரம் உள்ளது. அங்கே சீலாவதி என்ற கைம்பெண் அக்ரஹாரத்தில் வீட்டு சேவை செய்து வரும் வருமானத்தைக் கொண்டு தன் மகனுடன் வாழ்ந்து வந்தாள் சீலாவதி சிவபெருமானிடம் ஆழ்ந்த பற்றுக் கொண்டவள், ஒரு துறவிக்கு உணவளித்த பிறகுதான் அவளும், அவன் மகனும் உணவருந்துவார்கள். சீலாவதி துறவிக்கு உணவு கொடுக்கும் பழக்கம் முற்றிலும் மாறுபட்டதாகும். சுத்தமான உணவை துறவிகளுக்கு பரிமாறுவாள். அவர்கள் உணவு ஏற்க மறுத்தால் அருகே ஒரு உலக்கையை காட்டி இதோ இருக்கு பார் உலக்கை உலக்கையாலேயே உன்னை அடிப்பேன் சாப்பிடு, என்று போலியாக மிரட்டுவாள். விஷயம் தெரிந்த துறவிகள் சிரித்துக்



கொண்டே உணவு அருந்துவார்கள் ஒருசமயம் சிவபெருமான் மற்றும் சிறுத்தொண்ட நாயனார் இருவரும் துறவியர் வேடத்தில் வந்து உணவு கேட்பார்கள் அப்போது சிவபெருமானின் திருவிளையாடலால் சீலவதியின் மகன் அந.த உணவை முன்பே சாப்பிட அமர்ந்தார் அப்போது அங்கு வந்த சீலவதி கடும் கோபம் கொண்டு தன் மகனை உலக்கையால் அடித்துக் கொன்றுவிடுகிறார். துறவி சாப்பிடும் முன் சாப்பிட்டு விட்டானே என்ற எண்ணத்தில் அதைச் செய்தார். இறுதியில் சிவபெருமான் காட்சியளித்து அவர்தம் மகனையும் உயிர்ப்பித்து கைலாயத்திற்கு வா என சீலவதியை அழைத்தார், ஆனால் சீலவதியோ தான் மட்டும் அல்ல அங்குள்ள அனைவருக்கும் முக்தி கொடுக்க வேண்டினார் அவ்வாறே இறைவனும் அங்கு ஒரு பூலோக கைலாயத்தை உண்டாக்கி அந்த கழுகான முட்டம் என்ற பகுதிக்கே முக்தி கொடுத்தார்.

58. நேச நாயனார்

அறுபத்து மூன்று நாயன்மார்களில் நேசநாயனார் மயிலாடுதுறையில் பலகாலம் இருந்து திருப்பணி செய்து, பணியிலேயே பகவாணை கண்ட பெரிய ஞானியாவார். நேசநாயனார் ஆந்திர மாநிலத்தில் காம்பீலி என்ற நகரத்தில் சாலியர் குலத்தில் தோன்றினார். இவர் நெசவாளர் சமூகத்தைச் சேர்ந்தவர். மயிலாடுதுறையில் கூறைநாடு என்ற பகுதியில் திருமணத்திற்காக மணப்பெண்ணுக்கு கூறை சேலை நெய்து கொடுக்கின்ற சாலியர்கள் என்ற மக்கள் நிறைந்து காணப்பட்டனர். நேசநாயனார் இந்த பகுதியில் இருந்தபோது, ஏழை மக்களுக்கு ஆடைகளும், சூளும் (அரைஞான் கயிறுக்குப் பதிலாக அணிவது) கோவணமும் இலவசமாக செய்து கொடுத்து வந்தார். குறிப்பாக சிவனடியார்கள் வேண்டும் போதெல்லாம் அன்பாக கொடுப்பார். நேசநாயனார் எப்போது பார்த்தாலும் தாரணையாக சிவபஞ்சாட்சரத்தை அதாவது ஓம் நமச்சிவாய என்ற ஐந்தெழுத்தைத் தன் ஜீவனில் வைத்து மகாஜெபம் செய்து கொண்டே இருப்பார். அன்பே சிவம், அதை



உணர்ந்தார் நேசநாயனார். தவத்தால் அன்பாகி நின்றார் நேசநாயனார், அன்பாகி அவர் நின்றதை அரன் அறிந்தார். அப்படியே அணைத்துக்கொண்டார். சிவபெருமானும் நேசத்தை விரும்புகிறார். நேசத்தைக் கண்டார். அவரே நேசநாயனாராக விளங்குகிறார்.

59. குதம்பைச் சித்தர்

குதம்பைச் சித்தர் ஒரு சிவயோகி, சிறந்த மகா சித்தர் உலகம் வேண்டாம் என்று பூரணமாக விலக்கி, காட்டிற்குச் சென்று கடும் தவம் புரிந்தவர். அகலமான அத்தி மரப் பொந்தில் அமர்ந்து கடவுளைச் சிந்தித்தார். வெட்டவெளிதான் தெய்வம் என்று பறைசாற்றியவர், குதம்பைச் சித்தர். தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர் யாதவ குலத்தில் கோபாலன் என்பவரும் அவர்தம் மனைவியும் சிறந்த தம்பதிகளாக நற்பண்புகளோடு வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு பிறந்தவரே குதம்பைச் சித்தர். சென்ற பிறவியில் அம்பிகையை வழிப்பட்டு அம்பிகையிடம் ஐக்கியமான இக்குழந்தை சக்தி அம்சத்தோடு தோற்றம் கொடுத்தது. அன்னை இவருக்கு குதம்பை என்ற பெண்கள் காதில் அணியும் அணிகலனை அணிவித்து பெண்ணுக்குரிய ஆடையை உடுத்தி பெண்ணாகவே பார்த்தார். குதம்பைச் சித்தர். தன் குலப்பணிகளைச் செய்துவிட்டு மிகசாந்தமாக தன்வீட்டில் தவத்தில் ஆழ்ந்துவிடுவார். இவரது இளமைகாலத்தில் ஒரு சித்தயோகி இவரைத் தேடிவந்து பிரம்ம ரகசியங்களை சொல்லிக் கொடுத்து லலாடத்தை திறந்தார்.


மகான் குதம்பை சித்தர்

அதன்பின் குதம்பைச் சித்தரானார். காட்டிற்கு வந்து ஒரு அத்திமரத்தில் நீண்ட காலம் செய்தார். இறைவனின் ஆணையின்பேரில் தனது ஆன்மீக அனுபவங்களை பாடலாக வெளியிட்டார்.

ஞான சூத்திரம் என்று பதினெட்டு பாடல்களையும் அதற்கு அப்பால் 246 பாடல்களையும் அருளியுள்ளார். இவர் வாலை மனோன்மணியை வணங்கியவர். மயிலாடுதுறையில் பலகாலம் தங்கியிருக்கிறார். மயூரநாதர் திருக்கோயில் பல ஆண்டுகள் தவம் புரிந்திருக்கிறார். மக்களுக்கு உதவிகள் செய்திருக்கிறார். அந்த மயூரநாதர் திருக்கோயிலில் குதம்பை சித்தரின் சமாதி உள்ளது. மூல விக்கிரத்தை சுற்றி வரும்போது உள்ளே தட்சிணாமூர்த்தி சந்நிதி உள்ளது. அதன் அருகே குதம்பைச் சித்தர் ஆருட சமாதி பெற்றார். அந்த சமாதியில் வெள்ளைப் பிள்ளையார் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார்.

60. தன்வந்திரி

தன்வந்திரி ஒரு சித்தர். அவர் ஆயுர்வேதத்தின் தந்தை என்றால் அது மிகையாகாது. இவர் மகாவிஷ்ணுவின் அவதாரம். வடநாட்டிலிருந்து தென்னாட்டிற்கு வந்ததாக ஒரு செய்தி வந்துள்ளது. அவர் அருளிய நூல்கள் சாரங்க சம்ஹிதை அவர் பிறக்கும் போது ஒரு கையில் அமிர்த கலசமும், இன்னொரு கையில் ஒரு மூலிகையின் துண்டோடும் பிறந்தார். இவர் ஆயுர்வேத மருத்துவத்தின் ஞானி. ஐந்தாவது வேதம் எனப்படும் ஆயுர்வேதம் என்பது ஒரு மருத்துவமாகும். இது மனித உயிர்களை நோய்களிலிருந்தும் மரணத்திலிருந்தும் காப்பாற்றுகிறது. இதில் நிச்சயமாக பக்க விளைவுகள் கிடையாது. ஆயுர்வேதத்தை முழுமையாக தெரிந்த தன்வந்திரி பகவான் ஒரு தெய்வமாகும். ஆயுவேத முறைகளைக் கையாண்டாலே ஒரு மனிதன் பிரம்ம ஞானத்தில் சென்று வெற்றியடைய முடியும். இவரின் சீடர்கள் சுஸ்ருதா, ஓலைத்தேவர் போன்றோர் இவரிடம் நேரடியாக மருத்துவமுறையை கற்றுக்கொண்டார். இதில் சுஸ்ருதா அறுவை சிகிச்சையில் மிகவும் திறமையானவர்.



தன்வந்திரி பகவானின் சமாதி நாகை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோயிலின் உள்ளே சிவபெருமானுக்கு பின்புறத்தில் 5 லிங்கங்களுக்கு அப்பால் உள்ளது. இன்றும் மக்கள் வைத்தீஸ்வரன் கோயிலுக்கு சென்று இவரை வணங்கி தங்களின் உடலில், உள்ள உபாதைகளை நீக்கிக்கொள்வதை காணலாம்.

61. குருஞான சம்மந்த தேசிக சுவாமிகள்

தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீலஸ்ரீ குரு ஞான சம்மந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஸ்ரீ வில்லிபுத்தூரில் சுப்பிரமணியப் பிள்ளை என்பவருக்கும் மீனாட்சி அம்மையாருக்கும் ஆண்மகவாக திரு அவதாரம் செய்தருளினார். இவரது காலம் கி.பி 1561-க்கும் கி.பி 1600-க்கும் இடைப்பட்டது. இவரின் இயற்பெயர் ஞான சம்மந்தன் என்பதாகும். பதினாறு வயதிற்குள் தமிழ்மொழி, வடமொழி இரண்டிலும் பேராற்றல் பெற்று, ஆகம சாத்திரங்கள் எல்லாம் கற்றுத் தெளிந்து சிவயோகம் பயின்றது. பெற்றோர்களுடன் மதுரைக்கு சென்று சோமசுந்தரக் கடவுளையும், மீனாட்சி அம்மையாரையும் வழிபடச் சென்றபோது இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு, மதுரையிலேயே தங்கி இறைவனை வணங்கிவந்தார். ஒரு நாள் சிவபெருமான் இவரது கனவில் காட்சி கொடுத்து பொற்றாமரைக் குளத்தில் ஈசானிய மூலையில் தான் சிவலிங்க ரூபத்தில் கங்கைக்குள் இருப்பதை வெளிப்படுத்தினார். அதைத் தொடர்ந்து

தருமை ஆதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

ஞானசம்பந்தர் ஈசானிய மூலையில் ஒரு பெட்டகத்தை கண்டெடுத்தார்.

அந்த சிவலிங்கத்தை தன் இருப்பிடத்தில் வைத்து வணங்கிவந்தார். இறைவன் மீண்டும் கனவில் தோன்றி திருவாரூர் சென்று குரு ஞானப்ரகாச தேசிகரிடம் சிவஞானோபதேசம் பெறுமாறு ஆணைபிறப்பித்தார். அதன்படியே தனது குருநாதரை தரிசித்து உபதேசம் பெற்று சொக்கலிங்க பூஜை செய்து வந்தார். பின்னர் தனது குருநாதரின் ஆணைப்படி திருவாரூருக்கு வடக்கே மயிலாடுதுறை அருகே சுமார் நான்கு கி.மி தொலைவில் உள்ள தருமபுரம் என்ற ஊரில் சென்று அங்குள்ள பக்குவிகளுக்கு ஞானோபதேசம் செய்து பீடாதிபதியாக சிவதொண்டு ஆற்றிவரலானார். உரிய காலத்தில் இறைவனிடமிருந்து குறிப்பு கிடைத்தவுடன் தனது வாரிசாக ஸ்ரீ ஆனந்த பரவச தேசிக சுவாமிகளை நியமித்து பேரமைதி பூண்டு தருமைபுர ஆதினத்திலே ஜீவசமாதி மேற்கொண்டார்.

62. தீப்பாய்ந்தாள் அம்மன்

ஒரு காலத்தில் ஒரு பெண் தீயில் பாய்ந்தாள், அவளை தீப்பாய்ந்த அம்மன் என்று பொதுமக்கள் அழைக்கின்றனர். அவளின் ஆற்றலை அறிந்து அவளை உணர்ந்து அவளுக்கென்று ஒரு கோயில் பொதுமக்களாலே எழுப்பப்பட்டுள்ளது.

தீப்பாய்ந்தாள் அம்மனும், அவளின் கணவரும் மாயூரத்திற்கு வந்து கெங்க மேட்டுத் தெருவில் தங்கி இல்லறம் நடத்தி வந்தனர். ஒருவருக்கொருவர் பேரன்பு கொண்டு வாழ்ந்தனர். உலக உணர்வு, உலக உறவு, உலக விழிப்பிலிருந்து விலகிய இவர்கள் தெய்வம் ஒன்றையே நம்பி சரணாகதியடைந்து அதையே சாஸ்வதமாகக் கொண்டு இல்லறத்தை நல்லறமாக மாற்றம் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். இந்நிலையில் தீப்பாய்ந்தாள் அம்மனுடைய மணவாளனுக்கு அந்தகம் வரும் அந்தி நேரம் வந்தது, வந்த அது அம்மாவுடைய கணவரின் ஆத்மாவை அழைத்துக்கொண்டு சென்றது. அவளின் கணவனின் உடலை

ருத்ரபூமியில் தகனம் செய்தார்கள். அப்போது தீப்பாய்ந்தாள் பெண், எரிந்து கொண்டிருந்த தன் கணவனின் சிதையில், நெருப்பில் அப்படியே பாய்ந்தாள். மண்ணுலகில் இருந்து விண்ணுலகம் சென்றாள். அங்கு இருந்தவர்கள் எல்லாம் அவளை நெருப்பிலிருந்து பிரிக்க எவ்வளவோ முயற்சி செய்தார்கள் எல்லாம் தோற்றுவிட்டது. மறுநாள் காலையில் சாம்பலை எடுக்க எல்லோரும் வந்தபோது அந்த இடத்தில் இரண்டு சிலைகள் இருந்தன. இரண்டும் சுயம்பு கல் சிலையாகும். ஆண், பெண் சிலைகள் சிலநாட்களுக்கு பிறகு அந்த சிலையை வைத்து ஒரு சிறு கொட்டகை வைத்து மக்கள் வணங்கி வந்தார்கள். அந்த தீப்பாய்ந்தாள் அம்மன், எல்லோருடைய கவலைகளை நீக்குகிறாள் இவள் ஏகசொரூபி தெய்வம். இன்று அது அழகான திருக்கோயிலாக உள்ளது. இந்த தீப்பாய்ந்த நிகழ்வு 1892 ஆம் ஆண்டு மாசி மாதத்தில் ஒரு திங்கட்கிழமை எனப் பெரியோர்கள் பேசிக் கொள்கிறார்கள்.

63. பாய்கட்டி சுவாமிகள்

பாய்கட்டி சுவாமிகள் மயிலாடுதுறையில் பல ஆண்டுகள் தான் யார் என்று காட்டிக் கொள்ளாது விளங்கிய பரமானந்த ஆத்ம சொரூபம். தன் இடுப்பில் பாயைக் கட்டிக்கொண்டிருந்த காரணத்தால் அவரை பாய் கட்டிசுவாமிகள் என்று மக்கள் அழைத்தனர் பாய்கட்டி சுவாமிகள் மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனை அருகே வசித்து வந்துள்ளார். இவரது காலம் 19-ம் நூற்றாண்டின் கடைசிப்பகுதி மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் சுவாமிகளை வந்து பார்த்துப் போவது வழக்கம் சுவாமிகளும் மருந்து கொடுப்பார்கள். தான் எதைப் பார்க்கிறாரோ, அங்கு என்ன கிடைக்கிறதோ அதை எடுத்துக் கொடுப்பார். மண்ணைக் கொடுப்பார், வேப்பிலையைக் கொடுப்பார். நோய்கள் குணமாகிவிடும். அதனால் அங்கு வந்தவர்கள் எல்லாம் சுவாமிகளின் மருந்தைச் சாப்பிட்டார்கள். சுவாமிகள் மேல் எல்லோரும் தீராத அன்பு கொண்டனர். பாய்கட்டிச் சுவாமிகள் திருவோடு வைத்திருந்தார். அதில் உணவு ஏற்பது வழக்கம். உணவு எதுவும் வரவில்லை என்றால்

அப்படியே உணவில்லாது இருப்பார். புறநிலையில் சுவாமிகளை சுற்றி தேஜஸ் ஓஜஸ் என்ற இரு சக்திகளும் சதா சர்வ காலம் வெளிப்பட்டுக் கொண்டு இருந்தன. அகநிலையில் அவர் தெய்வ வடிவம் பெற்றிருந்தார். ஓங்கார வடிவம் கொண்டிருந்தார். நீ நல்லா இருப்பா. நீ நல்லா இருப்பா என்று ஆசிர்வாதம் செய்வார். சுவாமிகளின் சமாதி அரசு மருத்துவமனையின் சுற்று மதிற்சுவருக்கு உள்ளேயே ஒரு பதினைந்து அடி தூரத்தில் உள்ளது. இங்கு சமாதி மேல் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. நித்திய வழிபாடும் ஆண்டுதோறும் குருபூஜை சீரும் சிறப்புமாக நடைபெற்று வருகிறது. சுவாமிகள் இறைவனோடு இரண்டறக் கலந்த ஆண்டு பெரும்பாலும் 1907-க்குள் இருக்கலாம் என்று செவிவழிச் செய்திகள் செப்புகின்றன.

64. அபயாம்பிகை வளர்த்த கிருஷ்ணசாமி

மயிலாடுதுறைக்குக் கீழ் பகுதியில் நல்லாத்துக்குடி என்ற கிராமம் உள்ளது. இந்த கிராமத்தில் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பு அந்தணர் குலத்தில் கிருஷ்ணசாமி அவதரித்தார். சிறுவயதிலேயே பெற்ற தாய், தந்தையை இழந்து மற்ற உறவுகளால் வளர்க்கப்பட்டார். அம்மாவை இழந்த இவருக்கு துன்பம் மேலிட்டது. எப்போது பார்த்தாலும் அம்மா அம்மா என்று அழைத்தவண்ணமாய் அந்தக் குழந்தை இருந்தது. இந்தக் குழந்தையின் அம்மாவாக மயிலாடுதுறையில் கோயில் கொண்டிருக்கும் அன்னை அபயாம்பிகையே நேரில் தோன்றி குழந்தையின் அழுகையை நிறுத்தி சுவையாக உணவை கொடுத்துவிட்டு மறைந்தது. மறுபடியும் குழந்தை அழுதபோது அன்னை தோன்றி, குழுந்தையை ஆறுதல்படுத்தி திருக்கோயிலில்லுள்ள தன்னுடைய சந்நிதிக்கு அழைத்து வந்து மறைந்தார். அன்றிலிருந்து தினமும் மயூரநாதர் ஆலயத்திற்குவந்து சுவாமியையும், அம்பாளையும் தரிசித்து வருவது வழக்கமாயிற்று ஒருநாள் அர்த்தஜாம பூஜைக்கு சென்று


கொண்டிருந்த சுவாமி கிருஷ்ணசாமிகள் அம்பிகையைத் தரிசித்து விட்டுத் தன் இருப்பிடம் நோக்கி வரத்தொடங்கினார். இருட்டில் கோபுரவாயிலுக்கருகே கால் இடறிக் கீழே விழுந்தார். காலில் காயம் ஏற்பட்டது.

வலி தாங்க முடியாமல் அம்மா அம்மா என்று அழுதார். அதைக்கேட்ட அம்பிகை ஒரு கையில் ஒரு விளக்கை கொண்டு வந்து கிருஷ்ணசாமிக்கு வழிகாட்டி அவருடைய வலியை நீக்கினார் அதைவிட அதிசயம் என்னவென்றால் தினந்தோறும் சுவாமிகள் அம்பிகையைத் தரிசித்துவிட்டு இரவில் திரும்பி வரும் பொழுது ஒரு கைவிளக்கு தானே வந்து அவருக்கு வழிகாட்டி கொண்டு செல்லும். இதைக் கண்ட அவ்வூர் மக்கள் மனமார வணங்கினார்கள். அம்பிகையின் அருளால் கவிபாடத் தொடங்கினார். அம்பிகையின் மேல் நூறு பாடல்களைப் பாடினார். அதற்கு அபாயம்பிகை சதகம் என்று திருநாமம் சூட்டப்பட்டது. அபாயம்பிகை சந்நிதியில் அந்த பாடல்கள் கல்வெட்டில் நிறுவப்பட்டுள்ளது. தன் வாழ்நாள் முழுவதையுமே அம்பிகைக்கு அர்ப்பணித்து வணங்கிய கிருஷ்ணசாமி அவருடைய திருவடியிலேயே தன்னை சமர்ப்பித்து வெட்டவெளியில் ஜோதி சொருபமானார்.

65. பால் சுவாமிகள்

மயிலாடுதுறையில் பன்னெடுங்காலமாய் இருந்து தன் தவசக்தியை அப்பகுதி முழுதும் பரவச் செய்து ஏகாந்தப் பெருவெளியில் இனிய இன்பத்தோடு காட்சி தந்துக் கொண்டிருந்தார் பால் சுவாமிகள். இவரது பெற்றோர் வைத்த பெயர் நாரயணசாமி. அவர் தினமும் ஒரு லிட்டர் பசும்பால் மட்டுமே அருந்துவார். அதுவே அவருக்கு அன்றாட உணவாகும்.

பாலருந்தி முப்பாலைக் கடந்தவர். அதற்கு அப்பால் பஞ்ச அமுதத்தைப் பாலாக உண்டார். இவர் ஒரு சிறந்த சித்த வைத்தியர். குருமுப்பு முடித்தவர். பூ நீரைக் கண்டவர். செயநீரைக் குடித்தவர். மௌனவித்தை கற்றவர் பேசினால் பிராணசுகம் போய்விடும் என்பார். இவர் குஷ்ட ரோகங்களைக் குணப்படுத்தும் மருத்துவத்தில் உச்சிமுறை மருத்துவத்தை அறிந்தவர். எட்டு வகையான குஷ்டங்கள் உள்ளன. அத்தனையும் குணப்படுத்தும் சீவனருள் பெற்றவர். குஷ்டரோகிகளுக்கு சுவாமிகள் ஒரு மருந்தைக் கொடுப்பார்.



பிறகு பக்கத்திலுள்ள ஓட குளத்திற்குச் சென்று குளித்து விட்டு வரச்சொல்வார். இன்றும் அக்குளத்தை நாம் சென்று பார்க்கலாம். பால்சாமி சித்தர் அந்தக் குளத்தில் தன் தவசக்தி, மந்திரசக்தியை கலந்துள்ளார். சுவாமிகளின் சமாதி மயிலாடுதுறை கூறைநாட்டுப் பகுதியில் திருமஞ்ன வீதியில் காவிக்கரைக்கு அருகேயுள்ள ரோட்டரி மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு எதிரே உள்ளது. பால்சுவாமிகள் 1920-ஆம் ஆண்டு மார்கழி மாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று மகாசமாதியடைந்தார். சுவாமிகளின் சமாதிக்கு நித்திய பூசைகளும், வருடந்தோறும் குருபூஜையும் சிறப்பாக தொடர்ந்து நடைபெற்றுவருகின்றது.

66. சுடுகாட்டுச் சுவாமிகள்

சுடுகாட்டுச்சுவாமிகளின் இயற்பெயர் சுப்பா செட்டியார் என்பதாகும். பிறவியிலேயே திருவுற்று எதுவும் வேண்டாம் என்று எல்லாவற்றையும் உதறிப் பிரம்மஞான நிலைக்கு வந்தார். சுவாமிகள் முதலில் சென்னையில் உள்ள திருவெற்றியூர், மந்தைவெளி, அந்தியூர் ஆகிய இடங்களில் சுற்றிக் கொண்டிருந்தார். இவர் மனோன்மணியை வணங்கினார். அதனால் முக்தி கிடைத்தது. பிற்காலத்தில் சுவாமிகள் மயிலாடுதுறையில் உள்ள திம்மண்ண நாயக்கர் சுடுகாட்டில் பல ஆண்டுகள் தவம் செய்தார். இங்கு ருத்ர ஜெபம், பஞ்சாட்சரஜெபம் தியானம் மற்ற ரகசிய தந்திரங்களை கற்றார். யாராவது நோய் என்று வந்தால் சிறிது மண்ணை எடுத்து அதில் தன் எச்சிலைத் துப்பி மருந்தாகக் கொடுப்பார் நோய் அவர்களை விட்டுப் போய்விடும்.

சுவாமிகள் நவகண்டயோகம் கைவல்யமாகி இருந்தது. அறிந்தவர் ஒன்பது பகுதியாகப் பிரித்துக் கடவுளிடம் யோகம் செய்வதுதான் நவகண்டயோகம். சுவாமிகள் சுடுகாட்டில் செய்த

காரணத்தால் சுடுகாட்டு சுவாமிகள் என்று அழைக்கப்பட்டார். ஒரு சமயம் காவல்துறை இவரை கைது செய்து சிறையில் அடைத்தது. சுவாமிகள் சிறையிலிருந்து மறைந்து மீண்டும் தன்னுடைய பகுதிக்கு சென்று விட்டார். இவரின் அற்புத ஆற்றலைக் கண்ட காவல்துறையினர் பயந்துபோய் சுவாமிகளிடம் மன்னிப்புக் கேட்டுச் சென்றார்கள். சுவாமிகளுக்கு ஒரு மடம் மயிலாடுதுறையில் தருமபுரம் சாலையில் 25-ஆம் எண்ணுள்ள இடத்தில் அமைந்துள்ளது. இது ராஜன் தோட்டத்திற்கு எதிரேயுள்ளது. இங்குதான் சுவாமிகளின் சமாதியும் அமைந்துள்ளது. சமாதி மேல் விஸ்வேஸ்வரலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அன்றிலிருந்து இன்றுவரை சுவாமிகளின் குருபூஜை சிறப்பாக நடைபெற்று வருகிறது. சுவாமிகளின் காலம் சுமாராக 1850 முதல் 1930 வரை இருக்கலாம் எனத் தெரிகிறது.

67. ரோட்டு சுவாமிகள்

ரோட்டு சுவாமி என்று அழைக்கப்படும் சுவாமிகளின் இயற்பெயர் ஸ்ரீ சிவராமகிருஷ்ணன். சுவாமிகள் 28.4.1898 ஆம் ஆண்டு மயிலாடுதுறைக்கு மேற்கே குத்தாலத்திற்கு அருகே மாதிரிமங்கலம் என்ற சிற்றூரில் பரத்வாஜ கோத்திரத்தைச் சார்ந்த புண்ணிய தம்பதிகள் ஸ்ரீ சுந்தரேசய்யர்-தர்மசம்வர்த்தினி தம்பதிகளுக்கு மகனாக அவதரித்தார். சுவாமிகள் தனது பள்ளிப்படிப்பை முடித்தபின் சில ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார். அப்போது ஆத்மானுபவ நிலையடைந்து முற்றும் துறந்த துறவியானா இது 1929-இல் நடந்தது. 1930-ஆம் ஆண்டு சுவாமிகள் காரைக்காலுக்கருகேயுள்ள கொல்லுமாங்குடி என்ற ஊருக்கு வந்து சேர்ந்தார்.

சுவாமிகள் பெரும்பாலும் நடந்து கொண்டே இருப்பார். கொல்லுமாங்குடியிலிருந்து கும்பகோணம் இரயில்வே கேட்வரை நடந்து சென்று நடந்தே திரும்புவார். இந்ததூரம் போகவர கிட்டத்தட்ட 90 கி.மீ. இருக்கும். இப்படி நடந்து செல்லும் போது

வழியில் அன்பார்கள் சிலர் காலை உணவு கொடுப்பார்கள். அதை நடந்து கொண்டே சாப்பிடுவார். ஆற்றிலும், சுடுகாட்டிலும் ரோட்டிலும் படுத்திருப்பார். சுவாமிகள் உண்ணும் உணவை அறைபடிக்குமேல் ஆற்றில் போட்டுவிடுவார் காரணம் கேட்டால் முப்பத்து முக்கோடி தேவர்களும் 48 ஆயிரம் ரிஷிகளும், கின்னார்கள், பிதிர்கள், பெரியவாள் எல்லாம் ஆற்றில் இருக்கிறார்கள் அதற்காகப் போடுகிறேன் என்பார். அக்காலத்தின் மக்களின் பிரச்சினைகள், நோய்களை சுவாமிகள் தீர்த்துவைத்துள்ளார். சுவாமிகள் 1974-ஆம் ஆண்டு தனது சீடர் ஸ்ரீ கணபதியாபிள்ளையின் மடிமீது இருந்தவாறு பிரம்ம சாயுசயம் அடைந்தார்கள். சுவாமிகளின் சமாதி மாதிரிமங்கலம் என்ற அவரது பிறந்த ஊரில் கட்டப்பட்டு அதிஷ்டாடம் அமைக்கப்பட்டு நித்திய பூஜையும், குரு பூஜையும் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

68. யோக அபிராமி அம்மையார்

அபிராமி அம்மையார் ஒரு சிறந்த ஆத்மஞானி. கடும்தவம் புரிந்தவர். அம்மையார் 1848-ஆம் ஆண்டு மயிலாடுதுறையில் ஐயாறப்பர் கோயிலின் தெற்குத் தெருவில் சைவவேளாளர் குடும்பத்தில் உதித்தவர் பெற்றோர் முத்துசாமிபிள்ளை, முத்தாச்சி அம்மையார் ஆவர். அபிராமி அன்னைக்கு திருமணம் நடைபெற்றது. அன்னைக்கு 20 வயதாக இருக்கும் போது அவரது கணவர் சொக்கலிங்கபிள்ளை இயற்கை எய்தினார். பின்பு கும்பகோணத்தை விட்டு மயிலாடுதுறையில் உள்ள தாய் தந்தையர் வீட்டிற்கு வந்தார். இங்குதான் அன்னையின் ஆத்மசாதனை தொடங்கியது. இறைவனே இவருக்கு துறவு கொடுத்துவிட்டார். பெற்றோர் வீட்டில் ஒரு அறையை தனக்கென எடுத்துக்கொண்டார். அபிராமி அம்மனின் சிலையைத் தன் அறையில் வழிபடும் தெய்வமாக வைத்தார். 12 ஆண்டுகள் அவ்வறையை விட்டு வரவில்லை. கடும்தவம் புரிந்தார். அபிராமிஅம்மையார் மருத்துவதுறையிலும் விஷக்கடி நீக்கும்

மந்திரங்கள் எந்திரங்கள் போன்றவற்றில் சிறந்து விளங்கினார். அன்னைக்கு மிகவும் பிடித்தது கருடதரிசனமாகும். தரிசனத்திற்கு பிறகே அன்னையார் உணவு அருந்துவார். ஒருசமயம் அன்னையை ஒரு நல்ல பாம்பு கடித்தது. ரத்தம் பீறிட்டு வந்தது. அன்னை யாரும் அழவேண்டாம். இதனால் எந்த ஆபத்தும் எனக்கு இல்லை என்றார். அந்த விஷத்திற்கு தானே மருந்தளித்துக்கொண்டார். மறுநாள் அவர் படுக்கையில் எந்த பாம்பு கடித்ததோ அதே பாம்பு மயக்கத்தோடு இருந்தது. சற்று நேரத்தில் இறந்துவிட்டது. இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான் மக்கள் அன்னையின் சித்தியையும் வல்லயையும் புரிந்து கொண்டார்கள். அபிராமி அம்மையார் 1944 ஆம் ஆண்டு சமாதி அடைந்தார். அன்னையின் சமாதி மாயூரத்தில் கச்சேரி வீதியில் ஸ்ரீ தண்டபாணிசுவாமி கோயிலின் அடியில் அமைக்கப்பட்டு நித்திய பூஜையும், குருபூஜையும் நடைபெற்று வருகின்றது.

69. சங்கரானந்த சுவாமிகள்

சங்கரானந்த சுவாமிகளுக்கு பெற்றோர் வைத்த நாமம் பாலசுப்ரமணியம் என்பதாகும். அந்தணர் குலத்தில் உதித்த இவர் ஸ்ரீவத்ள கோத்திரத்தைச் சார்ந்தவர். சுவாமிகளின் சொந்த ஊர் மயிலாடுதுறைக்கு அருகில் உள்ள கோழிகுத்தி என்ற கிராமமாகும். சுவாமிகள் பி.ஏ.பி.எல் படித்து வழக்கறிஞர் தொழிலை மேற்கொண்டார். வழக்கறிஞர் தொழிலிலே இருந்தும் இவருடைய உள்ளம் ஞானக்கதிர் வீச்சால் ஆன்மீகத்தில் பக்குவம் பெற்றது. துறவிகளில் ஒரு பிரிவான சரஸ்வதி என்ற பிரிவை சேர்ந்தவர் ஸ்ரீ சங்கரானந்த சரஸ்வதி சுவாமிகள் அங்கங்கு உள்ள மகான்களிடம் உரையாடி ஆனந்தரூபியாய் வயது முதிர்ந்த காலத்தில் கும்பகோணம் வந்து தங்கி ஆன்மீக அன்பர்களுக்கு அத்வைத சாஸ்திரங்களின் உண்மை கருத்தை போதித்து வந்தார். சங்கரானந்த சுவாமிகள் சிறந்த அத்வைதி. எல்லாம் பிரம்மம் என்ற வேதாந்தக் கருத்தின் அடிப்படையில் எல்லாம் ஒன்றே ஏகம் என்ற தத்துவத்தில் பயுற்சி பெற்று பிரம்மஞானம் பேருணர்வு உந்தப் பெற்றவராய் மகாசிவ

சாயுச்யமடைந்த சுவாமிகளாவார். சுவாமிகள் 1959-ஆம் ஆண்டு சித்திபெற்றார். சித்தியான இடம் மயிலாடுதுறை சுவாமிகளின் சமாதி மயிலாடுதுறையில் நகர விஜித்திராயர் தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளி வளாகத்தில் அமைந்துள்ளது.

70. இராமானந்த சுவாமிகள்

ஸ்ரீ இராமானந்தா சுவாமிகள் 1894-ஆம் ஆண்டு மயிலாடுதுறை அருகே உள்ள மாப்படுகை என்ற பகுதியில் ராமாபுரம் அக்ரஹாரம் என்ற இடத்தில் அவதரித்தார். பெற்றோர் சுப்பிரமணி-ஜானகியம்மாள் ஆவார்கள். சுவாமிகளின் இயற்பெயர் வைத்திய நாதசுவாமி ஆகும். வைத்திய நாத சுவாமிகள் தியாகராஜா கல்லூரியில் படித்து பி.ஏ. பட்டம் பெற்றவர், திருக்கோயில்களைப் பற்றியும் வைதீக கர்மாக்களைப் பற்றியும், பல மகான்களைப் பற்றியும் நிறைய நூல்களை சுவாமிகள எழுதியுள்ளார். இராமானந்த சுவாமிகள் நூற்று எட்டு ஸ்ரீ இராமர் பட்டாபிஷேகம் செய்தார். நூற்று எட்டு பட்டாபிஷேகம் தொடங்கி முடிக்கும் போது ஸ்ரீ இராமபிரானது நிதர்சனமாக பேரின்பத்தைக் கண்டார் ஆனந்தம் கொண்டார். அதனாலே அவருக்கு இராமானந்த சுவாமிகள் என்ற பெயர் வழங்கியது. சுவாமிகள் சந்நியாசம் பெற்ற பிறகு குடும்பத்தை விட்டு விலகி பல ஆண்டுகாலம் தேசாந்திரம் சென்று விட்டார். சுவாமிகள் 1975-ஆம் ஆண்டு பகவான் திருவடியைச் சேர்ந்தார்.

சுவாமிகளின் சமாதி ராமாபுரம் அக்ரஹாரத்தில் அமைக்கப்பட்டு நித்திய பூஜையும், குரு பூஜையும் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

71. மகா சித்தர்

சற்குரு ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகள் 1904-ஆம் ஆண்டு மே மாதம் 18-ம் தேதி திரோதன ஆண்டு வைகாசி 4-ஆம் தேதி அமாவாசை கார்த்திகை கூடிய ஞாயிறன்று கும்பகோணத்தில் அவதரித்தார். சுவாமிகளின் நூற்றாண்டின் ஜெயந்தி விழாவை முன்னிட்டு மத்திய அரசு சுவாமிகளின் திருவருள் ஆன்மீக வழிபாட்டுதலையும், சேவைகளையும் பாராட்டி சுவாமிகளின் திருவுருவத் தபால் தலையை 15-5-2004 அன்று புதுதில்லி தமிழ்ச் சங்கத்ததில் வெளியிட்டது.

ஓம் ஸ்ரீ சித்தர் சுவாதிகளின் தந்தை இரத்தினசாமி, தாயார் தனலட்சுமி ஆவார். இவர் பள்ளிப்படிப்பை முடித்தவர். மல்யுத்தம், சுருள்கத்தி, பொடிகுச்சி, சிலம்பம் இவைகளில் தேர்ந்தவர். இவரை சட்டாம்பிள்ளை என்று எல்லோரும் அழைப்பார்கள். இவரது மூதாதையர் சிவ சிந்தனையுள்ளவர்கள். இவரது பாட்டனார் 40-வயதில் சுயசந்நியாசம் பெற்றவர். தோட்டத்தில் பர்ணசாலை அமைத்து வில்வ மரத்தருகே அமர்ந்திருப்பார். ஒரு நாளைக்கு ஒரு

வேளைதான் அன்னம் எடுத்துக் கொள்வார். பூரணமௌனம் கொண்டவர் சுவாமிகளின் தந்தையார் இரத்தினசாமி அடிகள் தமது 38-வது வயதில் மனைவியை இழந்த பிறகு வெள்ளாடை அணிந்து துறவறம் மேற்கொண்டார்.

ஒரு சமயம் காட்டுமன்னார் கோயிலில் வேலை பார்த்து வந்த பட்டதாரி ஆசிரியரும் இவரது நெருங்கிய நண்பருமாகிய ராஜம் அய்யர் என்பவர் கடும் வயிற்று வலியால் துன்புற்று பல மருத்துவர்களிடம் சென்று வந்தும் சரியாகாமல் வலி கடுமையாயிற்று. ஒரு நாள் இரவு ராஜம் அய்யர் சோயின் கடுமையைத் தாங்கமுடியாது அழுது அலறி சுவாமிகளிடம் சரணடைந்து அவர் மீதுள்ள அன்பாலும் பாசத்தாலும் அவரைத் திட்டினார். சுவாமிகள் அவரிடம் தெருவிலுள்ள மண்ணைச் சிறிது கொண்டு வரச் சொல்லி அதைத் தம் கையில் எடுத்து சலிப்பது போல் உருட்டி உருட்டி அதை அவரிடம் கொடுத்து சாப்பிடச் சொல்லிவிட்டு தன் அறைக்குச் சென்றுவிட்டார். ராஜம் அய்யர் அந்த மண்ணைச் சாப்பிட்டார். சிறிது நேரத்தில் ஆழ்ந்து உறங்கி காலையில் சுறுசுறுப்பாக நல்ல ஆரோக்கியத்துடன் எழுந்திருந்தார். அன்று முதல் அவருக்கு வயிற்று வலியே வரவில்லை. ஆயிரக்கணக்கான மக்களின் குறைகளை நீக்கி ஏவல், பில்லி சூன்யம் வைப்பு தரித்திரம், பீடை, சாபம் முதலியவைகளை நீக்கி அவர்கள் வாழ்வில் ஆனந்தத்தை மலரச்செய்தார். 31.8.1964 அன்று காலை 7.28 மணிக்கு தனக்கு நடக்கப் போகும் ஜீவ ஐக்கிய தரிசனத்தை 1939-ஆம் ஆண்டு மே மாதமே கண்டார்.

தான்ஜிவ ஐக்கியம் பெறுவதற்கு 3 மாதங்களுக்கு முன்பே அனைவருக்கும் தெரிவித்து விட்டார். இறுதியாக 29.8.1964 சனிக்கிழமை இரவு 7.30-க்கு சிறிது அன்னம் புசித்துவிட்டு சரியாப் போச்சு சரியாப் போச்சு என்று சொல்லிக் கொண்டே தன் கைகளைக் கழுவினார். 31.8.1964 அன்று காலை 7.28 மணிக்கு சுவாமிகளின் சிவ ஆத்மா பரவெளியோடு ஐக்கியமடைந்து தன் பூதவுடன் மறைந்தபோதிலும் ஒளியுடலுடன் அன்பர்களின் இதயக்கமலங்களில் அமர்ந்திருந்து ஓங்கார அருளொளியின் மூலம் வழிகாட்டி அழைத்துச் செல்கிறார்.



இவரது மார்க்கம் ஓங்கார மார்க்கம் உலகப் பேரமைதிக்காகவும் அனைத்து உயிர்களையும் ஆனந்தத்தில் திளைக்க வைப்பதற்காகவும் இவர் பணியாற்றினார். தன் சீடர்களையும் பணியாற்ற வைத்தார். தற்போதைய ஓங்கார ஆசிரமத்தின் தலைவர் தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா அவர்கள் இவரது பிரதம சீடராவர். தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா பாண்டிச்சேரியில் ஆசிரமம் அமைத்துள்ளார்.

108 கஜபூஜை, ஒரே இரவில் ஒரு கோடி சிவபஞ்சாட்சர மகா ஜெபவேள்வி, தென்னகத்தின் முதல் கும்பமேளா ஆகியவைகளை நடத்தியுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் சித்ரா பௌர்ணமியன்று அகண்ட ஓங்காரக் கூட்டு தியானத்தை நடத்தி வருகின்றார்.

ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகள் அதிஷ்டானம்

சுவாமிகளின் அதிஷ்டானம் கும்பகோணம் அருகே உள்ள சீனிவாச நல்லூர் என்ற ஊரில் அமைக்கப்பட்டு நித்திய பூஜைகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இதுதவிர கிழக்குகடற்கரை சாலையில் கல்ப்பாக்கம் அருகே புதுப்பட்டிணம் என்ற ஊரில் ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகளுக்கு திருக்கோயில் எழுப்பபட்டுள்ளது. இங்கு 18 சித்தர்களும் தசமகாவித்தை தெய்வங்களும் அருள்பாவிக்கின்றனர்.

72. பாப்பையா சுவாமிகள்

பொறையாறு

கிழக்கிந்தியக் கம்பெனியின் மூலம் வாணிகம் செய்து ஆங்கிலேயர் நம் நாட்டில் காலூன்ற முயன்ற நேரம் அது. ஆங்கிலேயர்களைப்போல் வேறு சில ஐரோப்பிய நாட்டினரும் இங்கு போட்டியிட்டு அவர்களுக்குள் பலப்பரீட்சை நிகழ்த்திய காலத்தில் கிழக்குக் கடற்கரையில் தரங்கம்பாடிப்பகுதி டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் (கி.பி. 16, 17ஆம் நூற்றாண்டில்) இருந்த காலத்தில்தான் பாப்பையா சுவாமிகள் பொறையாறு பகுதிகளில் நடமாடி அருளாட்சி நிகழ்த்தியுள்ளார்.

சுவாமிகளின் பூர்வாஸ்ரமம் பற்றிய விவரங்கள் எதுவும் தெரியவில்லை ஓரிரு செய்திகளும் செலவிவழிச் செய்திகளே, இன்று சுவாமிகளின் அதிஷ்டான மகிமைகளைப் பார்க்கும்போது சுவாமிகள் ஒரு மகா ஆற்றல் பெற்ற மகானாக இருந்திருக்க வேண்டும். சுவாமிகள் கோரக்கர் வழிவந்தவர் என்றும் சொல்கின்றனர். சுவாமிகள் பிச்சையேற்று வந்த காலத்தில் சிவன்கோவில் பிரசாதத்திற்காகச் சென்றபொழுது அன்றைய தினம் பிரசாத வினியோகம் முடிந்துவிட்டதாகவும்.

சுவாமிகள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் சில பொருள்களும் ஓலைச் சுவடிக் கட்டுக்களும் அந்த அன்பரின் வழிவந்தோர் இல்லத்தில் இருக்கின்றன.

பொறையாறு போக்குவரத்துக் கழகப் பணிமனைக்குக் கிழக்கே பாப்பையா சுவாமிகளின் சமாதிக் கோயில் உள்ளது. இங்கு கிழக்குப் பார்த்த சன்னதி கருவறையுள் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வருகிறது.

மயிலாடுதுறைக் கிழக்கே 35 கி.மீ. தொலைவிலுள்ளது. பொறையாறு நகரம். மயிலாடுதுறையிலிருந்து நிறைய பேருந்து வசதிகள் உள்ளன. சமாதி கோயில் கொரடாச்சேரி ரெயில் நிலையத்துக்கு தெற்கே உள்ள வெண்ணவாசல் அமைந்துள்ளது.

73. ஆலங்குடி சுவாமிகள்

மகான்கள் வரிசையில் ஸ்ரீபாகவத உபன்யாசம் செய்வதையே தம்பிறவிப் பயனாகக் கொண்டவர் ஆலங்குடி சுவாமிகள்.

திருவாரூர் மாவட்டம் முடிகொண்டானை அடுத்து ஆலங்குடியைச் சேர்ந்தவர் அதனல் ஆலங்குடி சுவாமிகள் என்று அழைக்கப்பட்டார். இளம் வயது முதலே ஸ்ரீ பாகவதம் உபன்யாசம் செய்துவந்தார் சுவாமிகள் ஆரம்பத்தில் நிர்வாண கோலத்தில் காட்சியளித்தார்.

ஒருசமயம் கொள்ளிடக்கரை ஊர்களில் ஸ்ரீபாகவதம் உபன்யாசத்தின்போது அடியவர்கள் பலரும் சுவாமிகளிடம் பெண்களும் உபன்யாசம் கேட்க விரும்புகிறனர். சுவாமிகள் அவதூதராக இருப்பதால் வரத் தயங்குகின்றனர் சுவாமிகள் திருவுளங்கொன்டு அவர்களது வேண்டுகோளைச் செவிமடுக்க வேன்டும் என்று வேன்டுதல் விடுத்தனர். அவர்களது வேன்டுகோளை ஏற்ற சுவாமிகள் சில சடங்குகள், சம்பிரதாயங்களை முடித்து திகம்பரராக இருந்த

நிளையிலிருந்து மாறி இடுப்பில் அரையாடை மட்டும் உடுத்த தொடங்கினார் மகா தபசிவும் சந்நியாசியுமான சுவாமிகள் ஸ்ரீ ஸ்வமயம் பிரகாசானந்த சரஸ்வதி சுவாமிகள் என்றே அழைக்கப்பட்டார். இன்றளவும் ஸ்ரீ பாகவத உபன்யாசம் செய்கிறவர்களுக்கு மூல குருவாகவே ஸ்ரீ ஆலங்குடி சுவாமிகள் கருதப்படுகிறார்.

சுவாமிகள் ஸ்ரீ நரசிம்ம உபாசகர் அவரது அதீத ஈடுபாட்டால் சுவாமிகள் 17-05-1935 யுவ வருடம் வைகாசி மாதம் 4-ம் தேதி வெள்ளிக்கிழமை ஸ்ரீ நரசிம்ம ஜெயந்தி அன்றே பரிபூரணமானார்.

74. திருமாளிகைத்தேவர்



திருமாளிகைத்தேவர் ஒரு சிறந்த ஆத்ம சாதகர். திருவிசைப்பா பாடல்களை தந்தவர். பல அதிசயங்களையும், அற்புதங்களையும் செய்தவர். இவர் போகரின் சீடராவார். திருமாளிகைத் தேவரின் ஞான சமாதிக் கோயில் திருவாவடுதுறை ஆதீனத் திருமடத்தில் உள்ளேயே கட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

75. திருமூலர்

திருமூலர் 63 நாயன்மார்களில் ஒருவரும் 18 சித்தரகளில் ஒருவரும் ஆவார். இவர் சிறந்த ஞானியாக விளங்கியவர். இவர் வாழ்ந்த காலம் கி.மு. 5,000 வருடங்களுக்கு முந்தியது. இவர் எழுதிய திருமந்திரம் நூல் 3,000 பாடல்களைக் கொண்டது. இதை சைவத் திருமுறை பன்னிரண்டில் பத்தாவது திருமுறையாக சேர்த்துள்ளனர். இந்நூல் வைத்தியம், யோகம், ஞானம் முதலான பொருள்களைப் பற்றியது.

திருமந்திரம் எழுதிய திருமூலர் திருவாவடுதுறை கோமுக்தீஸ்வரர் கோவிலில் உள்ள அரசமரத்தடியில் சிவயோக நிலையில் அமர்ந்து ஓர் ஆண்டுக்கு ஒரு பாடல் வீதம் 3,000 திருப்பாடல்கள் எழுதினார். எல்லாம் வல்ல பரம்பொருள் அன்பே உருவானவர் என்பதை தம் பாடல்கள் மூலம் விளக்குகிறார்.

திருமூலர் யோகத்தில் அமரந்து கோலத்தில் உள்ள உருவம் கோமுக்தீஸ்வரர் கோவிலில் தனி சந்நதியாக

உள்ளது. அவர் அமரந்த அரசமரம் இன்றும் கோயில் வளாகத்தில் உள்ளது.



திருமூலர் கைலாய மலையல் நந்தி தேவரின் உபதேசத்தைப் பெற்றவர். அட்டமா சித்தியைப் பெற்றவர். கூடுவிட்டு கூடு பாயும் கலையைப் பயின்றவர். அவர் தனது யோக முறையால இறந்து கிடந்த 'மூலன்' என்பவர் உடலில் புகுந்து பசுக்களன் துயரைக களைநதவர். இவர் பல்வேறு இடங்களில் சமாதிநிலை அடைந்ததாக கூறப்படுகிறது.

75. திரு மாளிகைத்தேவர்

திரு மாளிகைத்தேவர் ஒரு சிறந்த ஆத்ம சாதகர். திருவிசைப்பா பாடல்களை தந்தவர். பல அதிசயங்களையும், அற்புதங்களையும் செய்தவர். இவர் போகரின் சீடராவார். திருமாளிகைத் தேவரின் ஞான சமாதிக் கோயில் திருவாவடுதுறை ஆதீனத் திருமடத்தில் உள்ளேயே கட்டப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

குறிப்பு




குறிப்பு



குறிப்பு















Azadi Ka Amrit Mahotsav

@DrTamilisaiGuv @DrTamilisaiGuv tamilisaisoundararajan